AstroVed

மே,2022

மாலை: 3

# சத்வித்யா

மலர்: 31

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



குலவம்சம் தழைக்க பச்சையம்மன் வழிபாடு

செல்வச் செழிப்பு கூடவும் கடன் சுமை குறையவும்

ஸ்ரீ நரசிம்மர் குடிகொண்ட சில ஆலயங்கள்

## பக்தரைப் புரந்தருளும் பாண்டுரங்கன்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான! நினைவுத் திறன் அதிகமாக பரப்ப பட்டதாக இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai

## தனிமையே இனிமை



தமிழகத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புக்கான பொதுத் தேர்வுகள் நெருங்கி விட்டன. பெரும்பாலான மாணவர்கள், கடந்த ஊரடங்கு காலத்தில் ஆன்லைனில் படித்து இப்போதுதான் பள்ளிக்கூடத்தின் படிக்கட்டுகளை மிதித்திருக்கின்றனர்.

இந்த நிலையில், பொதுத் தேர்வுக்கான படிப்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. ஒருசில மாணவர்கள், இதுவரை அலைபேசியை கையில் வைத்துக்கொண்டு, "படித்தது பாதி பார்த்தது மீதி..." விளையாடியதே அதிகம்" என்னும் நிலைக்கு ஆளாகி உள்ளதை அனைவரும் அறிந்திருக்கிறோம்.

மாணவர்கள் தடம் மாறாமல் தங்களின் எதிர்கால நல்வாழ்வு ஒன்றையே கருத்தில் கொண்டு, தங்கள் பாடங்களை சரியாக கற்றுத் தெளிய வேண்டும். எல்லா மாணவர்களின் வீட்டிலும் டிவி, ரேடியோ என எதுவும் இல்லாத தனி அறை கொடுத்து கவனமாக படிக்கும்படி அறிவுறுத்திருப்பார்கள்.

கடந்த கால நினைவுகளை அழித்துவிட்டு, கிடைத்திருக்கின்ற இந்த காலகட்டத்தில் உங்களுக்கு கிடைத்திருக்கின்ற தனி அறையை தவ அறையாக பயன்படுத்தி, சரஸ்வதி தேவியை மனதில் நினைத்து பாடங்களை ஊன்றிப் படியுங்கள். உங்கள் அறிவுக்கு ஒத்த மாணவர்கள் யாரேனும் இருந்தால் தனிமையை விடுத்து கூட்டாக படித்து, படித்ததை பகிர்ந்து கொள்ளுங்கள்.

இல்லையேல் தனியறையில் தளர்வில்லாமல் படியுங்கள்; வெற்றி நிச்சயம்! எதிர்காலம் இனிமையாய் ஏற்றமாய் அமைய வாழ்த்துக்கள்!

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

அன்புடன்
Astroved.com

அன்பு சத்வித்யா வாசகர்களே! இதுவரை இணையதளத்தில் வெளியாகி, எல்லையில்லா ஆன்மீக செய்திகளை அள்ளித் தந்து கொண்டிருக்கும் நமது சத்வித்யா இணையதள மாத இதழ், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் புத்தக வடிவில் உங்கள் கரங்களில் தவழவிருக்கிறது என்பதனை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றென்றும் உங்கள் ஆதரவை வேண்டும், Astroved.com மாத இதழ்

ஆன்மீக விஞ்ஞான
மாத இதழ்
புத்தக வடிவில்
உங்கள் கரங்களில்
**விரைவில்**



# மே மாத காலண்டர் – 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| தொழிலாளர் தினம் 1 | 2 | அட்சய திருதியை 3 | சதுர்த்தி 4 | 5 | 6 | ஷஷ்டி 7 |
| 8 | 9 | 10 | 11 | ஏகாதசி 12 | 13 | பிரதோஷம் 14 |
| பவுர்ணமி 15 | 16 | 17 | 18 | 19 | 20 | ஷஷ்டி 21 |
| 22 | 23 | 24 | 25 | ஏகாதசி 26 | பிரதோஷம் 27 | சிவராத்திரி 28 |
| 29 | அமாவாசை 30 | 31 | | | | |

# ஸ்ரீ நரசிம்மர்
## குடிகொண்ட சில ஆலயங்கள்





கீதா மணி

"தன்னைப் படைத்ததும் தானே எனும் தன்மை
பின்னை படைத்ததுவே காட்டும்: பெரும் பெருமை
உன்னைப் படைத்தாய் நீ என்றால்இ உயிர் படைப்பான்
என்னைப் படைத்தாய் நீ எனும் இதுவும் "ஏத்துமோ"

இப்படி படைப்புக் கடவுள் பிரம்மதேவன் ஸ்ரீ நரசிம்ம பகவானை துதிப்பதான பாடலை கம்பநாட்டாழ்வார் தனது கம்ப நாராயணா இரணியன் வதைப் படலத்தில்: (எண் 157) அருளியுள்ளார்.

இப்பெருமை கொண்ட பகவான் ஸ்ரீ நரசிம்மரின் ஜயந்தி தினம் வரும் 14.5.22 மற்றும் 15.5.22 தினங்களில், அதாவது சுபகிருது ஆண்டு, வைகாசித் திங்களில் இடம்பெறும் 24 மற்றும் 25ந் தேதிகளில் நாடெங்கும் உள்ள வைணவ ஆலயங்களில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

அக்காலத்தில் வாழ்ந்த ஆழ்வார்களும், ஆசாரியர்களும், மகரிஷிகளும் பரமஹம்சர்களும் விரைந்து நிவாரணம் பெறுவதற்கு இந்த ஸ்ரீ சிங்கப்பெருமாளையே வாழ் முதலாக நினைத்து தரிசித்து பிரார்த்தித்து செயல்பட்டு உள்ளதை புராணங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

சாதாரண மனிதர்கள், எண்ணிக்கையில் அடங்காத அவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் கடன் தொல்லைகள் அழியவும், திருமணம் தடையின்றி நடக்கவும், நற்பிள்ளைப் பேறு வாய்க்கவும், தங்களுடைய நியாயமான

வேண்டுதல்கள் நிறைவேறவும் ஸ்ரீ அழகியசிங்கர் என கொண்டாடப்படும் பெருமாளை தரிசித்து வழிபட்டு, பூஜித்து நற்பலன்களை பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் பல இடங்களில் ஸ்ரீநரசிம்மர் கோயில் கொண்டு அருளி வர, அவற்றில் குறிப்பிட்ட சில ஆலயங்களின் விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

## 1 திருவரங்கம் பெரிய கோயில் ஸ்ரீமேட்டழகிய சிங்கர்

ஸ்ரீரங்கம் பெரிய கோயிலில் குடிகொண்டுள்ள தாயார் சன்னிதிக்கு வடக்கு நோக்கி அமைந்துள்ள மாடக் கோயிலில் அழகிய சிங்க பெருமாளாக, ஹிரண்யனை வதம் புரியும் கோலத்தில் காணப்படும் அவர் அதே சமயம் வலக்கரத்தை மேலே உயர்த்தி "அஞ்சேல்" என அபயமும் வழங்குகிறார்.

சென்னை திருச்சி மார்க்கத்தில் ஸ்ரீரங்கம் புகைவண்டி நிலையம் உள்ளது.

## 2 சிந்தால வாடி ஸ்ரீலட்சுமி நரசிம்மர்

சுமார் 2,500 ஆண்டுகள் பழமை கூடிய சிந்தாலவாடி தலம் கரூர் நகரிலிருந்து சுமார் 30 கி.மீ. தூரத்தில் உள்ளது.

இவ்வூர் பெருமாள் ஆலயத்தில் ஸ்ரீ லட்சுமி நரசிம்மராக அருள் புரிகிறார், இறைவன்.

## 3 தஞ்சை மாமணிக் கோயில் பெருமாள்

நீயே அன்னை, நீயே தந்தை, நீயே உறவு, நீயே நண்பன், நீயே கல்வி, செல்வம், நீயே அனைத்து எல்லாம் என்று ஆழ்வார்கள் போற்றிப்பாடிய, திவ்ய தேசமான தஞ்சை மாமணிக் கோயிலில் வீர நரசிங்கப்பெருமாளாக அதுவும் கிரிஜா திருக்கோலத்தில் திருக்காட்சி அளிக்கிறார் இவர்.

தஞ்சாவூர் புகைவண்டி நிலையத்திலிருந்து நகரப் பேருந்து மார்க்கத்தில் இத்தலம் இருக்கிறது.

## 4 அரியலூர் ஆலயப் பெருமாள்

"அரியின் இல்லம்" அதாவது பெருமாளின் வீடு என்ற பொருள் கொண்ட அரியலூர் தலத்தில் ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயிலில் உள்ள தசாவதார மண்டபத்தில் ஸ்ரீ நரசிம்ம பெருமாள் அர்ச்சா மூர்த்தி வடிவில் குடிகொண்டுள்ளார்.

அரியலூர், சென்னை- விழுப்புரம்- விருதாச்சலம்- திருச்சி மார்க்கத்தில் புகைவண்டி நிலையம் அமைந்த ஊராகும்.

## 5 திருவாலிப் பெருமாள்

ஆழ்வார் ஸ்ரீ நஞ்ஜீயர் என்பவர் "தூவிரிய மலருழக்கி துணையோடும் பிரியாதே" என்ற ஆரம்ப வரி கொண்ட பாசுரம் மூலம் போற்றிப்பாடிய திருவாலி தலத்தில்



ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் ஆலயத்தில் காட்சி தந்து பக்தர்கள் கோரும் வரங்களை அள்ளித் தருகிறார்.

புகழ்பெற்ற சீர்காழி தலத்தின் சமீபம் திருவாலி திவ்ய தேசமுள்ளது.

## 6 கடலங்குடி பெருமாள்

கடலங்குடி தலம் மயிலாடுதுறை வட்டத்தில் அடங்கும் மணல் மேடு வழியாக பந்தநல்லூர் போகும் பாதையில் 22 கி.மீட.தூரத்தில் இருக்கிறது.

இங்குள்ள அமி ஸ்ரீ ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் அமி ஸ்ரீதேவி, பூதேவி உடனுறை யோகநரசிம்மராக, சிறந்த வரப்பிரசாதியாகவும் அருள்புரிகிறார் இப்பெருமாள்.

## 7 முகாசாபரூர் பெருமாள்

அமி ருண விமோசன லக்ஷ்மி நரசிம்ம ராய், பிராட்டியை தனது இடது கரத்தில் அமர்த்தியவாறு திவ்ய கல்யாண குணம் ததும்பும் அழகிய திருக்கோலத்தில் திருக்காட்சியருள்வது முகாசாபரூர் என்ற சிற்றூர் தலத்தில் "பரூர்" என்ற பூர்வியூகப் பெயர் கொண்ட இத்தலத்தில் அமி. ஸ்ரீதேவி, பூதேவி, பெருந்தேவித் தாயார் சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் தனி சன்னிதி கொண்டு பக்தர்களை ஆசிர்வதிக்கிறார் ருண விமோசன லக்ஷ்மி நரசிம்மர். உளுந்தூர்பேட்டை- விருதாச்சல சாலை

மார்க்கத்தில் உள்ள மங்கலம் பேட்டையிலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்தில் இப்பெருமாள் ஆலயம் உள்ளது.

## 8 பூவரசன்குப்பம் பெருமாள்

திருமால், பூமகள் என்று போற்றப்படும் தேவியின் நாயகனாவார்.

அவளுக்கு அரசனான நரசிம்மன் பூப்போல அவளை தாங்கி தொடையில் அமர்த்தி மலரும் முகத்தோடு திருக்காட்சி அளிக்கின்றார் பூவரசன் குப்பம் என்ற சிற்றூரில் உள்ள ஆலயத்தில்.

பெருமாள் ஆதிசேஷன் மீது அமர்ந்த காட்சியை நல்குவதால் இவர் யானக நரசிம்மரும் ஆகிறார்.

விழுப்புரம்- பண்ருட்டி மார்க்கத்தில் உள்ள சிற்றூராக திகழ்கிறது பூவரசன்குப்பம்.

## 9 சிங்கர்குடி பெருமாள்

கடலூர் நகரத்திலிருந்து 14 கி.மீ. தூரத்திலுள்ள சிங்கர்குடி என்கிற சிங்கிரிகோயில் தலத்தில் இரண்யனை கூருகீரால் வகிர்ந்த திருக்கோலத்தில், ஸ்ரீ உக்கிர நரசிம்மர் எனும் திருநாமம் பூண்டு, பெருமாள் திருக்கோயிலில் காட்சியருள்கிறார் இந்த அவதார நாயகன்!
ஸ்துணஜா திருக்கோலம் என்று வழங்கப்படும் இக் கோல நாயகர் 16 கரங்களுடன், 8 அடி உயரமும் பூண்டு பரவசப் படுத்துகிறார்.

பெருமாளுடன் இரண்யனின் மனைவி நீலாவதி, பிரகலாதர், அக்கிர வசிஷ்டர் மற்றும் 3 அசுரர்கள் உடன் இருப்பார்கள். இங்குள்ள தாயார் கொண்ட திருநாமம் கனகவல்லி என்பவர் உடன் இங்கே தாயாரின் தோழியான கனக துர்க்கை அம்மனின் தரிசனமும் கிடைக்கும்.

## 10 சிங்கப்பெருமாள் கோயில் பெருமாள்

பாடலாத்ரி நரசிம்மர் என்று வழங்கப்படும் கருட வாகன தாரியான இப்பெருமாள் சென்னை- செங்கல்பட்டு புகைவண்டி, மற்றும் சாலை மார்க்கத்தில் உள்ள, காரணப் பெயர் கொண்ட சிங்கப்பெருமாள் திருத்தலத்தில் உள்ள சிறு-குறு குகையில் அமர்ந்த திருக்கோலத்துடன் உள்ளார்.

இங்கு குடி கொண்ட தாயாரின் திருநாமம் “அஹோபில வல்லித் தாயார் என்பது. அழகிய உற்சவ மூர்த்தியாக ஸ்ரீ பிரகலாத வரதன் உள்ளார்.

## 11 பழையசீவரம் பெருமாள்

ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் என்ற திருநாமங்கொண்டு பெருமாள் பழையசீவரம் என்ற தொன்மையான தலத்தில் உள்ள ஒரு சிறிய குன்றில் குடி கொண்டு பக்தர்களை ஆசிர்வதிக்கிறார்.

இத்தல சிறப்பு, ஆண்டுதோறும் காஞ்சி ஸ்ரீ வரதராஜர், தேவிகளுடன் தைமாத கனுப்பொங்கல் புனித நாளில் காஞ்சிபுரத்திலிருந்து இவ்வாலயத்திற்கு ஊர்வலமாக சென்று பக்தர்களுக்கு தங்கித் திருக்காட்சி தருவது புராதன நாளிலிருந்து தொடர்கிறது.

காஞ்சிபுரம்- செங்கல்பட்டு பேருந்து வழித்தடத்தில் அமைந்துள்ள சிற்றூரே பழைய சீவரத்தலம்.



## 12 சோளிங்கர் பெருமாள்

திருக்கடிகை என்னும் பெயரும் கொண்ட சோளிங்கர் என்ற தலத்தில் ”மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள் புக்கானை” என்று திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் போற்றி அருளிய ஸ்ரீ யோக நரசிம்மர் திரு திவ்யதேசம் அறையில் குடிகொண்டு பக்தர்களுக்கு அருளி வருகிறார்.

மலைக்கோயிலில் தனி சந்நிதி கொண்ட இப்பெருமாளை 1305 படிகள் ஏறி சென்று தான் தரிசனம் பெற முடியும். அதே பகுதியில் 450 படிகள் கொண்ட சிறிய மலையில் ஆஞ்சநேயரும்

எழுந்தருளியுள்ளார்.

பேய், பிசாசு, பிடித்தவர்கள், மனநோயாளிகள், பிள்ளைப்பேறு அற்றவர்கள், பெரிய மலையின் அடிவாரத்தில் உள்ள தக்கான் புனித குளத்தில் நீராடி அழகியசிங்கரான யோக நரசிம்மரை வழிபட்டு, பூஜித்து குணம் பெற்று வருகிறார்கள்.

தொட்டாச்சாரியார் என்ற பெயரும், சோளலிம்ஹபுரம் சுவாமி என்ற திருநாமமும் பூண்டவரின் திருவம்சத்தவரின் ஆதீனத்தில் இத்திருக்கோயில் உள்ளது.

சென்னை- ஜோலார்பேட்டை புகைவண்டி வழித்தடத்தில் சென்னையிலிருந்து 90 வது கி.மீ. தூரத்தில் சோளிங்கர் ரயில் நிலையம் இருக்கிறது. இந்த நிலையத்திலிருந்து சோளிங்கர் நகரம் சுமார் 1.5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

ஸ்ரீ லட்சுமி நரசிம்மருக்கு மேற்கண்ட தலங்களைக் தவிர, தேவர்மலை, வல்லம், பரிக்கல், பொன்விளைந்த களத்தூர், மறைமலை நகர், திருவேளுக்கை, நீர்வளர், கட்டவாக்கம், நல்லாட்டூர், திருமால்பாடி, ராமாபுரம், கிருஷ்ணகிரி மற்றும் அநேக இடங்களில் திருக்கோயில்கள் உள்ளன.

இதுபோக, நம் நாட்டின் இதர மாநிலங்களில் கூட ஸ்ரீ நரசிம்மர் தனிக் கோயில்கள் கொண்டோ அல்லது பால் ஆலயங்களில் தனிச்சந்நிதி கொண்டோ தன்னை வேண்டும் பக்தர்களை அனுகிரகிக்கும் வரப்பிரசாதியாக திகழ்ந்து வருகிறார்.

ஜெய் நரசிம்மர்!





KABA SURA
KUDINEER

15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties

Call: 88702 88701

## மந்திர மகிமை

# சுற்றுமுள்ளோர் கீழ்ப்படிந்து நடக்க...





ரா. பன்னீர்செல்வம்

அன்னையின் அழகை வர்ணிக்கும் சௌந்தர்யலஹரியின் பாடல்கள் ஒவ்வொன்றும் நமக்கு நன்மைகளை அருளும் மந்திரமாய் பலன் தருவதை நன்கு அறிவோம்.

அப்படி ஒரு பாடல்தான், நம்மைச் சுற்றி உள்ள நட்பு, சுற்றம், வேலையாட்கள் என அனைவரும் நம் சொல்லுக்கு கட்டுப்பட்டு, கீழ்படிந்து நடக்கின்ற ஆற்றலை தருவதாய் அமைந்துள்ளது.

ஆம் சௌந்தர்யலஹரியின் 63ம் பாடலுக்கு இந்த அதீத சக்தி உள்ளது. அதனைப் பற்றி அறிந்து கொள்வோம்.

## மந்திர பாடல்:

'ஸ்மிதஜ்யோத்ஸ்னாஜாலம் தவ வதன -சந்த்ரஸ்ய பிபாதம்
சகோராணா -மாஸீ- ததிரஸதயா சஞ்சு- ஜடிமா
அதஸ்தே சீதாம்சோ- ரம்ருதல ஹரீ -மாம் லருசிய
பிபந்தி ஸ்வச்சந்தம் நிசி நசி ப்ருசம் காஞ்ஜிகதியா"

## பாடலின் பொருள்:

தாயே, உன் சந்திர வதனத்தில் தோன்றும் புன்னகை என்னும் அமுதத்தை உண்டு சகோப் பறவைகள் இன்பம் பெறுகின்றன. அவை சந்திர ஒளியை உண்டு வாழ்பவை. அன்னையின் புன்சிரிப்பு என்னும் அமுதத்தை பருகியதால் அவற்றின் அலகுகள் உணர்ச்சியை இழந்தன.

அவை மீண்டும் உணர்வு பெற, சந்திரனின் குளிர் ஒளியை புளித்த கஞ்சி என எண்ணி இரவெல்லாம் பருகுகின்றன. இப்படியே எனக்கும் அனைத்தும் அமையட்டும் தாயே!....

## பிரயோகிக்கும் முறை:


இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை தங்கத் தகட்டில் வரைந்து பூஜைக்கு பயன்படுத்த வேண்டும். யந்திரத்தில் சமஸ்கிருத மந்திரத்தையும் எழுதிக் கொள்வது நலம்.

தினமும் 1000 முறை வீதம் 32 நாட்கள் கிழக்கு முகமாக அமர்ந்து மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.

அருகம்புல்லை கொண்டு லலிதா அஷ்டோத்திர அர்ச்சனை செய்ய வேண்டும்.

தேங்காய், பழம், தேன், பால், தயிர் சாதம் ஆகியவற்றை நைவேத்தியம் செய்தல் நல்லது.

மேற்கண்ட முறையில் பூஜைகள் செய்து, மந்திர ஜபம் இயற்றி வந்தால் உங்கள் சொல்லுக்கு ஈடுஇணையற்ற மதிப்பு உண்டாகும். அனைவரும் கீழ்ப்படிந்து நடப்பார்கள்.



# கேட்டதும்.... அறிந்ததும்!

புராணப் புகழும், தொன்மை வரலாறும் கொண்ட அவ்வூர் திருக்கோயிலின் கும்பாபிஷேக நிகழ்வையொட்டி 10 தினங்களுக்கு ராமாயண உபன்யாசம் ஏற்பாடாகி தினமும் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. சொற்பொழிவாளரோ நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளை நடத்தி பெயர் பெற்றவர்.

இராமனுடைய பிறப்பில் தொடங்கி, பட்டாபிஷேகம் முடிய தினமும் ஒரு தலைப்பு- உபன்யாசகர்ரின் கவனத்தை ஈர்க்கும்படி நிகழ்ச்சிகளின் போது ஒருவர் தவறாமல் முன்னதாகவே ஆஜராவதோடு, முதல் வரிசையில் இடம் பிடித்து அமர்வது தினசரி இயல்பாக இருந்தது.



ஒவ்வொருநாள் கதை கேட்கும் போதும், பாத்திரங்களுடன் ஒன்றுபட்டு போய் அந்த ரசிகர் உணர்ச்சிவசப்பட்டு கண்கலங்குவார். இதனை உபன்யாசகர் அறிந்து, இவ்வளவு சிரத்தையுடன் அவர் கேட்டு வருகிறார்ரே என ஆனந்தப்பட்டு வந்தார்.

ஒருவழியாக உபன்யாசகரின் முத்தாய்ப்பான பட்டாபிஷேக நிகழ்ச்சி நாள் வந்தது. அன்று வழக்கத்தைவிட அக்கோயில் மண்டபம் பக்தர்களால் நிறைந்து களை சேர்த்தது. முறையாக உபன்யாசகரை கௌரவித்து, பட்டாடை போர்த்தி, தட்டு நிறைய பழங்கள், கனமான கவர் இத்யாதி மரியாதைகள் அளித்து நடந்து முடிந்தன.

உபன்யாசகர் மேடையிலிருந்து இறங்குகையில், தினமும் உணர்ச்சிவசப்பட்டு குளமான கண்களுடன் காட்சியளிக்கும் ஆசாமி அவரை பணிவாக வணங்கி, "சுவாமி! எனக்கு ஒரே ஒரு சந்தேகம்" என்று இழுத்து கூறினார். "அப்படியா!" என வியப்புடன் கேட்ட உபன்யாசகர் "சொல்லப்பா! அதனை உடனே தீர்த்து வைக்கிறேன்" என ஆர்வமுடன் சொன்னார்.

உடனே தயக்கம் நீங்கி விட்ட கதை கேட்டவர்" ஒன்னுமில்லை சுவாமி! நீங்கள் தினமும் கதையில் "ரா" எனும் சப்தத்தை பயன்படுத்துவீர்களே, அதில்தான் எனக்கு ஒரு குழப்பம்.... என்னவென்றால், ராமன் ராட்சசனா இல்லே ராவணன் ராட்சசனா என்பதே அது" எனக்கூற உபன்யாசகருக்கு தூக்கிவாரிப் போட்டது. இருந்தாலும் அவர் தன்னை சுதாகரித்துக் கொண்டு "அப்பனே! அந்த இராமனும் ராட்சகன் இல்லே; ராவணனும் ராட்சகன் இல்லே உனக்கு போய் கதை சொன்னேன் பாரு, நான்தான் ராட்சசன்" என்றார்.

இதனைக் கேட்ட அங்கிருந்த சிலர் சிரிக்க, இதன் காரணம் புரியாமல் தினமும் கதை கேட்டு வந்த அந்த பிரம்ம ராட்சசன் காரணம் புரியாமல் விழித்தார். (இக்கதையை உபன்யாசம் ஒன்றில் அருளியவர் மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமி ஜி) அவர்கள்.

காஞ்சிக்குமரன்

# சித்தர்கள் பார்வை



ஆர். பரஞ்சோதி

சித்தர்கள் அனைவருமே நமது சித்தத்தில் சிவனை வளர்த்து, சிவத்தை அடையும் வழிமுறைகளை கொடுத்து நாம் நன்னெறியில் வாழ வழிகாட்டியோர் மட்டுமல்ல; ஒரு மனிதன் நல்ல முறையில் வாழ்ந்து, மரணமில்லா பெருவாழ்வினைப் பெற்று, மறுபிறவியில்லாமல் இறைவனின் திருவடியை சென்று அடைய வேண்டும் என்று அறிவுறுத்தியவர்கள்.

அத்தோடு நின்றுவிடாமல் மனிதர்கள் வாழும் நெறிமுறைகளை வகுத்து, ஞானம் பெறுகின்ற வழியைச் சொன்னவர்கள். சமூகம் என்பது தனி மனிதனிடம் இருந்துதான் உருவாகிறது. எனவே, தனி மனிதன் வாழும் வகைகளை தனக்கேயுரிய பாணியில் ஆணித்தரமாக சொன்னவர்கள்.

திருமூலரின் பாடல்களில் இறைத்தன்மை எங்கே உள்ளது என்பதனைக் கண்டோம். மேலும் திருமூலர் சுட்டிக்காட்டுகின்ற- மனிதன், மாண்போடு வாழத்தக்க பல சிந்தனைகளை தொடர்ந்து பார்ப்போம்!

சிவம் என்னும் இறைத்தன்மை- சிவன் என்னும் இறைவன் ஒவ்வொரு மனிதனிடத்தும் உறைந்திருக்கிறான் என்பதை நமக்கு வலியுறுத்திய திருமூலர், இன்னொரு பாடலில்....

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார் அன்பே
சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே... "

என்ன ஒரு அருமையான சித்த வாக்கியம் இது!

இந்தப் பாடல் மூலம் திருமூலர் சொல்ல வரும் கருத்து அன்பே சிவம்! சிவம் தான் அன்பு என்பதே!

அறிவில்லாத மனிதர்கள்தான் அன்பும் சிவமும் வேறு வேறு என்பார்கள். அன்புதான் சிவம்

என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை.

நாம் பிறர் மீது காட்டுகின்ற அன்புதான் சிவம் என்பதை எவரொருவர் அறிகின்றோரோ அதன்பின் தாங்களே சிவமாய் மாறி, அன்பான வர்களாக இருப்பார்கள்.

மேற்கண்ட கருத்தின்படி அன்பில்லாத நெஞ்சில் ஆண்டவன் குடியிருக்க வாய்ப்பே இல்லை என்றும் அன்பு தான் நாம் அங்குமிங்கும் அலைந்து தேடுகின்ற இறைவன் ஆவார் என ஆணித்தரமாக சொல்லுகிறார், திருமூலர்!

அதோடு, மனிதனாய்ப் பிறப்பெடுத்த யாவரும் மற்ற உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும்; எல்லோரும் அன்பு மனங் கொண்டு வாழ வேண்டும்; அன்பில்லாத வாழ்வு ஒரு வாழ்வே இல்லை என்னும் தத்துவத்தை பறைசாற்றுகிறார்.

இன்னொரு பாடல் மூலம் குருவின் அருமை பெருமையினை உணர்த்துகிறார் திருமூலர்!

“கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயம்கொடு மாபோல்
குருவின் உருவம் குறித்த அப்பொழுதே
திரிமலம் தீர்ந்து சிவனவன் ஆமே!”

பாம்பால் கடியுண்ட ஒருவர், கருடனை மனதால் எண்ணி துதித்தாலே போதும்! அந்த நிமிடம் முதலே விஷம் மெல்ல மெல்ல இறங்கி, மரணபயம் நீங்கி விடும்; அதைப்போலத்தான், நமக்கு அறிவையும் ஞானத்தையும் ஊட்டுகின்ற குருமார்கள் எனப்படும் ஞானாசிரியரை மனதால் நினைத்தாலே போதும்; அந்த நொடியே ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் நம்மை விட்டு நீங்கி தூய்மை அடையலாம் என்கிறார்!

இந்தப் பாடலின் மூலம், பாம்பின் விஷம் எந்த அளவு மரணபயத்தை உண்டாக்கும் வல்லமை பெற்றதோ, இந்த அளவுக்கு கொடுமையானவை நம்மிடம் நிறைந்து கிடக்கும் மும்மலங்கள்.

மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்பது என்ன?... தான் தான் உயர்ந்தவன் என தன்னையே பெரிதாய் எண்ணுவது ஆணவம்; கோபம், காமம் போன்ற தீய குணங்களே கண்மம் எனப்படுபவை; எல்லாமே நிரந்தரம்- அனைத்தும் நிரந்தரம் என்று எண்ணத்தோன்றும் அறிவே மாயை!

இந்த மூன்று அழுக்குகளும் மும்மலங்கள் என்று ஞானிகளால் வரையறுக்கப்பட்டுள்ளன. இவற்றை அகற்றுவதற்கு சரியான குரு தேவை!

பள்ளிப் பிள்ளைகளுக்கும் சரி; பக்தி மார்க்கத்தில் பயணிப்போருக்கும் சரி, ஒரு நல்ல குரு தேவை! அவர் தான் நம் மன அழுக்குகளை விலக்கி ஞான ஒளியூட்டக்கூடிய ஆசான்!

கருடனை மனதால் நினைத்தாலே விஷம் நீங்கி, மரணபயம் நீங்குவது போல, நமது குருவை மனதால் நினைத்தாலே நம் மன அழுக்குகள் அகன்று விடும். அப்படி தூய்மை பெற்ற மனதில் இறைவனை நம்மால் அடைய முடியும் என்று வழிகாட்டுகிறார், திருமூல தெய்வம்!

“கொன்றிலாரை கொலச்சொலிக் கூறினார்
தின்றிலாரைத் தினச் சொலி
தெண்டித்தார்
பன்றியாய்ப் படியில் பிறந்து ஏழ் நரகு
ஒன்றுவார் அரண் ஆணை இது
உண்மையே”...

இந்தப் பாடலின் பொதுவான கருத்து என்னவென நோக்கும் போது, ஒருவர் விரும்பாத ஒன்றை அவர் மீது வலியப்போய் திணிக்கக்கூடாது! இதனைச் சொல்வதற்கு திருமூலர் கையாண்டிருக்கும் உவமையானது சற்றே கடுமையாக உள்ளதை காணலாம்.

அதாவது, பிற உயிர்களைக் கொல்லும் எண்ணம் சிறிதும் இல்லாத ஒருவரிடம் கொல்லச் சொல்லித் தூண்டுவதும் விரும்பாத ஒரு பொருளை அவரை உண்ணச் சொல்லி தண்டிப்பதும் மிகப்பெரிய பாவம் என்று சொன்ன திருமூலர், அந்தப் பாவத்தை செய்தால் அடுத்த பிறவியில் பன்றியாய் பிறந்து நரக வேதனையை அனுபவிக்க நேரிடும், இது இறைவனின் ஆணையாகும் என்கிறார்.

மேலோட்டமாக பார்த்தால் முதலடியில் சொல்லப்பட்ட
“கொலச் செய்து“ என்னும் சொல், ஒரு

மனிதனை கொல்லச் சொல்வது என்று நாம் அறிந்தாலும் பொதுவாக உயிர்க்கொலை என்றே கருதப்படும்!

உணவுக்காக உயிர்களைக் கொல்வதோ, புலால் உண்ண மறுப்பவரை வற்புறுத்தி உண்ண வைப்பதோ மாபெரும் பாவம் என்பதை திருமூலர் உணர்த்தினாலும் இந்தப் பாவத்தை செய்தால் பன்றியாய் பிறப்பெடுத்து நரக வேதனை அனுபவிக்க நேரிடும் என்று ஆண்டவனின் பெயர் சொல்லி எச்சரிக்கை செய்தாலும் விரும்பாத ஒன்றை எவர் மீதும் திணிப்பது மாபெரும் பாவம் என்பதை இந்த பாடல் மூலம் உணரலாம்.

தான் விரும்பிய படிப்பை, தன் மகன் விரும்பாத நிலையில்
அவனை படிக்கச் சொல்வது....
ஒருவருக்கு பிடிக்காத செயலை செய்யும் படி அவரைத்
தூண்டுவது...
விரும்பாத பெண்ணையோ, ஆணையோ மணந்து கொள்ளும்படி
வற்புறுத்துவது என அனைத்தையும் தவிர்த்தாலே நன்மை
பயக்கும் என்பதை இப்பாடல் மூலம் உணர்த்துகிறார்.

போலித் துறவிகள் சாமியார் என்னும் பெயரில் இன்றைய காலகட்டத்தில் மட்டுமல்ல; அந்தக் காலத்திலும் உலவியிருக்கின்றார்கள். இல்லை என்றால் இப்படி ஒரு பாடல் திருமூலரிடமிருந்து நமக்கு கிடைத்திருக்குமா?
பாடலைப் பார்ப்போம்.

“ஞானம் இலாதார் சடை சிகை நூல் நண்ணி
ஞானிகள் போல் நடிக்கின்றார் தன்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே”...

ஊனை உருக்காமல், உள்ளொளி பெறாமல்.... ஞானம் வராமலும் ஞானத்தை பெறாமலும் சடைமுடி, பூணூல், சுவடிகள் என ஞானியராய் நடிக்கும் போலிச் சாமிகள் நிறைய பேர் உலவி வர, அவர்களின் ஞானநிலை எப்படிப்பட்டது என்பதனை தேர்ந்த ஞானியரைக் கொண்டு சோதித்து அறிந்து அவர்களை உண்மையான ஞானிகளாய் மாற்ற வேண்டிய பொறுப்பு ஒருநாட்டின் மன்னனுக்கு பொறுப்பாகும் என்று, இந்தப் பாடலில் திருமூலர் குறிப்பிடுகிறார்.

ஆனால், இன்றைய சூழலில் போலிகளும் கபடவேடதாரிகளும் தானே தன்னை ஞானிகள் என்று பறை தூற்றிக் கொள்கின்றனர். ஒருசில வேடதாரிகள் இன்னும் ஒருபடி மேலே சென்று தன்னை கடவுளின் அவதாரம் என்றும் கூறிக் கொள்ளும் அவநிலையல்லவா இருக்கின்றது?

(தொடரும்)...

## ஆழ்வார்கள் என்பார்கள் யார் ?

“ஆழ்வார்கள்” என்றால் ஸ்ரீமன் நாராயணனின்
எல்லையற்ற தெய்வீக குணங்களின் கடலில்
மூழ்கியிருக்கும் தெய்வீக முனிவர்கள் என்று பொருள்.

திரு. கிருஷ்ணன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# பல்சுவைப்பக்கம்

## நெய்

சுத்தமான நெய்யில் ஒரு தேக்கரண்டி உப்பு கலந்து கொதிக்க வைத்தால் போதும் நெய் கெடாது.

## தேன்

தேனில் கலப்படம் செய்வதுண்டு. அது சுத்தமானதா என்று அறிய, இரண்டு சொட்டு தேனை தண்ணீரில் விட்டால் அது நீரோடு கலக்காமல் முத்து மாதிரி நின்றால், நல்ல தேனே.

## கீரை

கீரையின் நிறம் மாறாதிருக்க அதை உப்பு தண்ணீரில் வேக வைக்க வேண்டும்.

## திராட்சை

காய்ந்த திராட்சை பழம் மிக்ஸியில் அரைக்கும் போது ஒட்டாதிருக்க, கொஞ்சம் எலுமிச்சை நீரை கலந்து அரைக்கவும்.

**கயிலை மணி**

## உதடு வெடிப்பு

உப்பை நன்கு பொடித்து அதனை நெய்யுடன் கலந்து உதட்டில் தடவவும், அதில் வெண்ணெய் கூட தடவலாம்; நல்ல பலன் கிட்டும்.

## காய்கறிகள் பற்றி....

காய்கறிகளை நன்கு கழுவி சுத்தம் செய்த பிறகே நறுக்கவும்;

அதன் சத்து போகாமலிருக்க, நறுக்கிய துண்டுகளை நீரில் போட்டு வேக வைக்கக்கூடாது.

அவைகளை அதிக நேரம் வேக வைத்தல், இயல்பான சுவையைக் குறைத்து விடும்.

காய்கறி கூட்டு சுவைக்க, அவைகளை குறைந்த அளவு தீயில் மட்டும் வேக வைக்கவும்.

சமையலில் உபயோகிக்கப்படும் சோடா உப்பு ( பேக்கிங் சோடா) வைட்டமினை குறைக்கும் சக்தி கொண்டது என்பதை அறியவும்.

காய்கறி பதார்த்ததிற்கு காரம் அதிகமாகிவிட்டால், நறுக்கின தக்காளி, எலுமிச்சை பழச்சாறு, கொஞ்சம் சர்க்கரை இவற்றில் ஒன்றை மட்டும் பயன்படுத்தவும்.

**கீதா மணி**

## "ஈ" த் தொல்லை

ஈப்பூச்சிகள் குறிப்பிட்ட மாதங்களில் அதிகம் தென்படும். அதன் உபத்திரவம் நீக்க, ஒரு பக்கெட் நீரில் ஒரு தேக்கரண்டி மண்ணெண்ணை விட்டு அறையை துடைக்கவும் தவிர நீரில் கொஞ்சம் உப்பு கலந்து துடைக்க, ஈ பயந்தோடி விடும்!

## கண்ணாடி

முகம் பார்க்கும் கண்ணாடியை தினசரி பேப்பரால் துடைத்தால், அது பளிச்சிடும்!

## வெள்ளி நகை

வெள்ளியினால் தயாரிக்கப்பட்ட நகைகள் ஒளிவிட, கடலைமாவும், எலுமிச்சை சாறும் கலந்து பசையாக்கி தேய்க்கவும்.

**ஆரெஸ்**

## ஆன்றோர்கள் அருளியவை!

இப்படி ஒரு முதுமொழி உலக வழக்கத்தில் உள்ளது.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று.

ஒரு மனிதனின் குறிக்கோள், இந்த ஜென்மத்தில் எங்கும் பரந்து கிடக்கும் பிரம்ம ஸ்வரூபத்தை அறிந்து, பார்த்து அதில் லயிக்க வேண்டும் என்று அமைந்திருக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் முறைப்படி அவரவர் கடைப்பிடிக்கும் தர்மப்படி வாழ்ந்து, அக்காலத்திலேயே இறைவனுடைய அனுக்ரஹத்தைப்பெற முயற்சி செய்ய வேண்டும். ஒருவன் ஒரு ஞானியினுடைய உபதேசத்தைப் பெற்று, அவருடைய காருண்யா பார்வையால் ஒரு மார்க்கத்தை அடையலாம்! ஞானி என மேலே குறிப்பிடப்பட்டாலும், எப்பொழுது ஒருவர் மற்றொருவருக்கு உபதேசம் செய்யும் தகுதியைப் பெறுகிறாரோ, அப்பொழுது உபதேசித்தவர் "குரு" என்னும் உயர்ந்த ஸ்தானத்தை பெற்று விடுகிறார்.

## தல விருட்சம்

ஒரே ஆலயத்தில் வன்னி, நெல்லி, அரசு, வேம்பு, வில்வம், கொன்றை, மந்தாரம், பவள மல்லி, அத்திமரம் என்ற 9 தலவிருட்சங்கள் அபூர்வமாக உள்ளது.

அந்தத் திருக்கோயில் மதுரை ஸ்ரீமீனாட்சி அம்மன் கோயில்தான்.

இறை கவிஞர் என போற்றப்படும் கண்ணதாசன் அவர்கள்

"கண்கள் அவனை காண

உள்ளம் அவனை நினைக்க

கைகள் அவனை வணங்க என இறை வழிபாட்டுக்கு வழிகாட்டுவார்!

**கயிலை மணி**

# பஞ்சமி யார்?

தேவி லலிதா திரிபுர சுந்தரியை தாங்கும் பஞ்சமூர்த்திகளில், பரமேசுவரரின் பத்தினியே பஞ்சமி ஆவாள்! அத்தேவி ஈசுவரனுடன் இணைந்து படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களை புரிவாள்!

சாலோக்கியம், சாமி பயம், சாரூப்யம், சாயுஞ்சயம் மற்றும் கைவல்யம் என்னும் ஐந்து மோட்ச நிலைகளில் கடைசியான கைவல்ய நிலையை அருள்பவள் பஞ்சமி தேவி.

மனிதனின் எலும்புக்கு அதிபதியான இத்தேவி தன் பக்தர்களை ஒரு தந்தையைப் போன்று காக்கும் இயல்புடையவள்.

பஞ்சமி பஞ்ச பூதேசி“ என ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமம் பஞ்சமியைப் போற்றுகிறது.

**கீதா மணி**

# உண்மை உணர்வோம்

சமூக வலைதளங்கள் இன்றைய சூழ்நிலையில் மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதை யாராலும் மறுக்க முடியாது!

இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் போன்றவற்றில் இளைய சமுதாயத்தினர் தடம் மாறவும் தடுமாறவுமான, தவறான வழிகாட்டுதல்களும் இடம்பெறுகின்றன.

இதுமட்டுமல்லாது, மூலிகை, சிகிச்சை என்னும் பெயர்களில் கொடுக்கப்படும் கருத்துக்களை எண்ணும்போது சற்று கவலையாக உள்ளது. உடல்நல சிகிச்சை என்று வருகின்ற போது அதனை பதிவிடுபவர் பாரம்பரிய அனுபவமிக்க மருத்துவரா? என்பதை அறிந்து அதனை பின்பற்ற வேண்டும். மருத்துவம், மந்திரம், பரிகாரம் என்னும் பெயர்களில் வருபவனவற்றை நன்கு ஆய்ந்து, சொல்பவர் யார்? அதனை ஏற்றுக் கொள்ளலாமா என்பதை அறிவுபூர்வமாக சிந்தித்து, உறுதி செய்த பின்னரே அதனை பின்பற்ற வேண்டும்.

ஏனென்றால், தலைப்புக்கும் உள்ளிருக்கும் கருத்துக்கும் சம்பந்தமே இல்லாத பல வீடியோக்களை பார்க்க முடிகிறது. அதனால், முக்கியமான நிகழ்வுகளில் சரியாக ஆய்ந்து தேர்ந்து அதன்பின் செயல்படுவதே சிறப்பாக அமையும்.

உண்மையை உணர்வதே அறிவின் தாக்கம் என்பதனை அறிக! எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.

**தமிழ் வசந்தன்**



# நாயன்மார் வரலாறு

## பெருமிழலைக் குறும்ப நாயனார் ஆன்மாவை வெளியேற்றி....

சாதாரண மனித பிறப்பெடுத்து உலகாளும் சிதன்பால் பற்றும் பாசமும் வைத்து இணைபிரியாமல் இறைவனுடன் கலந்து, நாயன்மார்கள் என்னும் பெருமைக்கு ஆளான சிவனடியார்களின் அர்ப்பணிப்பு உணர்வு என்பது அளவிடற்கரிய பக்தி ப்பெருக்காகும்!

அந்த வகையில் புதுக்கோட்டை- மதுரை மார்க்கத்தில் உள்ள பெருமிழலை என்னும் புனித இடத்தில் தோன்றியவர் தான் குறும்பர் என்னும் சிவனடியார்!

சிவபக்தி என்ன அவ்வளவு சிறந்ததா? என்னும் கேள்வி அவருள்ளே எழும்போதெல்லாம் பல மகான்களின் வாக்கு இவருடைய செவிகளில் ரீங்காரமிடும். ஆம்....

“நீ எந்த கடவுளை உன்னுடைய இறைவனாக- உனக்கு முக்தி தரும் தெய்வமாக நினைக்கிறாயோ, அந்த தெய்வத்தின் திருநாமத்தையே மனதால் நினைக்க வேண்டும்; நித்தியமும் வணங்கவேண்டும்! அந்த இறை நினைவிலேயே மூழ்கி பக்தி செலுத்த வேண்டும்!

ஆனால், சிவனின் திருவடிகளை அடைய வேண்டுமென ஒருவன் கருதினால், அந்த சிவனுக்கு தொண்டும் சேவையும் செய்வதை காட்டிலும் சிவனின் திருநாமத்தை இடைவிடாது சொல்கின்ற சிவனடியாரை துதித்தால் போதும்; அந்த அடியவருக்கு தொண்டு செய்தால் போதும் அந்த சிவனின் அனுக்ரஹம் கிடைக்கும்!





ரா. பன்னீர்செல்வம்

# சிவனடியாரை பணிய நாம் ஓர் அடி எடுத்து வைத்தால் சிவபெருமான், நம்மை நோக்கி பல அடிகள் எடுத்து வைத்து நம்மை ஆட்கொள்வார் என்பதே சிவ நியதி

என கோவிலில் உபன்யாசம் செய்த ஒரு சிவ பெரியவரின் சொல்லை கேட்டதிலிருந்து குறும்பரின் மனதில் சொல்லவொண்ணா பேராவல் சுடர் விட்டது.

உலகம் முழுவதும் உள்ள சிவனடியார்களை பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆசை மேலோங்கியது.

சிவன் அடியார்களின் பெருமைகளை எப்படி அறிந்து கொள்வது? எதிர்ப்பட்டவர்களிடமெல்லாம் இந்தக் கேள்வியை கேட்டார்! ஒருவர், தாமே முன்வந்து அதற்கான வழியை காட்டினார்.

அது.... சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய "திருத்தொண்டர் பதிகம்".

குறும்பர், சிவனடியார்களை பற்றி அறிந்து கொள்ள ஆசை கொண்டார். ஆனால், சுந்தரமூர்த்தி நாயனாரோ சிவனடியார்களை நன்கறிந்து, அவர்களின் வகைகளை தொகுத்து அத்துணை அடியார்களுக்கும் தன்னை அடியவன் என்று திருத்தொண்டர் பதிகத்தினை பாடினார்.

இந்த செய்திகளை நன்கு அறிந்து கொண்ட குறும்பர் தான் அவருடன் நெருங்கிப் பழகாமலும் நேரில் பாராமலும் சுந்தரமூர்த்திநாயனார் மீது அளவற்ற பக்தியும் ஈடுபாடும் கொண்டவராய் சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் அடியவரை கணப்பொழுதும் மறவாமல் அவரையே நினைவில் நிறுத்தி மனதாலே பூசித்து வந்தார்!

இதனிடையே, பல ஞானிகளின் தொடர்பால் அட்டமா சித்திகளை கற்றறிந்தார். கணப்பொழுதும் விலகாமல் நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஆகாரமாய் கொண்டு யோகப் பயிற்சிகளை மேற்கொண்டு, தான் கொண்ட பக்தியினாலும் யோக பயிற்சியினாலும் இறையருளை தன்பால் ஈர்க்கும் வல்லமையுடன் திகழ்ந்தார்.

என்னதான் தான் ஒரு யோகியாகவும் தவவலிமை மிக்கவராகவும் தேர்ந்து விளங்கினாலும் அடியார்களின் பெருமைகளை அறிந்து கொள்ளும் ஆர்வம் சற்றும் குறையாமல் பார்த்துக் கொண்டிருந்தார், குறும்பர்!

எப்போதும் அவர் நாவில் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டப் பதிகம் தாண்டவம் ஆடிக்



கொண்டேயிருந்தது!

“பத்தராய்ப் பணிவோர்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தை சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடி சேர்ந்தார்க் கடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளானே!... ”

சுந்தரரின் இந்தப் பாடலை மலரில் தேன் குடித்து ரீங்காரம் செய்யும் வண்டைப் போல இசைத்துக் கொண்டேயிருந்தார்.

இதனைவிட ஒரு சிவப் பற்று- அடியார் பக்தி குறும்பருக்கு ஏற்பட்டது இறைவனின் திருவுள்ளத்தின் டியே நடந்தேறியது.

ஒரு நாள்....

அடியவர்கள் சிலர் குறும்பரை வணங்கிச் செல்ல வந்தனர். அவர்களுடன் சிறிது நேரம் அளவளாவிக் கொண்டிருந்தார். வந்திருந்த அடியவர்கள் அனைவருக்குமே குறும்பர், சுந்தரமூர்த்தி நாயனார் மீது கொண்டிருந்த பக்தியின் ஆழமும் அன்பின் அளவீடும் நன்றாக தெரியும்.

எனவே, சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பற்றியும் அவருக்கு கயிலாய வாழ்வளிக்க இறைவன் திருவுளம் கொண்டுள்ளது பற்றியும் தாங்கள் அரசல்புரசலாக அறிந்தவற்றை குறும்பரிடம் சொல்லி, விடைபெற்றனர்.

என்னது? என் எண்ணத்திலும் உணர்விலும் ஒன்றி வாழும் சுந்தரருக்கு கையிலாய வாழ்வா? இறைவன் அவரை ஆட்கொள்ள சித்தம் கொண்டாரா? சுந்தரர் இல்லாத இப்புவியில் நான் இருந்து என்ன செய்யப் போகிறேன். அடியார்களின் அருமையை எனக்குணர்த்திய, என் ஞான குரு இல்லாமல் எனக்கு இங்கே

இடம் ஏது? இறைவன் திருவடி நிழலில் சுந்தரர் இளைப்பாறச் சென்றுவிட்டால் அடியேனுக்கு நிழல் தரப்போவது யார்?... எப்படி? என்மனம் நிலையின்றி தவிக்கிறதே, என் செய்வேன்?" எனப் பலவாறு புலம்பித் தவித்த குறும்பர், அலைபாயும் மனதை அடக்கி, யோக நிஷ்டையில் ஆழ்ந்தார்! நமச்சிவாய மந்திரத்தை மனதால் உருப்போட்டு, தன் மனக் கவலைக்கு மருந்து தேடும்! முயற்சியில் ஆழ்ந்து இறங்கினார்.

தான் கொண்ட யோக சக்தியினால் சுந்தரர் இறையருள் பெறப் போவது எப்போது என்பதை அறிகின்ற முயற்சியில் ஈடுபட, அவருடைய ஞான சக்தி குரும்பருக்கு சில உண்மைகளை உணர்த்தியது.

ஆம்! விரைவிலேயே சுந்தரருக்கு இறைவன் ஈசன் கயிலாய வாழ்வை அருளி, தன்னுடைய நிழலில் சேர்த்துக் கொள்ளப் போகிறார் என்னும் அரிய உண்மை புலப்பட்டது. அதுமட்டுமல்ல; அது நிகழப்போகும் நாள் எப்போது என்பதனையும் தன் யோக சக்தியினால் உணர்ந்தார்.
"என்ன செய்வது? அடியார்க்கடியவனான ஆண்டவனின் தொண்டர் சுந்தரர் இல்லாமல் என் பயணம் சோபிக்குமா? இயலாது! சுந்தரர் கயிலாயத்தை அடைவதற்கு சற்று முன்னரே கயிலாயம் சென்று காத்திருந்து, சுந்தரரை வரவேற்பேன்; இது உறுதி! என்குருவை நான் எப்படி அடைவது? பிரியாமல் இருப்பது என்னும் உபாயமும் எனக்கு தெரிந்து விட்டது! நான் அவ்வாறே செய்வேன்!... என உறுதி கொண்டார்.
அந்த நாளும் வந்தது.

சுற்றிலும் அடியார்கள் வீற்றிருக்க, எல்லோரிடமும் இன்முகத்தோடு விடைபெற்றார் குறும்பர்! ஆனந்தம் அவரது முகத்திலும் உள்ளத்திலும் தாண்டவமாடியது. அடியவர்கள் அனைவரும் சித்தியடையவிருக்கும் குறும்பர் எனும் மகானின் பரவசநிலையை காண நமச்சிவாய மந்திரம் சொன்னவாறு காத்திருந்தனர்.

குறும்பரோ ஆழ்ந்த நிஷ்டை நிலையில் அமர்ந்து புத்தி, மனம், அகங்காரம், சித்தம் அனைத்தையும் ஒன்றாக இணைத்து, தான் பெற்றிருந்த யோகப் பயிற்சியின் மூலம் சிரசு வழியாக (சஹஸ்ரஹாரம்) தன்னுடைய ஆன்மாவை வெளியேற்றி.... கபால மோட்சம் என்னும் முக்தி நிலையை அடைந்தார்.

சுற்றிலும் இருந்த அடியவர்கள், "ஹர ஹர..... சிவ சிவ".... என முழங்கி, இறைவனின் திருவருளை எண்ணி அகம் மகிழ்ந்தனர்.
கயிலையில்....

தான் எண்ணியவாறே குறும்பர் காத்திருக்க.... இறைவன் ஈசன் திருக்கரத்தினை பற்றியபடி சுந்தரர் மென்னடை போட்டு வர.... இருவரின் தாள்களிலும் பணிந்தார் குறும்பர்!
"குருவின் நிழல் தேடி, மானிட வாழ்வை நீத்த உனது அரிய பக்தியை மெச்சினேன். நீர் எண்ணியபடி உனது குருவின் துணையுடன் என் திருவடியில் இணைந்து இளைப்பாறுவாய்; இனி பூவுலகில் "பெருமிழலைக் குறும்ப நாயனார்" என்று நீ பிறந்த ஊரின் பெயருடன் வணங்கப்படுவாய்!" என ஆசிகள் வழங்க,
தான் பெற்ற பெரும் பேறு குறித்து, மனமுவந்து நெகிழ்ச்சியோடு வணங்கினார் குறும்பர்!

## திவ்ய பிரபந்தம் என்றால் என்ன?

திவ்ய பிரபந்தம் என்பது ஆழ்வார்கள் எனப்படும் தெய்வீக முனிவர்களால் பாடப்பட்ட 24 தெய்வீக தமிழ் வசனங்களின் தொகுப்பாகும். ஆழ்வார்கள் ஸ்ரீமன் நாராயணனிடம் பெற்ற ஆழ்நிலை தெய்வீக அனுபவங்களால் திவ்ய பிரபந்தம் உருவானது. இது தமிழில் வேதத்தின் சுருக்கம்

திரு. கிருஷ்ணன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்



# செல்வச் செழிப்பு கூடவும் கடன் சுமை குறையவும் லால் கிதாப் பரிகாரங்கள்



திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

நாம் வாழும் இந்த காலகட்டத்தில் வீடு கட்டுவது, வண்டி வாங்குவது போன்ற சொத்து சுகங்களை சேர்ப்பது முதல் அன்றாட தேவைகளான வீட்டு வாடகை, உணவு மற்றும் உடைக்காக கைமாற்றாக கடன் வாங்குவது மற்றும் கடன் அட்டையை பயன்படுத்துவது சர்வ சாதாரணமான நிகழ்வாக உள்ளது. தான் திருப்பி செலுத்தக்கூடிய அளவுக்கு மட்டும் கடன் வாங்குவது மட்டும் அல்லாமல் அதிகமாக கடன் வாங்கி கடன் சுமையில் மாட்டிக்கொள்கிறவர்கள் பலர். அவ்வாறு கடன் சுமையில் சிக்கி தூக்கம் இழந்து தவிப்பவர்கள், கடன் சுமையில் இருந்து விடுபடவும் செல்வ வளம் கூடவும் சிறந்த லால் கிதாப் பரிகாரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. கடன் சுமையிலிருந்து விடுபட சூரியன் வழிபாடு முக்கியமானதாக கருதப்படுகிறது.

2. சூரிய உதயத்தின் போது சூரியனை நோக்கி சிறிது தண்ணீரை சூரியனுக்கு தானமாக தெளித்து சூரியனை நோக்கி வழிபாடு செய்யவேண்டும்.

3. தினமும் சூரியனை வழிபட்டு “ஓம் ஆதித்யாய நம” என்ற மந்திரத்தை 108 முறை உச்சரிக்க வேண்டும்.

4. பதினோரு சிகப்பு மிளகாய் விதைகளை தண்ணிரில் கலந்து அந்த நீரை சூரிய பகவானுக்கு சூரிய

வழிபாட்டின் போது படைக்க வேண்டும்.

5. வாழைக் கன்றை மகா விஷ்ணு கோவிலில் நட்டு வைத்து தினமும் தண்ணீர் ஊற்றி பராமரிக்க வேண்டும். எப்போது வாழை மரமாக மாறி பூ பூத்து குலை தள்ளுகிறதோ அப்பொழுது இருந்து கடன் சுமை குறைந்து செல்வ செழிப்பு கூடும்.

6. நீங்கள் நட்டுவைத்த வாழை மரத்திலிருந்து வரும் வாழைப் பழங்களை நீங்கள் சாப்பிடாமல் ஏழைகளுக்கு தானமாக கொடுத்துவந்தால் செல்வ நிலை முன்னேற்றமடையும்.

7. சுக்ல பட்சத்தில் வரும் வியாழக்கிழமை அன்று சந்தனத்தையும் செந்தூரத்தையும் திலகமாக இட்டுக்கொண்டு “ஸ்ரீ சூக்தத்தை” பாராயணம் செய்து வந்தால் தன நிலையில் ஏற்றம் உண்டாகும்.

8. சனிக்கிழமை அன்று நல்லெண்ணைய் தடவிய கோதுமை சப்பாத்தியை கருப்பு நாய்க்கு உணவாக கொடுத்து வர கடன் சுமை குறைய தொடங்கும்.

9. ஆறு சனிக்கிழமைகளில் மயானத்தில் இருக்கும் கிணற்றில் இருந்து எடுத்து வரப்பட்ட நீரை அரச மரத்திற்கு ஊற்றி வர கடன் சுமை படிப்படியாக குறையத்தொடங்கும்.

10. தொடர்ந்து ஐந்து வாரங்கள் கடன் வாங்கியவர் கைகளால் கட்டி வெல்லதை எடுத்து பசு மாட்டிற்கு ஞாயிற்றுக்கிழமைகளில் கொடுத்து வர கடன் பளு வெகுவாக குறைந்து செல்வவளம் பெருகும்.











# பக்தரைப் புரந்தருளும் பாண்டுரங்கன்

**இறை வழிபாட்டுடன், பக்தர்களின் இரைத் தேவையைத் தீர்ப்பதையும் தன் தினசரி கடமையாகக் கொண்டவன் அந்த பக்தன். அவனுடைய பொது நலனைப் பாராட்டும் வகையில் அவன் வழிபடும் பாண்டுரங்கன், அவனுடைய வீட்டிற்கே வந்து அவன் அளிக்கும் பூஜையையும் பிரசாதத்தையும் நேரடியாகவே ஏற்றுக் கொள்வார்.**

ஒருநாள் அவ்வாறு வந்திருந்த அவருக்கு முறையாக பூஜையை ஆரம்பித்தபோது வாசலில் அன்னதானம் பெறவேண்டி காத்திருந்தவர்கள் அவனுடைய கவனத்தை ஈர்த்தார்கள். உடனே அவன் பாண்டுரங்கனிடம், “கொஞ்சம் அப்படியே நில்லுங்க சாமி, நான் அவங்களை கவனிச்சுட்டு வர்ரேன்” என்று



பிரபுசங்கர்

சொல்லிவிட்டு வாசல் பக்கம் போய்விட்டான். அவன் சொன்னானே என்பதற்காக பாண்டுரங்கன் நின்றபடியே காத்திருந்தார் - தன்னைக்கூட கவனிக்காமல் தன் அடியார்கள் மீது அன்பைப் பொழியும் அந்த பக்தனின் பொதுநல உள்ளத்தைப் பாராட்டும் வகையாக! அதுமட்டுமல்லாமல் தான் எங்கெல்லாம் கோவில் கொண்டிருக்கிறோமோ அங்கெல்லாமும் இப்படி நின்ற கோலத்திலேயே சேவை சாதிக்கிறார்!

அந்தப் பாண்டுரங்கன், அதே நின்ற கோலத்தில் அனைத்து பக்தர்களுக்கும் தரிசனம் தருகிறார், தமிழ்நாட்டில், தென்னாங்கூரில். இவ்வூரின் நடுநாயகமாக, பிரமாண்டமான ஆலயமாகத் திகழ்கிறது இந்த பாண்டுரங்கன் - ரகுமாயி ஆலயம். வட இந்திய பூரி ஜெகந்நாதர் கோயில் வடிவமைப்பைப் போன்று விண்ணை முட்டும் கோபுரம், பார்ப்போர் கண்ணைக் கவரக் கூடியது. கோபுரத்தின் உயரம் தொண்ணூற்று ஐந்தடி. கோயிலில் உள்ள கதவுகள் எல்லாம் தேக்கு மரத்தால் அழகிய வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டவை. ஒவ்வொரு கதவின் முன்னாலும் சில விநாடிகளாவது நம்மை நிறுத்திவிடும் அற்புத, கலைத்திறன் மிக்க வேலைப்பாடுகள் கொண்ட கதவுகள் அவை. மூலவர் இருக்கும் இடத்திலுள்ள கதவுதான், உலகத்திலேயே வெள்ளியினால் செய்யப்பட்ட மிகப்பெரிய ஆலயக் கதவு என்கிறார்கள்.

நுழைவாயிலிலிருந்து மூன்று மண்டபங்களும் அதற்குப்பின் கர்ப்பக் கிரகமும் அமைக்கப்பட்டுள்ளன. கர்ப்பக் கிரகத்தில் ஆளுயர வடிவில் பாண்டுரங்கன் - ரகுமாயி, மூலவர்கள் வேத ஆகமப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். ஆலயத்தின் முகப்பு மண்டபத்தில் சித்திரங்கள் புதுமையான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணனின் லீலா விநோதங்களைச் சித்தரிக்கும் ஓவியங்கள் மனதை கொள்ளை கொள்வன. தஞ்சாவூர் ஓவியப் பாணியில் அமைந்திருக்கும் இந்த ஓவியக் காட்சிகள் மணிக்கணக்கில் நின்று ரசிக்கத் தக்கவை. இப்படி சுமார் முப்பது ஓவியங்கள் உள்ளன. மண்டபத்தின் மேற்கூரையில் தசாவதாரக்



காட்சிகளை வட்ட வடிவ ஓவியங்களாக அமைத்துள்ளார்கள். ‘மியூரல்’ என்கிற புதிய பாணியில் உருவாக்கப்பட்ட ஓவியங்கள் இவை. கோவில் முழுவதுமாக எப்படி தூய்மை துலங்க ஒளிர்கிறதோ, அதற்குக் கொஞ்சமும் மாற்றுக் குறையாமல் இந்த ஓவியங்கள் பொலிகின்றன. எந்த மூலையிலும், இடுக்கிலும் கொஞ்சம் கூட தூசி இல்லை!

இக்கோயிலின் மூல மூர்த்திகளான, விஸ்வரூப மூர்த்திகளாக விளங்கும் பாண்டுரங்கன் - ரகுமாயிக்குக் கீழே, தனியாக அலங்கரிக்கப்பட்ட, அவர்களுடைய மிகச் சிறிய விக்ரகங்களும் பேரழகு கொஞ்சும் பதுமைகளாக விளங்குகின்றன. கோயிலை ஒட்டி அமைந்துள்ளது ராம சங்கீத மண்டபம். இந்த மண்டபத்தில் இன்னிசைக் கச்சேரிகள் நடத்தப்படுகின்றன. பாடல், இசைக்கருவிகள் என்று பலரக இசையொலிகள் பக்தர்களைப் பரவசப்படுத்துகின்றன. இவற்றில் குறிப்பாக ஹரிதாஸ் கிரி சுவாமிகளின் பஜன் பாடல்களைச் சொல்ல வேண்டும். ஒரே சமயத்தில் பல நூறு பேர் உட்கார்ந்து கொண்டு கச்சேரிகளைக் கேட்க முடியும். மண்டப உட்சுவர்களில் மீரா, ஞானேசுவரர், ராமதாஸர், போதேத்திரர் என இறைவனின் புகழ் பாடிய பக்தர்களின் திருவுருவங்கள் பளிச்சிடுகின்றன. தண்ணீர்த் தொட்டிகூட தாமரை வடிவமாகவோ அல்லது ஏதேனும் கலை நுணுக்கம் பொருந்தியதாகவோ இருப்பது, ஒவ்வொரு அம்சமும் ஆன்மிக மயமாக இருத்தல் வேண்டும் என்ற ஆலய நிர்வாகிகளின் நோக்கத்தைப் புரிய வைக்கிறது. பக்தர்கள் இங்கே வந்து தங்க பல குடியிருப்புகள் உள்ளன. கேரளப் பாணி ஓடுகளுடன் பல வசதிகளைக் கொண்டதாக இருக்கின்றன அந்தக் குடியிருப்புகள்.

இந்தக் கோயிலுக்குக் கொடி மரம் இல்லை. ஒரு காவிக் கொடியைக் கையில் ஏந்தி பல மணி நேரங்கள் ‘ராமா ராமா’ என்று சொல்லியவாறு கோயிலைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள் பக்தர்கள். எத்தனை முறை என்று கணக்கு வைத்துக் கொள்ளாமல், தாம் சோர்ந்து போகும்வரை இப்படி வலம் வருவது, பாண்டுரங்கன் மீதான அவர்களுடைய பக்தியை நெகிழ்ச்சியுடன்

விவரிக்கிறது.

ஞானானந்தகிரி சுவாமிகளின் பிரதான சீடரான ஹரிதாஸ் கிரி சுவாமிகளின் பெரு முயற்சியால் உருவான இக்கோயிலில், அவர் பாண்டுரங்கனை வழிபடுவது போன்ற ஓவியத்தைப் பார்க்கும் போது நம் கண்களில் நீர் துளிர்க்கும். அத்தனை பக்தி பூர்வமாக அமைந்திருக்கிறது அது. இறைவன் மீது எத்தகைய ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தால், அவர், கொஞ்சமும் தயங்காமல் கங்கை நதியில் ஜல சமாதியாகியிருப்பர் என்று வியந்து போற்றத் தோன்றும்.

இந்த பாண்டுரங்கனையும், ரகுமாயியையும் தரிசித்தால் வாழ்வில் பூரண நிம்மதியும், எந்த சோதனைகளையும் இந்த பகவானைப் போலவே நின்று தாங்கும் மனவலிமையும், அவற்றை வெற்றி காண புதுப்புது உத்திகளும் தோன்றும் என்பது பக்தர்களின் நம்பிக்கை, அனுபவம்.
காஞ்சிபுரம் - வந்தவாசி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கிராமம், தென்னாங்கூர். காஞ்சியில் இருந்து 34 கி.மீ. வந்தவாசியில் இருந்து 6 கி.மீ. உத்திரமேரூரில் இருந்து 22 கி.மீ. தொலைவில் உள்ளது.



கலைத்திறன் மிக்க வெள்ளியினால் செய்யப்பட்ட வேலைப்பாடுகள் கொண்ட உலகத்திலேயே மிகப்பெரிய ஆலயக் கதவு என்கிறார்கள்.





திரு. கிருஷ்ணன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# துளசி வழிபாடு என்பது வேத பாரம்பரியத்தின் ஒரு பண்டைய பகுதியாகும்

இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தையது மற்றும் இன்றும் தொடர்கிறது. தினமும் காலையில், இந்தியா முழுவதும் உள்ள குடும்பங்கள் தங்கள் அன்றாட கடமைகளுக்குச் செல்வதற்கு முன் ஸ்ரீமதி துளசி தேவிக்கு தண்ணீர் மற்றும் பூக்களை வழங்குகிறார்கள்.

வைஷ்ணவர்கள், விஷ்ணு அல்லது கிருஷ்ணரின் பக்தர்கள், துளசி செடியின் தண்டுகளால் செய்யப்பட்ட மணிகளில் மந்திரம் மற்றும் துளசி மணிகளை கழுத்தில் அணிவார்கள். புனிதமான கார்த்திகை மாதத்தில் (அக்டோபர்-நவம்பர்), சில வைஷ்ணவ பக்தர்கள் தினமும் ஆயிரம் துளசி இலைகளை - ஒவ்வொன்றாக - கிருஷ்ணரின் பாத தாமரைகளுக்கு சமர்ப்பிக்கிறார்கள்.

“மந்தாரம், அல்லி, பாரிஜாதம் போன்ற பூச்செடிகள் அதீத நறுமணம் நிரம்பியிருந்தாலும், துளசி இலைகளால் தனக்கே அர்ச்சனை செய்ய வேண்டும் என்பது கிருஷ்ணரின் விருப்பம்.”

துளசி செடியாகத் தன் வடிவில் எப்போதும் இறைவனின் தாமரைப் பாதங்களிலும், இறைவனின் கழுத்திலும் தங்குகிறாள். துளசி இலையால் அலங்கரிக்கப்பட்ட உணவை மட்டுமே கிருஷ்ணர் ஏற்றுக்கொள்கிறார் என்று வேத சாஸ்திரங்கள் கூறுகின்றன. ”ஸ்ரீ கிருஷ்ணர் தன்னை ஒரு துளசி இலையையும் ஒரு பனை நீரையும் அளிக்கும் ஒரு பக்தருக்கு தன்னை விற்கிறார்.”

நம்பிக்கையுடன் துளசியை வழிபடுபவர் முடிவில்லாத பலனை அடைகிறார்.

துளசி செடிக்கு எனது மரியாதைக்குரிய வணக்கங்களைச் சமர்ப்பிக்கிறேன், இது பாவச் செயல்களை உடனடியாக அழிக்கும். இந்த மரத்தைப் பார்ப்பதன் மூலமோ அல்லது தொட்டுப் பார்ப்பதன் மூலமோ, ஒருவர் அனைத்து துன்பங்களிலிருந்தும் நோய்களிலிருந்தும் விடுபடலாம். துளசி செடிக்கு தர்ப்பணம் செய்து, தண்ணீர் ஊற்றினால் சிறப்பு. யாராவது துளசி விதையை எங்காவது விதைத்தால், அவர் நிச்சயமாக பகவான் கிருஷ்ணரிடம் பக்தி கொண்டவராகிறார். மேலும் துளசி இலைகளை கிருஷ்ணரின் தாமரை பாதத்தில் அர்ப்பணிக்கும்போது, கடவுளின் அன்பின் முழு வளர்ச்சியும் கிடைக்கும்.”

உங்கள் வீடு தூய்மையாக இருந்தால் உங்கள் வீட்டில் துளசி தேவியை வழிபடலாம். அங்கு ஒழுங்குமுறை கொள்கைகளை மீறக்கூடாது - இறைச்சி உண்ணுதல், சட்டவிரோத செயல் போதை மற்றும் சூதாட்டம் தவிர்ப்பது நற்பலனை வழங்கும். நீங்கள் துளசி தேவியை வழிபட விரும்பினால், அது கிருஷ்ணரின் மீது உயர்ந்த பக்தி கொண்டுள்ளது என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு சாதாரண தாவரத்தைப் போலவே அவளைப் பராமரிக்க வேண்டும். துளசி இருக்கும் இடத்தில் சர்ப்பங்கள் வருவதில்லை. துளசி மாடத்திற்கு விளக்கேற்றி வழிபட்டு வர அனைத்து வளங்களும் கிடைக்க பெறுவோம்.

ஆனையையும் காத்து மானையும் காத்து, அனுமானயும் காத்து திரௌபதியின் தன்மானத்தை காத்து காத்து நின்றவனே எம்மை காப்பது உனக்கு அறிதல்லவே. சர்வம் ஸ்ரீ கிரிஷ்ணார்பணமஸ்து

## விஷ்ணு கோவில்களில் ஏன் நவக்கிரகம் இல்லை?

ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸ்ரீமன் நாராயணனைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது.

ஒரு வைணவனுக்கு தன் எதிர்காலம் குறித்து எந்த சந்தேகமும் இருக்கக்கூடாது. எப்போது ஸ்ரீமன் நாராயணா மோக்ஷத்தையே கொடுக்கத் தயாராக இருக்கிறாரோ, அப்போது அவர் ஜட வாழ்வுக்கும் தேவையான அனைத்தையும் கொடுப்பார். ”யோக-க்ஷேமம் வஹாம்யஹம்” என்று கீதையில் சொல்லியிருப்பதால் இதில் நமக்கு எந்த சந்தேகமும் வேண்டாம்.

சர்வம் ஸ்ரீ கிருஷ்ணர்பணமஸ்து

**திரு. கிருஷ்ணன்**
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்



திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

## தீய பழக்கங்களில் இருந்து விடுபடவும் உடம்பில் ஆற்றல் அதிகரிக்கவும்

# தவரித்தா தேவி எந்திரம்


நீண்ட நாட்களாக தீய பழக்கங்களான புகை பிடித்தல், மது மற்றும் தீய குணங்களிலிருந்தும் மாற வேண்டும் என்று நினைத்து மாறமுடியாமல் தவிப்பவர்கள் இந்த தவரித்தா தேவி எந்திரத்தை பூஜித்து வந்தால் தீய பழக்கங்கள் மறைந்து நல்ல பழக்க வழக்கங்கள் ஏற்படும். தவரித்தா தேவி எட்டாம் திதியான அஷ்டமி திதியை ஆளும் தெய்வம் ஆகும். நாம் எடுக்கும் முயற்சிகளில் தடை மற்றும் தாமதங்கள் ஏற்பட்டு கொண்டு இருப்பவர்களுக்கு அவர் எடுக்கும் முயற்சியையும் வேலையையும் துரிதப்படுத்தி வெற்றியை ஏற்படுத்தி கொடுப்பவர் தவரித்தா தேவி ஆவார். நமது உடம்பில் தெம்பு மற்றும் ஆற்றல் குறையும் போது ஆற்றலை கொடுக்கும் தன்மை இந்த தவரித்தா தேவிக்கு உண்டு. அது மட்டும் அல்லாமல் நாம் ஒரு பிரச்சனைக்கு விடை தேடும் பொழுது நமக்கு ஆக்க அறிவை மேம்படுத்தி பிரச்சனைக்கு தீர்வை ஏற்படுத்தி தரவல்லவர். தவரித்தா தேவி எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, தினமும் முல்லை மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் மேலே கூறப்பட்டிருக்கும் அனைத்து அம்சங்களையும் குறைவின்றி பெறமுடியும்.

ஸ்ரீ தவரித்தா நித்ய தேவி எந்திரத்திற்கு உண்டான மந்திரம்:

"ஓம் ஐம் ரீம் ஸ்ரீம் ரிம்ம் த்வரிதாயே நமஹ"

# சமத்துவ ஞானி ஸ்ரீ இராமானுஜர் ஜெயந்தி!!

சுந்தரமைந்தன்



ஸ்ரீ இராமானுஜரின் பிறந்த தினமானது இராமானுஜர் ஜெயந்தி என்றும் அழைக்கப் படுகின்றது. இராமானுஜ ஜெயந்தி ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது மற்றும் தமிழ் சூரிய நாட்காட்டியின் அடிப்படையில் ஜெயந்தி நாள் தீர்மானிக்கப்படுகிறது. இராமானுஜ ஜெயந்தி சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திர நாளில் கொண்டாடப்படுகிறது.

இந்த வருடம் ஸ்ரீ இராமானுஜரின் 1005வது ஜெயந்தி மே 6, 2022 வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவிருக்கின்றது.

இராமானுஜரால் உருவாக்கப்பட்ட கோட்பாடுகள் இப்போதய காலகட்டத்திற்கு மிகுந்த முக்கியத்துவத்தையும், பொருந்தக்கூடிய தன்மையையும் கொண்டிருப்பதால், இராமானுஜரின் பிறந்தநாள் உற்சாகத்துடனும், மரியாதையுடனும் கொண்டாடப்படுகிறது.

தென் மற்றும் வட இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில், பக்தர்கள் சில சிறப்பு ஏற்பாடுகளைச் செய்து இந்த நாளைக் கொண்டாடுகிறார்கள் இராமானுஜரின் போதனைகள் மற்றும் தத்துவங்கள் விவாதிக்கப்படுகின்ற நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பல வைணவ கோயில்களில், இராமானுஜ ஜெயந்தி கொண்டாட்டங்கள் மிகுந்த ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் நடத்தப்படுகின்றன. அனைத்து கோவில்களிலும், பல்வேறு உபநிடதங்கள் மிகுந்த பக்தியுடன் பாராயணம் செய்யப்படுகின்றன.


## ஸ்ரீ இராமானுஜர் அவதாரம்:

கி.பி.1017-ல் பிங்கள ஆண்டு வியாழக்கிழமை, சித்திரை மாதம் 12-ஆம் தேதி சுக்லபட்ச பஞ்சமி திதியில், மிதுன ராசி, திருவாதிரை நட்சத்திரத்தில் அப்போது பூதபுரி என்று அழைக்கப்பட்ட தற்போதைய ஸ்ரீபெரும்புதூரில் அசூரிகேசவசோமாயாஜுலு, காந்திமதி தம்பதியருக்கு மகனாக அவதரித்தார். இவர் ஆதிசேஷனின் மறு அவதாரம் என்பது ஐதீகம். இராமானுஜரின் இயற்பெயர் லக்ஷ்மணன், மேலும் இளைய பெருமாள் என்றும் அழைக்கப்படுகிறார், இராமானுஜர் குழந்தைப் பருவத்திலேயே மிகவும் கூர்மையான அறிவுத் திறனுடன் விளங்கினார். இவர் தனது 120 ஆவது வயதில் கி.பி.1137 இல் ஸ்ரீரங்கத்தில் பரமாத்மாவுடன் இணைந்தார்

## 'ஓம் நமோ நாராயணாய' என்ற திருமந்திரம்:

ஒருமுறை ஸ்ரீ இராமானுஜர் திருக்கோஷ்டியூர் நம்பிகளிடம் " ஓம் நமோ நாராயணாய " என்ற திருமந்திர உபதேசம் பெறுவதற்கு ஸ்ரீரங்கதிலிருந்து திருக்கோஷ்டியூர் சென்றார். ஆனால் நம்பியோ, இராமானுஜருக்கு மந்திரத்தின் பொருள் கூற மறுத்ததால் ஸ்ரீரங்கம் திரும்பிய இராமானுஜர் சற்றும் மனம் தளரவில்லை. பதினேழு முறை இராமானுஜரை அலைக்கழித்தபின், பதினெட்டாவது முறை அவர் வந்தபோது அவரை மாணவராக ஏற்றுக் கொண்டு, ஓம் நமோ நாராயணாய" என்ற திருமந்திரத்தின் உட்பொருளை இராமானுஜருக்கு உபதேசித்தார். அத்துடன் இதை வேறு யாருக்கும் வெளியிடக்கூடாது எனவும் நிபந்தனை விதித்தார். மந்திர உபதேசம் பெற்ற ஸ்ரீ இராமானுஜர், "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பரந்த மனப்பான்மையில், குருவின் கருத்தை புறக்கணித்து நேராக திருக்கோஷ்டியூர் கோபுரத்தின் மீதேறி "ஓம் நமோ நாராயணாய" என்ற உயரிய திருமந்திரத்தின் பொருளை இந்த உலகமே அறியும்படி உரக்க கத்தினார். கோபுரத்தின் கீழே இருந்த எல்லா மக்களும் திருமந்திரத்தின் பொருளை கேட்டு ஸ்ரீ இராமானுஜரை வைகுண்ட பெருமாளாகவே நினைத்து வணங்கினார்கள்.

இந்த செய்தியினை கேள்விபட்ட திருக்கோஷ்டியூர் நம்பி, இராமானுஜரை அழைத்து "நீ குருவின் உறுதிமொழியை மீறிவிட்டாய். உனக்கு நரகம்தான் கிட்டும்!"" என்றார் கோபத்துடன் "குருவே, நான் ஒருவன் நரகம் சென்றாலும், இந்த ஊர் மக்களும் இதனை அறிபவர்கள் எல்லோரும் வைகுண்டம் போவார்கள் அல்லவா?"" என்று பணிவுடன் கூறினார். இராமானுஜருடைய கருணை உள்ளத்தைக் கண்டுகொண்ட நம்பிகள் அவரைப் பற்றிப் பெருமகிழ்ச்சியடைந்தார். பின்னர் இராமானுஜரைத் தழுவிக்கொண்டு நல்லாசிகள் வழங்கினார்.



## ஸ்ரீ இராமானுஜர் எழுதிய புத்தகங்கள்:

ஸ்ரீபாஷ்யம் வடமொழியில் இராமானுஜர் இயற்றிய

தலைசிறந்த படைப்பு. வேதாந்தத்தில் விசிஷ்டாத்வைதத் தத்துவத்தை காலத்திற்கும் நிலைநாட்டிய நூல்.

"வேதாந்த சங்கிரகம்". இது உபநிடத தத்துவங்களை விவரிக்கின்றது

வேதாந்த சாரம், மற்றும், வேதாந்த தீபம் : இவை பிரம்ம சூத்திரத்தைப்பற்றிய சிறிய உரைகள்.

கீதா பாஷ்யம். இது கீதைக்கு விசிட்டாத்துவைதத்தையொட்டி எழுதப்பட்ட உரை.

நித்யக்கிரந்தங்கள். அன்றாட வைதீகச்சடங்குகளும், பூசை முறைகளைப் பற்றியது.

கத்யத்ரயம். இவை மூன்று உரைநடை நூல்கள். சரணாகதி கத்யம் பிரபத்தி என்ற சரண்புகுதலைப் பற்றியது. ஸ்ரீரங்க கத்யம் ரங்கநாதப் பெருமானை தன்னை தாசனாக்கிக் கொள்ளும்படி வேண்டுவது. வைகுண்ட கத்யம் மகாவிட்டுணுவின் இருப்பிடமான வைகுண்டத்தை நேரில் பார்ப்பதுபோல் விவரிப்பது.

## ஸ்ரீ இராமானுஜரை எப்படி அழைப்பது:

இராமனுஜரை யதிராஜர் என அழைத்தனர். யதி என்ற சொல் துறவி என்று பொருளுடையது. ராஜர் எனில் அரசன் யதிராஜர் எனில் துறவிகளில் தலைமைப் பண்புடையவர் என்பது பொருள். பிரம்ம

சூத்திரத்திற்கு வியாக்கியானங்களை எழுதி பாஷ்யம் அருளியதால் பாஷ்யக்காரர் என்று அழைக்கப்படுகிறார்.
ஸ்ரீவில்லிப்புத்தூர் கோயிலுக்கு இராமானுஜர் சென்ற போது பக்தர்கள் அண்ணார் என்று அழைத்தனர்.
இராமானுஜர் பிட்சைக்குப் போகும்போது ஆண்டாளின் பாசுரங்களைப் பாடிச் செல்வது வழக்கம். இதனால் அவர் திருப்பாவை ஜீயர் என்று திருவரங்கத்து மக்களால் அழைக்கப்பட்டார்.
திருக்கோஷ்டியூர் கோவில் கோபுரத்தின் மேல் ஏறி அனைவருக்கும் திருமந்திரத்தை அருளியதால் பக்தர்கள் பெருமாளாகவே அவரை பாவித்து எம்பெருமானார் என்றழைத்தனர்.
திருப்பதி ஏழுமலையானுக்கு சங்கு, சக்கரம் வழங்கியதால் அப்பனுக்கு சங்கு ஆழி அளித்த பெருமான் என்று அழைக்கப்பட்டார்.
ஸ்ரீரங்கம் கோயில் உடைமைகளை சிறப்புற நிர்வாகம் செய்ததால் இராமானுசரை "உடையவர்" என்று போற்றி வணங்கினார்கள்.

## ஸ்ரீ இராமானுஜர் ஒரு சமத்துவ ஞானி:

ஸ்ரீ இராமானுஜர் சிறந்த வேதாந்தி மட்டும் இல்லாமல் பெரிய நிர்வாகியாகவும் இருந்தார். ஸ்ரீரங்கம் கோயிலின் நிர்வாகத்தை ஏற்று அதை முற்றிலும் சீர்படுத்தி அன்றாடம் நடக்கவேண்டிய ஒழுங்கு முறைகளை உருவாக்கினார்.

ஸ்ரீ இராமானுஜர் வைணவத்தின் பெருமைகளை இந்தியா முழுவதும் சுற்றுபயணம் செய்து பரவச்செய்தார். மற்ற மதத்தாருடன் எதிர்வாதம் புரிந்து அவர்களை வைணவத்திற்கு வழிப்படுத்தினார். பல வைணவ மடங்களை நிறுவினார். சாதி பேதம் பாராமல், வைணவம் சார்ந்த ஆண், பெண் ஆகிய இருபாலரையும் தமிழ் பாசுரங்களை ஓதவும், வைணவ மதச்சின்னங்களை அணியவும் ஏற்பாடு செய்தார்.

ஸ்ரீ இராமானுஜர் மக்களிடையே ஜாதி, குலம் என எந்த வேறுபாடும் இல்லையென்றும், இறைவனை அடையும் தகுதி அனைவருக்கும் உண்டு என்று கூறும் சமநோக்குச் சிந்தனை கொண்ட சமத்துவ ஞானியாகவே வாழ்ந்தார்.

எல்லா ஆன்மாக்களும் ஒரே விதமான தன்மை கொண்டவை; கடவுளின் முன் அனைவரும் சமம்; பக்தி அனைவருக்கும் பொதுவானது என்ற இராமானுஜரின் சிந்தனை என்றும் நிலைத்து நிற்கும். அவரது கொள்கைகள், வழிகாட்டுதல், போதனைகள் ஆகியவற்றை இன்றைய சமுதாயத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.


## சமத்துவத்திற்கான ஸ்ரீ இராமானுஜரின் சிலை:

இராமானுஜரின் சமத்துவக் கொள்கையைப் போற்றும்படியாகவும், அவரது ஆயிரமாண்டு நிறைவு பெற்றதை கொண்டாடும் வகையில் அவரது சிலை தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் அருகே முச்சிந்தல் சின்ன ஜீயர் ஆசிரமத்தில் 45 ஏக்கரில் ரூ.1,000 கோடியில் தாமரை மலர் மீது தியானத்தில் அமர்ந்த நிலையில் இராமானுஜர் சிலை 216 அடியில், 120 கிலோ தங்கம் சேர்த்து ஐம்பொன்னாலான பிரம்மாண்ட சமத்துவ சிலையை நிறுவியதோடு, அங்கு 108 வைணவ திவ்ய தேச சன்னதிகளையும் அமைத்துள்ளனர். இந்த சிலையானது இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய சிலை என்ற பெருமையை பெறுகிறது. இதனை அமைக்க 2014ஆம் ஆண்டில் திட்டம் உருவாக்கப்பட்டது. இச்சிலையை நமது பிரதமர் நரேந்திர மோடி 2022 பிப்ரவரி 5ஆம் தேதி திறந்து வைத்தார்.



## சிலையின் சிறப்பம்சங்கள்:

பெருமாளின் 108 திவ்ய பிரதேசங்களை குறிக்கும் வகையில் 108 அடி உயர ராமானுஜர் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. தாமரை மலர் மேல் ராமானுஜர் சிலை அமரவைக்கப்பட்டுள்ளது. இந்த தாமரை மலர் பீடத்தின் உயரம் 27 அடி, மொத்த மேடையின் உயரம் 54 அடி ஆகும். அதற்கு பத்ரபீடம் என பெயரிடப்பட்டுள்ளது. பத்ரபீடத்தில் 54 தாமரை இதழ்கள், அவற்றின் கீழ் 36 யானை சிற்பங்கள், அல்லி இதழ்களில் 18 சங்குகள், 18 சக்கரங்கள், சிலைக்கு அருகில் ஏற 108 படிகள் ஆகியவை உள்ளன. இந்த பத்ம




பீடத்தின் மீது இராமானுஜருக்கு 108 உயரத்தில் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இதில் திரிதண்டியின் உயரம் மட்டும் 135 அடியாகும். பத்ரவேதியுடன் இராமானுஜருக்கு மொத்தம் 216 அடி பஞ்சலோக சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சிலைக்கு முன் செயற்கை நீர் வீழ்ச்சி தூண் அமைக்கப்பட்டுள்ளது. இதில் யானைகள், அதற்கு மேல் அன்னப்பறவை சிலைகள் அமைக்கப்பட்டு, தாமரை மலர் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தாமரை மலரில் இருந்து இராமானுஜரின் சிலை வருவது போல் அமைக்கப்பட்டு, அதற்கு அபிஷேகம் நடப்பது போலவும் உருவாக்கி உள்ளனர். தியான நிலையில் அமர்ந்திருக்கும் பஞ்சலோக இராமானுஜர் சிலை 120 கிலோ கிராம் தங்கத்தால் மேற்பூச்சு பூசப்பட்டுள்ளது. இது இராமானுஜர் 120 ஆண்டுகள் வாழ்ந்ததை என்பதை நினைவு கூறுகிறது. இந்த பிரம்மாண்ட சிலை தவிர, மேலும் 108 திவ்ய தேசங்களில் உள்ள மாதிரி கோயில்கள் கற்களால் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஹோய்சாலக் என்ற கட்டக்கலை பாணியில், 468 தூண்கள், கலைநயமிக்க சிற்பங்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இதை தவிர, இந்த வளாகத்தில் வேத மின்னணு நூலகம், ஆராய்ச்சி மையம், ஸ்ரீ இராமானுஜரின் பல படைப்புகளை விவரிக்கும் கல்விக் கூடம் ஆகியவையும் அமைந்துள்ளன.

மற்றும் கருந்தரங்கை நடத்துவதற்காக பிரம்மாண்ட அரங்கம், திரையரங்கம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

இச்சிலையை பார்வையிட நாடு முழுவதும் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர்.

ஸ்ரீ இராமானுஜரின் போதனைகள் என்பது சாஸ்திரங்களுக்குள் மட்டும் அடங்கி விடாமல், இந்தியர்களின் பக்திக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே அமைந்துள்ளது. பெருமாளுக்கு அடியார்கள் அனைவரும் ஒன்றுதான் என்ற புரட்சிக் கருத்தினைக் கூறிய ஸ்ரீ இராமானுஜரை வணங்கி வழிபடுவோம்.

ஸ்ரீ இராமானுஜர் காயத்ரி
“ஓம் ராமாநுஜாய வித்மஹே
ஸ்ரீ தாசரதாய தீமஹி
தன்னோ சேஷ ப்ரசோதயாத்”
ஓம் நமோ நாராயணாய நமஹ!! ஸ்ரீமதே ராமானுஜாய நமஹ!!!

# ஆன்மீக கேள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும்...?



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

## பாகவதம், வைணவம் என்ற சொல் எப்போது வந்தவை?

குப்தர்கள் காலத்தில் பாகவதமும், ஐந்தாம் நூற்றாண்டின் மத்தியிலே வைணவர் என்ற சொல் வந்ததாகவும் சரித்திர நிபுணர்கள் கூறுகிறார்கள்.

## வாசுதேவன் என்ற பெயர் பகவானுக்கு எப்படி வந்தது?

பகவானே அதனை இப்படிக் கூறியுள்ளார்.

“சூரியனைப் போன்று நான் என் கண்களால் எல்லா உலகையும் காண்கிறேன். மேலும் நான் எல்லா உயிர்களையும் காக்கிறேன். எனவே நான் வாசுதேவன்” என.

## நான்காம் பிறையை பார்க்கக் கூடாததென்கிறார்களே?

அது ஒரு காரணமாகவே கூறப்படுகிறது.

கணபதி ஒரு சமயம் வயிறு முட்ட கொழுக்கட்டை, வடை இவற்றை உண்டு விட்டார். முன்பே பருத்த வயிற்றை இயல்பாகக் கொண்ட விநாயகர், அதிகமாய் சாப்பிட்டதால் வேகமாய் நடக்காமல் அசைந்து, சாய்ந்து நடக்கும் நிலை! இவ்வாறு கணபதி நடந்து வருவதைக் கண்டு விட்ட சந்திரபகவான் “குபுக்“கென சிரித்து விட்டார். அதனால் கோபம் கொண்ட விக்னேசுவரர், ஏதோ சாபங்கொடுத்து விட்டார் சந்திரனுக்கு. பிறகு சந்திரன் அவரைக் கெஞ்சிப் புலம்பவே, சாப நிவர்த்தியை இப்படி அருளிவிட்டார் கணபதி.

“நான்காம் பிறை சந்திரனை தரிசிப்பவர்கள் நான் கொடுத்த சாபத்தின் துன்பத்தை ஏற்கட்டும்” என.

ஏனென்றால் சந்திரன் பிள்ளையாரை கேலி செய்தது நான்காம்பிறை உதயநாளில்தான்.

## இறைவனை வித்தோபாவாக வழிபட்டது யார்?

மகான் நாமதேவர்தான் பகவான் விஷ்ணுவை வித்தோபாவாக வழிபாடு செய்தவர்.

மராத்திய மொழியில் அநேக பக்தி பாடல்களை இயற்றிய அந்த பக்தர், ஒரு சலவைத் தொழிலாளியால், ஆற்றில் மிதந்து வந்த பெட்டியில் குழந்தையாக இருக்க, கண்டுபிடிக்கப்பட்டவராவார். அக்குழந்தை அடிக்கடி விட்டல் பெயரைச் சொல்லவே, அந்தத் தொழிலாளி அதற்கு ‘நாமா“ என பெயர் சூட்டினார்.

நாமதேவர் 1350ம் ஆண்டில் பகவானின் திருக்கமலத்தை அடைந்தார்.

## பகவத்கீதை குறித்தான சுவையான சம்பவம் உண்டா?

எத்தனையோ சுவாரசிய நிகழ்வுகள் கீதை தொடர்பாக உண்டு. அதில் இது ஒன்று.

பாரதப் போர் நடந்து முடிந்து விட்டது. ஒரு நாள்

பகவான் கண்ணனும், அர்ஜுனனும் உற்சாகமாக உலக விஷயங்கள் குறித்து உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அர்ஜுனனுக்கு ஒரு விபரீத ஆசை தோன்றியது. திரும்பவும் கிருஷ்ணர் வாயில் இருந்தே பகவத் கீதையை மீண்டும் கேட்கலாமே என தன் விருப்பத்தை அவன் பரமாத்மாவிடம் தெரிவித்த போது அவர் என்ன சொன்னார் தெரியுமா?

"அர்ஜுனா! நான் உனக்கு கீதையை அருள்கையில், மிக உயர்ந்த யோக நிலையில் இருந்தேன். இப்போது அப்படியில்லை. எனவே மீண்டும் என்னால் அது போல சொல்ல இயலாது" எனக் கூறி மறுத்துவிட்டார்.

இந்த சம்பவம் குறித்தான சுலோகம் 10 - 13 ஆக மகாபாரதம் அஸ்வமேத பர்வதத்தில் இடம் பெற்றுள்ளது.

## வானப்பிரஸ்தம் என்பது எதைக் குறிக்கும்?

தனது குடும்ப சமுதாய அத்தனை பொறுப்புகளையும் முடித்துக் கொண்ட கிரகஸ்தன், தான் தனியாகவோ, அல்லது தன்னுடன் அதற்கு விருப்பப்பட்டு வரும் மனைவியுடனோ வனப்பகுதிக்குச் சென்று எளிய உயிர் வாழத்தக்க உணவு பழக்கங்களை மேற்கொண்டு இறைவழிபாட்டை தொடர்ந்து மேற்கொள்ளலே வானப் பிரஸ்தமாகும்.

"காடு வாவா என்கிறது; வீடு போ போ என்கிறது" என்பது ஒரு தமிழ்ப் மொழி.

## யமம் என்றால்...?

யமம் ஐந்தினைக் கொண்டது. கொல்லாதிருக்கும் அகிம்சை, சத்தியம் எனும் பொய் அகற்றல், அஸ்தேயமெனும் திருடாமை, புலனடக்கமாகும் பிரம்மசர்யம், அஸங்கிரகம் என்ற தேவையற்ற சொத்துக்கள் சேர்த்துக் கொள்ளாத எளிமை ஆகியவைகளே 'யமம்" என்பது.

## நீதி சாத்திரம் உரைக்கும், கூடாதவைகள் எவை?

"அறிவற்றவர்களை விரோதித்துக் கொள்ளல், தீர விசாரணையின்றி தீர்ப்பளித்தல், ஆராய்ந்து பார்க்காது நீதி கூறல், ஆராய்ந்து நோக்காது பிறருக்கு உதவி புரிதல்" ஆகிய கூடாதவற்றை மனிதன் கைவிட வேண்டும் என்கிறது நீதி சாத்திரம்.

## கர்ம விதிகள் என்றால்...?

ஒவ்வொரு இயக்கத்துக்கும், சக்திக்கும் சமமான எதிர் இயக்கமும், எதிர் சக்தியும், எதிர்விளைவும் இருக்குமென்பது அறிஞன் நியூட்டனின் 3ஆம் விதி. இதைப் போலவே மனிதனுடைய சிந்தனையும், உணர்வும் இன்பதுன்பமாகிய எல்லாவற்றிலும் அவனுடைய ஒவ்வொரு எண்ணமும், செயலும், எதிர்மறையான ஆனால் சம அளவிலான விளைவுகளை உண்டாக்குகின்றன. இதைக் கூறுகின்ற விதியே "டுயறந ழக முயசஅய" எனும் கர்ம விதியாகும்.

நாம் பிறருக்கு நன்மை செய்தால், நமக்கு நன்மைதான் உண்டாகும். மற்றவர்களுக்கு நாம் துன்பம் விளைவிக்க, கிடைப்பது நமக்குத் துன்பமே. இதற்கு இறைவன் பொறுப்பேற்க மாட்டார். மனிதன் கொண்ட இயற்கை சுபாவமே பொறுப்பு ஏற்க வேண்டும்.

இக்கருத்தைக் கூறியவர் ஆன்மீக உலகின் ஒரு பிரபல மனிதர்!

## சொல்லுக்கு சக்தி உண்டா?

அவர் ஒரு புலவர். வறுமையின் பிடியில் சிக்குண்டவர். பசிக்கொடுமையால் யாருக்கும் ஈயாத குணங்கெட்ட செல்வந்தரான சேஷன் என்பவனிடம் போய் வீசம் பணம்தான் கேட்டார்.

வீசம் என்பது ஒரு பணத்தில் 16 சதவீதமே! அந்த கணக்கு வகைகள் இப்போது அதிகம் வழக்கத்தில் இல்லை.

தன்னை நாடி வந்த புலவர் வாக்கு பலிக்கும் தன்மை கொண்டவை என்பதும், அறம் பாடும் திறனும் அவர் கொண்டவர் என்பதையும் அந்தப் பணக்காரன் அறிந்திருக்கவில்லை.

"என்னிடம், தங்களுக்கு வீசம் பணம் தர பணமே இல்லை" என செல்வந்தன் சேஷன், அப்புலவரிடம் கூறிய உடனேயே, அவன் அபாரமாக பொய் சொல்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டார் புலவர்.

சட்டென்று கோபமான புலவர், "வீசம் பணம் தராத சேஷா! வீரியன் பாம்பு கடித்து சா! சா!" என சாபம் கொடுத்து விட்டார்.

அறம்பாடும் வாயாயிற்றே! உடனே பலித்து விட்டது. அன்றே எங்கிருந்தோ வந்த வீரியன் பாம்பு சேஷனைத் தீண்ட, அவன் மரணமடைந்து விட்டான்.

# அருள்மிகு
# ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்

அம்பிகை பூலோகத்தில் மானிடப் பெண்ணாகப் பிறந்து காவிரி நீரில் லிங்கம் பிடித்து வழிபட்டாள். சிவன் அந்த லிங்கத்தில் எழுந்தருளி அம்பிகைக்கு காட்சி தந்தார். அம்பிகையால் நீரில் லிங்கம் உருவாக்கப்பட்ட ஸ்தலம் என்பதால், இது பஞ்சபூதங்களில் நீர் ஸ்தலமானது. ஜம்பு என்னும் முனிவர் இங்கு சிவனை வேண்டி தவமிருந்தார்.

சிவன் அவருக்கு காட்சியளித்து நாவல்பழம் பிரசாதமாக வழங்கினார். நாவல் பழ பிரசாதத்தின் மூலம் ஜம்பு முனிவர் முக்தி பெற்றார். நீரில் உருவாக்கப்பட்ட லிங்கம் நாவல் மரத்தின் கீழ் அமைந்தது, எனவே சிவன் ஜம்புகேஸ்வரர் என பெயர் பெற்றார்.


பஞ்சபூத ஸ்தலங்களில் நீர் தத்துவ ஸ்தலம் என்பதால், உடலில் உயிரணு குறைபாடு உள்ள ஆண்கள் மற்றும், குழந்தை பிறப்பில் தடை உள்ள ஆண்கள் இதைப்பற்றி உள்ள நாட்களில் இக்கோவிலை தரிசிப்பதன் மூலம் குறைபாடுகள் நீங்கி புத்திர பாக்கியம் பெறுகின்றனர்.

ஜம்புகேஸ்வரர் மற்றும் அகிலாண்டேஸ்வரியை தரிசித்துவிட்டு கோபுர தரிசனம் செய்வது மிகவும் சிறப்பு. கோபுர புகைப்படத்தை நீங்கள் அதிக நேரம் பார்க்கும் இடத்தில் வைத்து வழிபடுவதன் மூலம் குறைபாடுகள் வேகமாக நீங்கி பயனடைய முடியும். ஜம்புகேஸ்வரருக்கும், அகிலாண்டேஸ்வரிக்கும் வஸ்திரம் படைத்தும், சிவனுக்கு வில்வமும், அம்பாளுக்கு மலர்களும் படைத்து தரிசனம் செய்வது மிகவும் சிறப்பு.

இந்த ஸ்தலத்தில் அம்பாள் மாணவியாக இருந்து சிவனிடம் கற்றறிந்தார். சிவன் குருவாக இருந்து அம்பாளுக்கு உபதேசம் செய்தார். அம்பாளின் அருளால் கோவிலை தூய்மையாக வைத்திருக்கும் பக்தர் பிரபலான கவியானார்.

அவரே பிற்காலத்தில் காளமேகப்புலவர் என அழைக்கப்பட்டார்.

எனவே ஆடி மாதம் வரும் வெள்ளிக் கிழமைகளில் அம்பாளுக்கு வெற்றிலை பாக்கு படைத்து மாணவர்கள் வழிபட்டால் சிறந்த கல்வி அறிவு மற்றும் வாழ்வில் உயர்வு பெற முடியும். இந்த ஸ்தலம் அமைந்துள்ள இடம் திருவானைக்காவல், திருச்சி மாவட்டம், தமிழ்நாடு-620005.





விஜய்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்


## அற்புத மகான்

# ஷீரடி சாய்பாபா

## வருமுன் காப்போம்!

“இறைவன் எப்போதும் உங்களுடனே இருக்கிறார். உங்களைச் சுற்றியோ, அருகிலோ, பக்கவாட்டிலோ அவர் இருக்கிறார். “கடவுளை எப்போதும் மறக்க மாட்டேன். யார் எதிர்த்தாலும் உண்மையைக் கைவிடேன். எதற்கும் அஞ்சேன்” என்ற மூன்று லட்சியங்களையும் தம் மனதில் விதைத்துக் கொண்டு வாழுங்கள்.”

-சாய்பாபா



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

“என்ன சாஹேப் நாளை தாங்கள் எங்கோ சுற்றுப்பயணம் மேற்கொள்கிறீர்களாமே?” - இப்படி தன் நண்பர் ஒருவர் கேட்க... பாலா சாஹேப் மிரீகர், ”ஆமாம்! சீதலிக்குப் பயணமாகிறேன். அங்கு போகும் வழியில் உள்ள என் இஷ்டதெய்வமான சாய் மகராஜ் தரிசனத்தை ஷீரடியில் பெறலாம் என்ற எண்ணமும்கூட இருக்கிறது...” என்று பதில் சொன்னார்.

இவர், கோபர்காவின் மம்லதாரான சர்தார் காகா சாஹேப் மிரீகரின் மகனாவார். அவரது நண்பர் விடைபெற்று சென்றதும், தன்னுடைய பயணப் பெட்டிகளைத் தயார்செய்ய, தன்னுடைய வீட்டுக்குள் பாலா சாஹேப் நுழைந்தார்.

பாலா சாஹேப் மிரீகர் சீதலிக்குச் செல்லும் வழியில், ஷீரடியில் உள்ள தனது பிரியமான தெய்வத்தைக் கண்குளிர தரிசித்து மகிழ்ந்தார். பின்னர், சாய்பாபா அமர்ந்திருந்த “துவாரகமயி” யில் அவருக்கு பயபக்தியுடன் சாஷ்டாங்கமாக நமஸ்காரமும் செய்தார்.

தனது ஆத்ம பக்தன் பாலா சாஹேப்புக்கு கனிவோடு ஆசிகள் வழங்கிய ஷீரடிநாதன், ”இதோ... இந்த துவாரகமயி, நம் அன்னையைப் போன்றவள்.

தனது மடியில் இடம்பெறும் அத்தனை குழந்தைளின் இடர்பாடுகளையும் ஆபத்துகளையும் போக்கும் கருணை உடையவள். இந்தத் தூய தாயின் மடியில் நாம் ஒரே ஒருமுறை அமர்ந்துவிட்டால் போதும்...
அவ்வாறு அமர்ந்தவனுடைய அனைத்து துன்பங்களையும் நீக்கி, தனது நிழலில் இளைப்பாறுபவர்களுக்கு மிகப்பெரும் ஆனந்தத்தை அளிப்பாள் அவள்...” என அருளினார்.

பிறகு பாலா சாஹேப் தனது சீதலி சுற்றுப்பயணத்தை தொடங்குவதற்காக சாய்பாபாவிடம் விடை கோருகையில், அம்மகான் உதியை பாலா சாஹேப்புக்கு பிரசாதமாக வழங்கிவிட்டு, அவருடைய தலையில் தனது பொற்கரங்களை வைத்து ஆசீர்வதித்து, “”உமக்கு லம்பா பாவைத் தெரியுமா? அதான், பாம்பு... இப்படி படம் எடுக்குமே!” என பாம்பு போன்று கைகளால் சைகை காட்டினார். ”ஆனால், எந்த பயங்கரப் பாம்புகளும் துவாரகமயி முன்னால் அடங்கி விடுமாக்கும்!”
என சாய்பாபா திடீரெனக் கூற, பாலா சாஹேப்புக்கும் அன்று அங்கே பாபா தரிசனம் பெற வந்தவர்களுக்கும் ஒன்றுமே புரியவில்லை.

பாபாவின் துவாரகமயி இருப்பிடம் தாண்டி, சற்று தள்ளி பாலா சாஹேப் நடக்கத் துவங்க... ஷீரடி மகராஜ் அவரைக் கூப்பிட்டு, ”நம்ம ஷாமாவையும் சீதலி பயணத்துக்கு உடன் அழைத்துச் செல்லுங்கள்!” என்று சொல்ல, ஷாமாவும் மறுவார்த்தையின்றி உடனே பாலா சாஹேப்புக்குப் பயணத் துணையாக அங்கிருந்து கிளம்பிவிட்டார்.

“எதற்கு பாவம், ஷாமாவுக்கு வீண் அலைச்சல்?“ என்ற எண்ணத்தில், ”ஷாமா... நீங்கள் பாவம், அலைய வேண்டாம்... நானே பார்த்துக் கொள்கிறேன். பாபாவுக்கு உமது பணிவிடைகள் தேவை!” எனக் கூறி ஷாமாவை அனுப்பிவிட்டார் பாலா சாஹேப்.

பாபாவிடம் திரும்பிய ஷாமா, பாலா சாஹேப் தனது உதவியை அன்புடன் மறுத்துவிட்டதை சாய்பாபாவிடம் தெரிவித்தார். ”அப்படியா?!” என்ற பாபா, ”சரி... போக வேண்டாம். எதெது எப்படி நடக்க வேண்டும் என்று உள்ளதோ, அது அப்படியே நடக்கும். நன்மையானவற்றைக் கூறல் நம் கடமை...” என்று சொல்லி, தன்னைத் தரிசிக்க வந்தவர்கள் பக்கம் தனது பார்வையைத் திருப்பினார் ஷீரடிநாதன், கொஞ்ச தூரமே சென்றிருப்பார் பாலா சாஹேப்.

அவருக்குள் ஒரு மன உறுத்தல், “பாபாவே ஷாமாவை அனுப்புகையில், நாம் அவரது சேவையை நிராகரிப்பது தவறோ?“ என்று நம் மனம் என்றும் ஒரு குரங்காயிற்றே! மீண்டும் மசூதிக்குத் திரும்பிய பாலா சாஹேப், ஷாமாவைக் கூப்பிட்டு, ”பாபாவின் விருப்பப்படி தாங்கள் என்னுடன் பயணத்துக்கு வாருங்கள்...” என்று அழைப்பு விடுத்தார்.

“சரி... நான் பாபாவிடம் உத்தரவு பெற்று வருகிறேன்!” என்று ஷாமா சொல்லிவிட்டு, சாய்பாபாவிடம் சென்று பாலா சாஹேப்பின் விருப்பத்தைத் தெரிவித்தார். இதைக் கேட்டதும் சற்று மர்மப் புன்னகை பூத்த ஷீரடிநாதன், ஷாமா பயணம் செல்ல அனுமதித்தார்.



சாஹேப்பும் ஷாமாவும் ஒரு குதிரை வண்டியில் சீதலி நோக்கித் தங்கள் பயணத்தை ஆரம்பித்தனர். அவ்வூருக்குச் செல்கையில், இரவு நீண்ட நேரமாகிவிட்டது. அங்குள்ள அனுமன் கோயிலில் அவர்கள் தங்கினர். அப்போது ஆலய அலுவலர்கள் இல்லாததால், பாலா சாஹேப் அங்குள்ள பாய் ஒன்றில் அமர்ந்து, நேரத்தைக் கழிப்பதற்காக அங்கிருந்த செய்தித்தாளைப் படிக்கத் துவங்கினார்.

படிக்கும் சுவாரஸ்யத்தில், தனது இடுப்பின்மீது கிடந்த மேல்வேட்டியில் எங்கிருந்தோ வந்த பெரிய பாம்பு ஒன்று ஓசைப்படாமல் படுத்திருந்ததை பாலா சாஹேப் அறிந்திருக்கவோ, உணரவோ இல்லை. கொஞ்ச நேரம் அமைதியைக் கடைப்பிடித்த அந்நாகம், பிறகு என்ன நினைத்துக் கொண்டதோ... மெள்ள சரசரவென நெளிந்து வேட்டியை விட்டு புறப்படத் தொடங்கியது.

அப்போது அங்கு தற்செயலாக வந்த கோயில் அலுவலகப் பணியாள். ஊர்ந்து செல்லும் பாம்பைப் பார்த்துவிட்டார். விளக்கொளியில், உடனே அனைவரையும் எச்சரிக்கும் விதமாக, ”பாம்பு... பாம்பு..பு..!” எனக் கூக்குரலிட்டார். பாம்பைக் கண்ணால் கண்டுவிட்ட பாலா சாஹேப் நடுங்க, ஷாமா அப்படியே திகைத்து நின்றுவிட்டார்.
அதற்குள் அந்த அனுமன் கோயிலில் கூடியிருந்த பக்தர்கள், அந்த இடத்தில் குழுமிவிட்டனர். பிறகு, அந்தக் கூட்டத்தினர் கொடிய நச்சு பாம்பைக் கஷ்டப்பட்டு பிடித்து, அடித்து கொன்றுவிட்டனர்.

அப்போதுதான் பாலா சாஹேப்புக்கும் ஷாமாவுக்கும் “பாபா தரிசனத்தின்போது சம்பந்தமில்லாமல் பாம்பு குறித்து நமக்கு ஏன் எச்சரிக்கை செய்தார்?“ என்பதற்கான காரணம் இருவருக்கும் புரிந்தது. இருவரும் கண்ணீர் மல்க. பாபா குடியிருந்த ஷீரடி திசை நோக்கி, தங்கள் இரு கரங்களையும் குவித்து, தங்களது மனமார்ந்த நன்றிகளைப் பாத காணிக்கை ஆக்கினார்கள்.
எவன் ஒருவன் என்னிடம் பரிபூரண சரணாகதி அடைகிறானோ, அவனை நான் மரணத்தின் பிடியிலிருந்து விடுவிப்பேன்“ என்ற ஷீரடிநாதனின் அருளுரையை இங்கே நினைத்துப் பார்க்க வேண்டிய ஒன்றாகிவிட்டது.





ரா. பன்னீர்செல்வம்

அரிய ஆன்மீக தகவல்

# திருவொற்றியூர்

சென்னையின் வடபுறத்தில் சென்னையை யொட்டி அமைந்துள்ள திருவொற்றியூர் என்னும் அழகிய கடற்கரை நகரம்.

சிறு நகரமான இத்திருத்தலம் இறையருள் நிரம்பப் பெற்று புனித தலமாக விளங்குகின்றது. இங்கு அமையப்பெற்றுள்ள வடிவுடையம்மன் ஆலயம் பல வரலாற்று, புராண நிகழ்வுகளை உள்ளடக்கியதாய் புகழ்பெற்று விளங்குகிறது.

மதுரை, நெல்லை, சங்கரன்கோவில் போன்ற திருத்தலங்களில் சுவாமி பிரதானமாக இருந்தாலும் இங்குள்ள அம்மனின் பெயரைக் கொண்டே மீனாட்சியம்மன், கோமதியம்மன், காந்திமதியம்மன் என்ற பெயர்களில் இவ்வாலயங்கள் அழைக்கப்படுகின்றன. அதேபோல, திருவொற்றியூர் ஆலயத்தில் ஆதிபுரீஸ்வரர் என்ற பெயருடன் இறைவன் சிறப்பு பெற்று விளங்கினாலும் இவ்வாலயம் வடிவுடையம்மன் ஆலயம் என்றே வழங்கப்பட்டு வருவது சிறப்பம்சமாகும்!

இவ்வாலயத்தில் உள்ள மகிழ மரத்தடியில் இறைவனே சுந்தரரின் காதலுக்கு தூது சென்று சங்கிலி நாச்சியாரை அவருக்கு திருமணம் செய்து வைத்த நிகழ்வு அரங்கேறியது, என்பது இவ்வாலய சிறப்புகளில் ஒன்று.

பிரளய நீரை ஒற்றி எடுத்து இறைவன் ஈசன் பிரம்மனுக்கு உதவிசெய்து அருளிய திருத்தலம் என்பதால் “திரு” ஒற்றியூர் என்ற திருவொற்றியூர் எனப் பெயர் பெற்றது.

கம்பர் கவியெழுத அமர்ந்தபோது வெளிச்சம் போதாமையால் அவருக்கு வெளிச்சம் கிடைக்க, தீப்பந்தம் ஏந்தி சேவை செய்த தேவியான வட்டப்பாறையம்மன் என்னும் தெய்வம் இவ்வாலயத்தில் தனிச்சந்நிதி கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கிறாள்.

இத்தல இறைவனான படம்பக்கநாதர் என்கிற புற்றிடங்கொண்டீசருக்கு மூன்று நாட்கள் தவிர, வருடத்தின் மற்ற நாட்கள் அனைத்திலும் வெள்ளி கவசம் சாத்தப்பட்டு காட்சிதருகிறார்.

இத்தலத்து அன்னை வடிவுடையம்மன், சென்னையில் வள்ளலார் வசித்தபோது, அவருடைய அண்ணியாரின் தோற்றத்தில் தோன்றி உணவு படைத்து அவருடைய பசியையாற்றிய அன்னையாவாள்!

இத்தலத்தில் நடராஜப் பெருமானின் வடிவத்தில் தியாகராஜர், அமர்ந்த கோலத்திலிருந்து அஜபா நடனம் நிகழ்த்துவதாய் ஐதீகம்!



மகத்தான மகான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்!

தங்க புத்திரன்

குரு என்பவர் யார்?
தத்துவத்தை அறிந்து தனது சீடர்களின் நன்மையிலேயே எப்போதும் நாட்டங் கொண்டவரே குரு ஆவார்!

ஏற்றுக் கொள்ளத் தக்கது எது?
தனது குருவின் சொல், ஏற்று நடக்க வேண்டியது அவருடைய சீடனின் பணி!

இவ்வுலகில் புனிதமானவன் யார்?
மனத்தூய்மை கொண்டவனே அவன்!

விஷத்துக்கு சமம் எது?
சீடன் தன்னுடைய குருவிடம் காட்டும் அவமரியாதை.

அமுதமாக செவிக்கு எது உதவும்?
சாதுக்களுடைய உபதேசம்!
இப்படி எண்ணற்ற வாழ்வு தொடர்பு சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு அற்புதமான விடைகளை அருள்கிறார் மஹான் ஆதி சங்கரர் தான் அருளியுள்ள சமஸ்கிருத அற்புத நூலான பிரச்னோத்ர ரத்ன மாலிகா "வில், "கரையற்ற கடல்
சம்சார சாகரம்
இரண்டும் ஒன்றே!
கடக்க அரியவை;
பிறப்பு இறப்பு
முடிவற்ற தொடர்கதை
வாழ்வின் சிறப்பாவிது?
கண்ணா கருணை
காட்டு எமக்கு!
அளிப்பாய் அரிய
பிறவாமை வரம்!

இப்படிப்பட்ட வரத்தை அருளாளன் முராரியிடம் இறைஞ்சுவார் அதே மகான் தனது இந்த பஜகோவிந்தம் அற்புத 21ம் சுலோகத்தில்!

இந்த தத்துவ ஞானி கீழ்க்கண்ட "கா தே காந்தா கஸ்தே புத்ர:

ஸம் ஸா ரோ (அ) யமதீவ விசித்ர
கஸ்ய த்வம் காகுத ஆயாத -
தத்துவம் சிந்தய ததிஹ ப்ராத;

என்ற சுலோகத்தில் உலக மாயை குறித்து புட்டு வைப்பார். அதன் தமிழாக்கமிது!
மணமானதால் அவள்
மனைவி ஆகாள்!
உறவு தந்த
குழந்தை உனக்கு
தராது உரிமை!

நீ உரிமையா?
எவருக்கும் இல்லை!
எங்கிருந்தோ வந்தவனே!
விசித்திரம் மாயை
இரண்டும் இரட்டை பிள்ளை
பரந்த இவ்வுலகிற்கு!

பல உபநிடதங்களுக்கு உரை தந்துள்ள படைப்பாளியான ஞானி ஆதிசங்கரர் தனது கேனோபநிஷத்தில் வரும் மந்திரம் ஒன்றுக்கு உரையளிக்கையில் ஆத்மா பற்றிய குறிப்பாக இது அமையும்.

“அறிவையே தன்னியல்பாக கொண்டது ஆத்மா என்ற மெய்ப்பொருள். அதனால் அது தன்னை தெரிந்துகொள்ள வேறொரு அறிவை எதிர்பார்க்க வேண்டியதில்லை என்று சொல்லப்படுவது சரியில்லை. ஆத்மாவைப் பற்றிய தவறான அறிவும் காணப்படுகிறது; தவிர சரியான அறிவும் காணப்படுகிறது” என்று.

இப்படிப்பட்ட அரும் பொருட்கள் கொண்ட பல நூல்களை உலகிற்கு தந்த ஆதிசங்கர பகவத் பாதாள் குறித்து ஒரு சில சம்பவங்களைப் பார்ப்போம்.

இயற்கை வளங்கொழிக்கும் கேரள மாநிலத்தில் உள்ள காலடி என்ற சிற்றூரில் வாழ்ந்து வந்த சிவபிரானிடம் அதீத பக்தி கொண்ட சிவகுரு என்ற அந்தணருக்கும், பிள்ளைப் பேற்றுக்கு தவங்கிடந்த ஆர்யாம்பாள் என்பவருக்கும் பிறந்தவரே “சங்கரன்” என்ற பூர்வீக நாமங்கொண்ட ஆதிசங்கரர்“.

இறையருளால் பிறந்த சங்கரன் சிறுவயது முதலே அழகிலும், குணத்திலும், அறிவிலும் மிக உயர்ந்தவனாக இருந்தார்.

தனது நான்காம் பிராயத்தில் தந்தையை இழந்த அவருக்கு தாயார் 5ம் வயதில் உபநயனம் செய்வித்தார். உரிய வழக்கப்படி குருகுலவாசம் மேற்கொண்ட சங்கரன் தன் குருமூலம் வேதங்களை நன்கு கற்றுத் தேர்ந்தார்.

குருகுல வாசத்தில் கையேந்தி பிச்சை பெற வேண்டும் என்ற நிதியின் படி பிரம்மச்சாரியான சங்கரனும் அவ்வாறு செய்து வந்தார். சிவனருளால் அவர் பல துதிகளை தானே இயற்றும் திறன் கொண்டிருந்தார்.

ஒரு நாள் “பிட்சை” பெறும் பணியாக சங்கரன், பரம ஏழை ஒரு பெண்மணி வாழ்ந்த வீட்டின் வாயிலில் நின்று “பிட் சாந் தேஹி“ என்று குரல் எழுப்பினார். அன்று துவாதசி திருநாள். வீட்டுக்காரம்மாள் திகைத்துப் போனாள் இக்குரல் கேட்டு. மனம் வேதனையும் பட்டது. காரணம் அவள் வீட்டில் துவாதசி நைவேத்தியத்துக்குள் ஒரு நெல்லிக்கனி மட்டுமே இருந்தது. வேறு யாசிப்பவர்களுக்கு கொடுக்க எதுவுமே இல்லை. துக்கம் தொண்டையை அடைக்க, இல்லை என்று சொல்லாமல் அந்த கனியை சங்கரனின் பிட்சை பாத்திரத்தில் பணிவுடன் சமர்ப்பித்தாள், அவள்.

தன் ஞானதிருஷ்டியால் அப்போது சங்கரன் பெண்மணியின் வறுமை நிலையை அறிந்து கொண்டு, ஸ்ரீ மகாலட்சுமி தேவியை துதித்து பாடினார். அதுவே பிரசித்திப்பெற்ற கனகதாரா ஸ்லோகம்.

என்ன ஆச்சரியம்! அக்கணமே வானிலிருந்து லட்சுமி கடாட்சத்தால் பொன் மழை பொழிந்து அவ்வீட்டில் நிறைந்தது. பரவச உணர்வு பெற்ற ஏழைப் பெண்மணி சங்கரன் காலில் விழுந்து ஆனந்திக்க, செய்தியறிந்த ஊரே திரண்டு அவரை வணங்கி துதித்தது.

வேத சாஸ்திரம் அனைத்தும் படித்து தேர்ந்து, அதிலேயே ஊன்றிப் போய் விட்ட நிலையில் அவருடைய மனம் துறவறத்தில் நாட்டங்கொண்டு விட்டது.
தன் மீது அளப்பரிய பாசங்காட்டும் தாயிடமிருந்து பிரியும் ஒரு வேளைக்காக காத்திருந்தது அந்த துறவு மனம்.

சங்கரன் வசித்துவந்த அக்ரஹார தெருவிற்கு பக்கத்தில் ஆலவாய் என்ற பெயர் கொண்ட பூர்ணா எனும் நதி ஓடிக் கொண்டிருந்தது. அந்த ஆற்றல் தான் தினமும் அவருடைய அன்னை ஸ்னானம் புரிவாள். அன்று தன் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் எப்படி ஆற்றுக்குச் செல்வது என அன்னை வேதனைப்பட்டாள். இந்நிலையை தனக்கு சாதகமான ஒரு சூழ்நிலை ஆக்க சங்கரன் தீர்மானித்துவிட்டார். அப்போது அவரது வயது எட்டே தான்!

தனது தாயை கைத்தாங்கலாக பூர்ணா நதிக்கரைக்கு அழைத்துச் சென்றார் சங்கரன். ஸ்நானம் முடித்து தாய் நதிக்கரையில் புடவை மாற்றிக் கொண்டிருக்கையில் சங்கரன் உற்சாகமாக நீந்தி குளித்துக் கொண்டிருந்தார். தனது பக்தனின் அந்தரங்க உள்ளத்தை அறிந்து கொண்ட விதமாக ஈசுவரன் கொண்ட சங்கல்பம் வேலை செய்யத் தொடங்கிவிட்டது.
எப்படி?

எங்கிருந்தோ பூர்ணா நதியின் மூலையிலிருந்து வெகு வேகமாய் வந்த பெரிய முதலையொன்று நீரில் இருந்த சங்கரன் காலைக் கவ்வி விட்டது பலமாய். அவர் எவ்வளவோ முயற்சித்தும் முதலைப்பிடி இறுக்கமானதாகவே இருந்தது.

சங்கரனின் (போலி!) கூச்சல் கேட்டு, கரையில் இருந்த தாயார் பார்த்தபோது, தனது ஒரே ஆசைப்பிள்ளை முதலையுடன் போராடி கொண்டிருந்தது கண்டு பதைபதைக்க "ஐயோ! ஈசுவரா இது என்ன சோதனை" என அலறினாள், அக்கம் பக்கம் யாருமே இல்லை.

அப்போது சமயோஜிதமாக சங்கரன் "அம்மா! இந்த முதலை என்னை விடுதலை செய்ய ஒரு நிபந்தனை போடுகிறது" என அரும்பாவைனையில் சொன்னார்.

எப்படியோ தன் பிள்ளை தப்பிப் பிழைத்தால் போதும் என்ற மன நிலைக்கு ஆளாகி விட்ட பாசத்தாய் "சங்கரா! நிபந்தனை என்னவானாலும் ஒத்துக்கொள்" என்று கதறிக் கூறினாள்.

"அம்மா! நான் துறவறம் மேற்கொள்ள வேண்டுமாம்" என ஈனஸ்வரத்தில் பதிலளித்தார் சங்கரன்.

"என்னது சன்னியாசம் ஏற்கணுமா" என்று அதிர்ந்து போன அன்னை உள்ளம் தன் பிள்ளை எங்கோ உயிரோடு வாழ்ந்தால் போதும் என எண்ணி விட்டது.

"அப்பா சங்கரா! எதுவானால் என்ன? நீ உயிரோடு இருந்தால் அது போதும்!" என கண்ணீருக்கிடையே கூறினாள்.



அன்னை ஆர்யாம்பாள் இதைச் சொன்ன அடுத்த கணமே முதலை சங்கரன் காலை தன்னிடமிருந்து விடுவிக்க, அவர் வேகமாக தப்பித்து வந்த பாவனையில் தாயை நமஸ்கரித்தார்.

துறவற விருப்பத்தை இளம் வயதிலேயே இந்த முதலை சம்பவம் மூலம் சங்கரன் நிறைவேற்றிக் கொண்டார் தனது தாயின் முழு சம்மதத்துடன்.

அதற்குப்பிறகு இந்தியாவெங்கும் பயணிக்க சங்கர விஜயம் தொடங்கிவிட்டது. அப்போது நாடு முழுவதிலும் நாஸ்தீக வாதம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது.

போலித் துறவிகளெல்லாம் ஆங்காங்கே மக்களுக்கு துர்ப்போதனைகள் தந்து ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தனர்.

இப்படி சங்கரர் திக்விஜயம் புரிந்து வருகையில் நர்மதா நதி பிரவாகமாக பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது.

சங்கரர் தான் கொண்டிருந்த அற்புத சக்தியால் அந்நதியை தன் கமண்டலத்தில் ஏற்றி அடக்கிவிட்டு, மக்களுக்கு அது பயன்படும் வகையில் அதனை கரைக்கு அடங்கும் ஆறாக மாற்றி மீண்டும் பாய வைத்தார்.

சங்கரருக்கு குருவாக அமைந்த அந்த நர்மதா நதிக்கரையில் இருந்த மகான் கோவிந்த பகவத்பாதர் என்பவர். மகா வாக்கியங்களை போதித்து அருளினார் அவருக்கு.

"அனைத்துமே கடவுளின் தோற்றம் தான். மனித ஜீவனாக தன்னை எண்ணிக் கொண்டிருப்பவனும்

உண்மையில் கடவுள் என்கிற ஒரே தத்துவம் தான்” என.

தனது குருநாதர் கட்டளையின்படி சங்கரர் அத்வைத் தத்துவத்தை உலகம் அறிய காசி முதல் கன்னியாகுமரி வரை பயணித்து வெற்றிக் கொடி நாட்டினார். பல ஆன்மீகர்களுடன் வாதம் புரிந்து வெற்றிக்கொடி நாட்டிய மகான் சங்கரருக்கு பல சீடர்கள் அமைந்தனர்.

ஸ்ரீ வியாச முனிவர் அருளிய பிரம்ம சூத்திரம், வேத ரிஷிகள் அருளிய பத்து உபநிஷதங்கள், பகவத் கீதை ஆகிய மூன்று நூல்களுக்கும் உரை தந்த பெருமைக்குரியவர் இந்த ஆதிசங்கரர். இவைகளை “பாஷ்யம்” எனக் குறிப்பிடுவார்கள். இது தவிர மகான் இதன் மூலக் கருத்துக்களை அடிப்படையாய்க் கொண்டு எவரும் புரிந்து கொள்ளும் வகையில் எண்ணற்ற வேதாந்த நூல்களின் படைப்பாளியாவார். “பிரகரண கிரந்தங்கள்” என அவை கொண்டாடப்படுகின்றன.

பிரசித்தமான “கணேச பஞ்சரத்ன ஸ்தோத்திரத்தை இயற்றிய பெருமையும் இம்மகானுக்கு உண்டு.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் உலகப்புகழ்பெற்ற ஐந்து சுலோகங்களைக் கொண்ட மனீஷா பஞ்சகம்” இயற்ற காரணமாக அமைந்த அதிசய நிகழ்விது.

அப்போது காசி மாநகரில் தங்கி மகான் சங்கரர் முகாமிட்டு, கங்கை நீராடி, மக்களிடையே பக்தி உணர்வை தூண்டி வந்த வேளை அது.

ஒரு நாள் மகான் தனது சீடர்கள் புடைசூழ நகரில் வலம் வந்து கொண்டிருந்தார். அச்சமயம் அவர்கள் எதிரே ஒரு புலையரும், புலைச்சியும் ஆளுக்கு இரண்டு என்ற முறையில் நான்கு நாய்களையும் கையில் பிடித்திருந்தனர்.

இந்த வேற்று ஜாதிகாரர்களால் தீட்டு வந்துவிடுமோ என அஞ்சி மகானின் சீடர்கள் அவர்களை தூரப்போ என விரட்டினர். அப்போது அப்புலையன் நகைத்தபடி, “அத்வைதம், அத்வைதம் என முழக்கமிடும் நீங்கள் எங்களை விலகிப் போகச் சொல்லலாமா? இது அந்த சித்தாந்தத்திற்கு முரண்பாடான ஒன்று என ஏன் தோன்றவில்லை? உடல் நமக்கு வேறு வேறு ஆனாலும், நம் உடலுக்கு உள்ளே இருக்கிற பரமாத்மா ஒருவர் தானே? இந்த உடலைப் பற்றிய சிந்தையை விலக்கி விட்டு பரமாத்மாவாக இருக்க வேண்டும் என்று தானே உங்கள் இந்த குருநாதர் உபதேசித்து வருகிறார்.
அப்புறம் ஏன் உங்கள் உடலில் படாமல், எங்கள் உடம்பு இருக்க வேண்டும் எனக் கருதுகிறீர்கள்” என ஏளனமாக கேட்டான்.

உடனே மகான் சங்கரர் வந்து நின்று இப்படி பேசுபவர் நிச்சயம் சாதாரண மனிதரில்லை, அவர்கள் சாட்சாத் அந்த காசிவிசுவநாதரும், விசாலாட்சியுமே தான் என்பதை தன் ஞானதிருஷ்டியால் அறிந்து அவ்விடத்திலேயே பக்தி பூர்வமுடன் இயற்றியருளியது தான் “மனீஷா பஞ்சக ஸ்லோகங்கள்”.

உடனே அதனைக் கேட்டு மகிழ்ந்த புலையனும், புலைச்சியும் அருள்மிகு காசி விஸ்வநாதராயும், அன்னை விசாலாட்சியுமாக காட்சிதர, அவர்கள் கையில் பிடித்திருந்த நான்கு நாய்களும் நான்கு வேதங்களாக மாறிவிட்டன.

மகான் பாடி முடித்ததும் ஈசுவரன் “இயன் மறு உருவான சங்கரா”! வாய்ப்பேச்சில் மட்டும் வேதாந்தம் பேசாது வாழ்விலேயே அதை நீ நடத்திக் காட்டுபவன் என்பதை உலகறியச் செய்யவே இந்த நாடகம் செய்தேன்” எனக் கூறி அனைவரையும் ஆசிர்வதித்து விட்டு ஈஸ்வரனும், ஈஸ்வரியும் மாயமானார்கள்.

இப்படி எத்தனையோ பல அற்புத சம்பவங்களின் கதாநாயகனான ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாள் தனது 32ம் வயதில், பலவித நாட்டிலுள்ள ஷேத்திர ங்களுக்கு விஜயம் செய்தும், மக்களிடையே பக்தி உணர்வையும் தூண்டி வந்த நிலையில் காஞ்சித் தலம் வந்து “ஸர்வ யக்ஞ” பீடத்தை ஸ்தாபனம் செய்தார்.

பிறகு காஞ்சி காமாட்சி ஆலயம் சென்று அன்னையை உளமார வழிபட்டு திரிபுரசுந்தரி வேத பாதஸ்வம்“ என்ற பாடலை இயற்றி துதித்து பாடுகையிலேயே அவர் காமாட்சி தேவியுடன் இரண்டறக் கலந்து விட்டார்!
ஜெய ஜெய சங்கர! ஹர ஹர சங்கர!

# உண்மைகள் சுவை தரும்

# பெருங்காயம்



ஆரூர். ஆர்.சுப்பிரமணியன்

இந்த உண்மைகள் நிகழ்ச்சிக்கு மணமூட்டும் விதமாக, அன்றாடம் நமது சமையலறைகளில் இடம்பெறும் பெருங்காயம் அமைகிறது.

உணவிற்கு ருசியும், மணமும் ஊட்ட வல்ல பெருங்காயம் சிறந்த மருத்துவக் குணத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்றறிய வியப்பு ஏற்படலாம்! மனித உடலின் முக்கிய உறுப்புக்களான குடல் பகுதிகள், மூச்சு மண்டலம், நரம்பு மண்டலம் ஆகியவற்றை பெருங்காயம் ஊக்கப்படுத்தும் சக்தி படைத்துள்ளது.

நமது குடல் பாதித்து உப்புசம் உண்டாகும் பொழுது பெருங்காயம் குடல் கழிவுகளை உடன் வெளிப்படுத்துவதோடு, காலரா, ஹிஸ்டீரியா, காக்கை வலிப்பு போன்ற கோளாறுகளுக்கான சிகிச்சை முறைகளிலும் முக்கிய இடம் பெற்றுள்ளது. இதுமட்டுமன்றி கால்நடைகளுக்கும் வழக்கமாக பாதிப்புகளை உண்டாக்கும் சில நோய்களுக்கு நிவாரண மருந்தாகவும் பெருங்காயம் உதவும். ஆயுர்வேத மருத்துவ முறையில் இப்பொருள் ஹிங்காஷ்டகம் எனும் மருந்து தயாரிக்கையில் முக்கியமான ஒன்றாக ஏற்கப்பட்டுள்ளது.

ஃபெருலா அஸாஃபொடிடா லின் (FERULA ASAFOETIDA LINN) எனும் சரித்திர பெயருள்ள பெருங்காயம் “UMBELUFERAE என ஆங்கிலத்திலும், குடை பூங்கொத்து ரகம் எனத் தமிழிலும் அழைக்கப்படும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தது.

**பெருங்காயம் எங்கிருந்து உற்பத்தியாகிறது?**

இதற்கு கிடைக்கும் பதில் ஆச்சரியத்தை உண்டாக்கலாம்!

ஃபெருலா என்ற இனத்தைச் சேர்ந்த பல்வேறு வகையான நறுமண வகை செடிகளின்

ஆணிவேரிலிருந்தும், தண்டுக் கிழங்கு பகுதியிலிருந்தும் வெளிப்படும் பசை போன்ற பொருளே "பெருங்காயம்"!

குறிப்பிட்ட சீசன் என்றில்லாமல் ஆண்டு முழுமைக்கும் பயன் தரும் இச்செடிகள் காஷ்மீர் தேசத்திலும், மத்தியதரைக்கடல் பகுதி தொடங்கி, மத்திய ஆசியா வரை பரவியுள்ள இடங்களிலும் நிறைய விளைவிக்கப்படுகின்றன. பெருங்காய செடிகளின் உச்சியில் 12.5 முதல் 14 சென்டி மீட்டர் விட்டம் கொண்ட தடித்த ஆணிவேர்களும், காரட் போன்ற வேர்களும் காணப்படும்.

வருடந்தோறும் மார்ச் முதல் ஏப்ரல் மாதம் வரையுள்ள காலங்களில் பெருங்காய செடிகள் பூப்பூக்கும் முன்பாகவே இதன் தண்டுக் கிழங்குகளின் மேல் பாகம் திறக்கப்பட்டு, உச்சிக்கருகில் தண்டு வெட்டி எடுக்கப்படும். அதன் பின்பு வெளியில் தென்படும் பகுதிகளை சுள்ளிகளாலும், மண்ணாலும் உருவாக்கப்பட்ட கூடை போன்ற அமைப்பினால் மூடப்பட்டுவிடும்.

வெட்டப்பட்ட இடத்திலிருந்து பால்போன்ற சாறு ஊறும். சில நாட்களானவுடன், இந்த சாறு ஊறும் பசைப்பகுதி அகற்றப்பட்டு தண்டின் அடுத்த பகுதி வெட்டப்படும். அதிலிருந்தும் மீண்டும், மீண்டும் பசை உற்பத்தியாகிக் கொண்டே இருக்கும்.
இது நின்று போகும்வரை பசை எடுத்தலும், தண்டு வெட்டப்படுவதும் தொடர்ந்துகொண்டே இருக்கும். மூன்று வெட்டுக்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகையில் கிடைக்கும் பசையின் அளவு சராசரியாக ஒரு கிலோகிராம் ஆகும். எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த செய்முறைகளின் போது, பெருங்காயம் பசை உறைப்புடன் வெளியாவதோடு, அதிலிருந்து சகிக்க வொண்ணாத ஒரு துர்க் கந்தம் கிளம்பும். இதனை ஆங்கிலத்தில்
"பிசாசின் சாணம்" என்று பெயரிட்டுள்ளார்கள்.
ஆரம்ப பெருங்காயச் சுவை காரழ், கசகசப்பு தான்!
இப்பெருங்காயத்தில், வர்த்தகப் பெருங்காயம் என்பது மூன்று வகைப்படும் இப்படி - நீர்மம், திரட்டு, பசை என இதில் பரிசுத்தமானது நீர்மம் மட்டுமே.

இதன் நிறம் மங்கல மஞ்சள் மற்றும் சாம்பல் ஆகும். 5 முதல் 30 மில்லி மீட்டர் அளவு கொண்ட தட்டை அல்லது உருண்டையான இவைகள் வகைகளாகப் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு அளவு வில்லைகளும் தரத்திற்கேற்ப நிர்ணயிக்கப்படும்.

பெருங்காயத்தின் இரண்டு முக்கிய வகைகளாக ஹிங்க் மற்றும் ஹிங்ரா உள்ளன. இதில் உயர்ந்ததாக கருதப்படுவது ஹிங்க் தான். காரணம் இதன் நறுமணம் எவராலும் விரும்பப்படுவது தான்! இவை ஈரான், ஆப்கானிஸ்தானிலிருந்து பல கோடிகள் தொகைக்கு இறக்குமதி செய்யப்படுகிறது.

ஈரான் நாட்டு பெருங்காயம் இனிப்பு, கசப்பு என்ற இரண்டு சுவை படைத்தது. பொதுவாக பெருங்காயம் வெளுத்த மற்றும் கருத்த நிறமுடன் கடைகளில் நமக்கு கிடைக்கின்றன. இதில் வெண்மை நிறம் கொண்டது தண்ணீரிலும், கருத்த நிறமான பெருங்காயம் எண்ணெயிலும் கரையும் தன்மை கொண்டவை.

நாம் இதுவரை பார்த்தது கலப்படமற்ற "அசல்" பெருங்காயம் குறித்து.
நமது தந்திரக்கார சில பெருங்காய விற்பனையாளர்கள் இதிலும் தங்கள் கைவரிசையைக் காட்டத் தவறுவதில்லை. எப்படி என பார்க்கலாம்.

பெருங்காயத்தை விற்பனை செய்வதற்கு முன்பு அதில் கோந்து, ரோசின் பிசின், சிவப்பு களிமண், சீமைச்சுண்ணாம்பு, பார்லி, கோதுமை மாவு, உருளைக்கிழங்கு துண்டுகள் இவற்றைச் சேர்த்து அதன் எடையைக் கூட்டி லாபம் சம்பாதிக்கும் கொடுமையும் நடந்துதான் வருகிறது!
நமது வழக்கில் ஒரு பழமொழி உண்டு. "கடலில் கரைத்த பெருங்காயம்" என, சமையற்பொருள்களில் தேவையான அளவு பெருங்காயத்தை சேர்க்க அதன் ருசியும், மணமும் ஊரையே கூட்டி விடும்! ஏன் நம் ஆரோக்கியத்துக்கும் அது சரியாகவே அமையும். நமது தமிழகத்தில் பாட்டி வைத்திய முறையில் பெருங்காயம் பங்கேற்று நற்பலன்களை தந்து வருகிறது.

சிறு உடல் ரணத்திற்கு, பெருங்காயத்துடன், வேப்பிலையும் சேர்த்து மைய அரைத்து, அதன் மீது போட்டு வர நல்ல குணம் கிடைக்கும்.

காது குத்தல் ஏற்பட்டால் கொஞ்சம் பெருங்காயத்தை பொறித்து அதை சற்றுநேரம் தேங்காய் எண்ணெயில் ஊறவைத்து பின்னர் இரண்டு சொட்டுகளை காதில் விட்டால் நிவாரணம் உண்டாகும்.

பெருங்காயம் உடலில் உள்ள வாயுவை உடன் வெளியேற்றுவதோடு நச்சு இருந்தாலும் அகற்றிவிடும் குணங் கொண்டுள்ளது.

வயிற்றுப் பொருமல் கொண்டோர், பெருங்காயத்தை வறுத்து பொடியாக்கி மோரில் அதை கலந்து அருந்தி விட, பொருமல் மாயமாகிவிடும்.
தொடர் இருமலால் அவதியுறும் குழந்தைகளுக்கு, பெருங்காயம் கொஞ்சம் எடுத்து வெந்நீரில் கரைத்து கொடுத்தால், சற்று நேரத்தில் இருமல் நின்று விடும்.

கருப்பை தொடர்பான கோளாறுகளுக்கும் நிவாரணமாக பெருங்காயம் உள்ளது.

பெருங்காயப் பவுடர் 1 அல்லது 2 சிட்டிகை எடுத்து நல்ல நீரில் போட்டு அத்துடன் கொள்ளு தானியம் வேகவைத்த நீரை சில நாட்கள் காலை, மாலை இரண்டு வேளைகளிலும் தொடர்ந்து சாப்பிட்டு வருவது நமது பாட்டி முறை வைத்தியத்தில் ஒன்றாகிறது.

நம் நாட்டிலேயே சீதோசஷ்ண ஸ்திதிக்கு ஏற்ப, பெருங்காய வகைச்செடிகளை பயிரிட்டு அன்னிய செலவாணி ஈட்டலாம்!






# சித்தர் பூமி
# ஓதசுவாமிகள்



ரா. பன்னீர்செல்வம்

பதினெட்டு சித்தர்களின் வழி வந்த ஆயிரக்கணக்கான சித்த புருஷர்கள் உலவிய புண்ணிய பூமி, நம் தமிழ் மண். ஒவ்வொரு சித்த பெருமகனாரும் தாம் வாழ்ந்த காலங்களில் மக்களுக்கு எண்ணற்ற நன்மைகளை செய்தும் நல் வாழ்விற்கு வழிகாட்டியும் வந்தனர். அதேபோல, அவர்கள் இறை நிழலில் ஐக்கியமாகி ஜீவசமாதி அடைந்த பின்னரும் கூட சற்றும் வீரியம் குன்றாமல், தன்னை நாடி வரும் மக்களின் துயர் நீக்கி, நன்மைகளை செய்து வருகின்றனர்.



அப்படிப்பட்ட ஞான சித்தர்களில் ஒருவர் தான் ஓதசுவாமிகள். இவரை அனைவரும் அறிந்திருக்க வழியில்லை என்றாலும் திருவண்ணாமலை என்னும் சித்த பூமியில் வாழ்ந்து ஜீவசமாதி அடைந்து, அருள் சுரக்கும் ஞானக் கேணியாய் விளங்கும் ஸ்ரீ ரமண மகரிஷி அவர்களை உலகே அறியும் அல்லவா? அந்த ரமண மகரிஷியின் வழிகாட்டி தான் இந்த "ஓதசுவாமிகள்" என அறியப்படுகிறது.
யார் இந்த ஓதசுவாமிகள்? இவருடைய காலம் எது?
எங்கு தோன்றினார்? என்னென்ன லீலைகள் செய்தார்? இதையெல்லாம் விரிவாகப் பார்த்தால் தான் ஓத சுவாமிகளின் அருமை நமக்குப் புரியும்! ஒரு நிகழ்வினை சற்று விரிவாக பார்க்கலாம்.

## சாக்கடை குளியல்:

ஒரு முறை... சிருங்கேரி சாரதா பீடத்தின் 32வது பீடாதிபதியான ஜகத்குரு நரசிம்ம பாரதி சுவாமிகள், திண்டுக்கல்லில் இருந்த சிருங்கேரி மடத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

அவர்தம் வருகையை அறிந்த பக்தர்கள், சுற்றிலும் உள்ள கிராமங்களில் இருந்து திண்டுக்கல்லில் குவிந்தனர். ஜகத்குருவை தரிசனம் செய்யவும் அவரின் அருளாசியைப் பெறவும் மக்கள் அலை அலையாய் வரத் தொடங்கினர்.

கூட்ட நெரிசலை சமாளிக்க இயலாமல் மடத்தினர் ஒரு ஏற்பாடு செய்தனர். அதன்படி ஒரு பல்லக்கில் பீடாதிபதியை எழுந்தருளச் செய்து நகர்வலம் வருவது என தீர்மானிக்கப்பட்டது.
மணிகளால் அலங்கரிக்கப்பட்ட அழகான பல்லக்கு! பட்டுடுத்தி, ஒரு மடாதிபதிக்கே உரிய தோரணையுடன் ஸ்ரீலஸ்ரீ நரசிம்ம பாரதி சுவாமிகள் பல்லக்கில் ஆரோகணித்து, வீதியின் இரு மருங்கிலும் நிற்கின்ற பக்தர்களை பார்த்து புன்முறுவலுடன் கைகளை உயர்த்தி ஆசி வழங்கிக் கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்த மக்களின் முகத்திலும் மனதிலும் பக்தி பிரவாகம் கொந்தளித்தது. இப்படியே அந்த பல்லக்கு இரண்டு மூன்று வீதிகளைக் கடந்தது.

அடுத்தொரு சிறிய வீதியில் பல்லக்கு பயணம் செய்தது. அந்த வீதியின் இருபுறமும் சாக்கடை கால்வாய் வீதியின் மையத்தில் ஒரு பக்க சாக்கடையில் ஒரு உருவம் சாக்கடைத் தண்ணீரை கைகளால் அள்ளியெடுத்து தண்ணீரை ஊற்றிக் கொண்டு சுகமாக குளித்துக் கொண்டிருந்தது. இதனைப் பார்த்த பக்தகோடிகள் முகம் சுளித்தபடி சற்று ஒதுங்கியே சென்றனர். ஆனால், அந்த நபரோ எதையும் பொருட்படுத்தாமல் தெளிவின்றி அழுக்காகக் கிடந்த தண்ணீரை தன் மேல் ஊற்றிக் கொண்டு ஆனந்தக் களிப்பில் மிதந்து கொண்டிருந்தார்.

பல்லக்கு அந்த வீதியின் ஒரு புறத்தில் நுழைந்தது. தெருவெங்கும் அமைதியும் ஆரவாரமும் இணைந்தே ஒலித்தது. ஆரவாரத்தைக் கூர்ந்து கவனித்தார், சாக்கடைக் குளியல் நபர்!
நிமிர்ந்து, பல்லக்கை சிறிது நேரம் உற்றுப் பார்த்து, ஒரு மெல்லிய புன்னகையை உதிர்த்தார். பல்லக்கு இவரை நெருங்கும் சமயம்! சிருங்கேரி சுவாமிகள் வருகின்ற பல்லக்கைப் பார்த்து, "பல்லக்கு, பட்டு, பரிவாரம்"…. எல்லாம் இருந்தும் போவது என்னவோ வீதியில் தானே"?" என்று அவரது உதடுகள் சொற்களை உதிர்த்து சிரிக்க, தனக்கு மட்டுமே கேட்கும் வகையில் கன்னமான குரலில் இவர் பேசியது, பல்லக்கிலிருந்து சுவாமிகளுக்கு ஞானத்தின் தன்மையால் பலமாகவே கேட்டது!

பல்லக்கை நிறுத்தச் சொன்னார் சிருங்கேரி சுவாமிகள். இறங்கி சாக்கடையை நோக்கி நடந்தார். உடனிருந்த மடத்தினர் இவன் பித்து பிடித்தவன்; இவனையெல்லாம் மதிக்க வேண்டாம்; வாருங்கள் சுவாமி! "என தடுக்க, அவர்களை சமாதானம் செய்த சுவாமிகள், சாக்கடை குளியல் ஆசாமியின் அருகே சென்றார்.

சாக்கடையில் குளிப்பவர் யார் என்பதை அவர் ஞானத்தால் உணர்ந்ததால்தான் அவர் அருகே சென்றார். சிருங்கேரி சுவாமிகள், சாக்கடையில் அமர்ந்து நீராடிக் கொண்டிருந்த நபரைப் பார்த்து, "அண்ணா…. என்ன கோலம் இது?!.. ஏன் இங்கே குளியல்?!" என்று கேட்டதுதான் தாமதம், சாக்கடையில் இருந்தவர், "அட… நரசிம்மன்னா..?! வா வா…. என்ன நரசிம்மா… வா வா!" என மகிழ்ச்சியோடு வரவேற்றபடி சாக்கடை நீரை அள்ளி தன் மேல் ஊற்றிக் கொண்டார்.

சுவாமிகள் மீது சாக்கடை தண்ணீர் பட்டுவிடக் கூடாதே என்னும் கவலையுடன் மடத்தைச் சேர்ந்தவர்கள் ஓடி வந்து சுவாமிகளை சூழ்ந்து நிற்க, "இது சரியான நேரமல்ல, என எண்ணியபடி நரசிம்ம பாரதி சுவாமிகள் பல்லக்கை நோக்கி நடந்தார்.

சுவாமிகளின் காரியதரிசி, "நீங்கள் போய் அந்த ஆளிடம்…" என ஏதோ சொல்ல முயல தடுத்த சுவாமிகள், "இவர் ஒரு மாபெரும் சித்த புருஷர்! பிறருடைய அழுக்குகளைப் போக்குவதற்காகவே இவர் தன்னை அழுக்காக்கிக் கொள்கிறார். இவரை போன்ற மகான்களை உணர்ந்து கொள்வது! சாதாரணமாக அனைவராலும் முடியாது இவருடைய இந்த நிலையை அடைவது எளிதல்ல; இறைவனின் பரிபூரண அருளைப் பெற்றால் தான் முடியும்!" என்றார்.

மக்களின் மன அழுக்குகளையும் பாவங்களையும் போக்குவதற்காக சாக்கடை குளியல் செய்த அவர்தான் ஸ்ரீமத் ஒத சுவாமிகள் என்னும் அருட்சித்தர்!
இவரை பற்றி அறிந்து கொள்ளலாம்.

## அவதார மகிமை:

பழனியிலிருந்து 11 கி.மீ. தொலைவில் உள்ளது பாலசமுத்திரம் என்னும் ஊர். அவ்வூரில்

ஆசாரமான பிராமண குலத்தில் பிறந்த பரமேஸ்வர அய்யர் தன் துணைவியாரோடு அற வாழ்வு வாழ்ந்து வந்தார். ஊழ்வினை உறுத்தியதால் இந்த தம்பதியருக்கு சந்தான பிராப்தி இல்லாமலே இருந்தது.

இறைவனின் மீது அதீத நம்பிக்கை கொண்ட பரமேஸ்வர அய்யர் மனைவியிடம் சொல்லிவிட்டு இறைவனின் திருவருளைப் பெறுகின்ற நோக்கத்தோடு காசிக்கு பயணம் மேற்கொண்டார்.

காசியில்....

கடுமையான விரதம் அனுஷ்டித்து, தினமும் கங்கை நீரால் காசி விஸ்வநாதருக்கு அபிஷேகங்கள் செய்து முறையான வேண்டுதலை மேற்கொண்டார். ஏழு ஆண்டுகளான நிலையில் விஸ்வநாதர் சந்நிதியில் நின்று மனமுருக வேண்டிக் கொண்டிருந்தார், பரமேஸ்வர அய்யர்!

அப்போது, "இந்தக் காசி விசுவநாதனே உனக்கு மகனாக பிறப்பான்; இது விரைவில் நடக்கும்!" என்று ஓர் அசரீரி ஒலித்தது. பெருமகிழ்வுடன் 7 ஆண்டுகளுக்குப் பின்னர் இல்லம் வந்து சேர்ந்தார் பரமேஸ்வர ஐயர்!

இறைவனின் திருவுளம் கைகூடி காலம் கனிந்தது.

இறையருளால் கருவுற்ற பரமேஸ்வர ஐயரின் மனைவி, 1850ம் ஆண்டு புரட்டாசி மாதம் திருவாதிரை தினத்தன்று மும்மூர்த்திகளின் பெருங்கருணையால் ஆண் மகவு ஒன்றை பெற்றெடுத்தார்.

அந்த குழந்தைக்கு சுப்பிரமணியன் என அந்த பரமனின் மகனது பெயரையே சூட்டினார். இந்தப் பெயர் தான் பின்னாளில் பலர் சுப்பையா சாமி என ஓத சுவாமிகளை அழைத்ததற்குக் காரணமாய் அமைந்தது எனலாம்.

கருவிலேயே அருள் வாய்க்கப்பெற்ற சிறுவன் சுப்பிரமணி அந்த இளவயது முதலே இறை நாட்டம் கொண்டு விளங்கினார். இந்த நிலையில்தான் பரமேஸ்வர ஐயர் இயற்கை எய்தினார்.

தந்தை மறைந்த விரக்தி, இறைவன் மீது கொண்ட நாட்டம்! செய்வதறியாமல் பக்தி மயமாய் காடு, மலை, என பயணப்பட்டார். சுற்றித் திரிந்தவரின் மனதிலே பற்றற்றிருந்தது சுற்றத்தாரிடம் மட்டும்தான், பரமன் மீது பற்றும் பாசமும் மிகுந்து கொண்டே இருந்தது.

ஒரு நாள், தன் அன்னையிடம் வந்தவர், " தாயே! எனக்கு இறைவன் இட்ட பணிகள் ஏராளமாய் உள்ளது! அவற்றை நிறைவேற்றும் பொருட்டு நான் செல்கிறேன்: தாங்கள் எப்போது அழைக்கின்றீர்களோ அப்போது வருவேன்; எனக்கூறி அன்னையின் ஆசியோடு வீட்டை விட்டு வெளியேறி புறப்பட்டுச் சென்றார்.

எட்டு வயதிலேயே ஈசன் அருளை பரிபூரணமாக பெற்றவராதலால், அச்சிறு வயதிலேயே வண்டியில் யாரோ கொண்டு வருகின்ற குடிநீரை இவர் ஒருவரே ஒரு மடக்காகக் குடித்து விடுவார். ஊரே இவரை பார்த்து வியந்து நிற்கும். சற்று நேரத்தில் தான் குடித்த அத்தனை நீரையும் வெளியிலும் உமிழ்ந்து விடுவார்! இதெல்லாம் அனைவரையும் இவரை ஒரு மகான் என்று ஊரே பேசக் காரணமாய் அமைந்தது. இதற்கெல்லாம் காரணம், சுவாமிகளுக்கு அந்த சிறு வயதிலேயே அட்டமாசித்திகளும் வாய்க்கப் பெற்றிருந்தது தான்.

"நிறைமொழி மாந்தர்" என இலக்கியங்களால் போற்றிப் புகழப்படும் ஞானிகளும் சித்தர்களும் போகின்ற பாதையும் மேற்கொள்ளும் பயணமும் ரகசியமாக தான் இருக்கும். அந்த மர்மத்தை மறைபொருள் (மறைந்து கிடப்பது) என பலரும் சொல்வார்கள். ஆனால், அது மறைபொருள் அதாவது வேதத்தில் உறைந்து கிடப்பது என்பதை வெகு சிலரே அறிவார்கள்.

விதைக்குள் ஆழ்ந்து கிடப்பது விருட்சமா? செடியா? கொடியா? என்பதனை ஒரு சாதாரண மனித ஜென்மத்தால் அறியவோ உணரவோ முடியுமா? முடியாது! இறையருள் பெற்ற மகான்களால் மட்டுமே முடியும். அப்படி ஒரு

விருட்சத்தை ஓத சுவாமிகள் அடையாளம் காட்டிய நிகழ்வும் உண்டு.

## ரமண மகரிஷியின் ஞானகுரு:

உலகமே போற்றும் பகவான் ரமண மகரிஷியை திருவண்ணாமலை என்னும் சித்த சொர்க்கத்திற்கு அனுப்பி வைத்தவரே ஓத சுவாமிகள் தான்.

திருச்சுழி என்னும் அழகிய ஊரில் அவதரித்தவர் ரமணரிஷி என்பது அனைவரும் அறிந்ததே! ரமணரின் தந்தை பணியிட மாறுதல் பெற்று திண்டுக்கல் நகருக்கு குடும்பத்துடன் இடம் பெயர்ந்தார்.

திண்டுக்கல்லில் அபிராமி அம்மன் ஆலயத்தின் அருகில் ரமணரின் குடும்பம் வசித்து வந்த நேரம் அது. அங்குள்ள நகராட்சிப் பள்ளியில் ரமணர் சேர்க்கப்பட்டார். ஆரம்பத்தில் கல்வியின் மீது அதிக நாட்டம் கொண்டவராக ஆர்வத்துடன் கல்வி பயின்றார் பகவான் ரமணர்.

விதி யாரை விட்டது? கல்வி நாட்டம் குறைந்து கடவுள் மீது நாட்டம் காட்டத் தொடங்கினார், ரமணர். ஒரு முறை.... தெருக்களில் ஒரு பரதேசியாக வலம் வந்து கொண்டிருந்தாலும் அருட்பிரகாசம் ஜொலிக்கும் முகத்தோடு திரிந்துகொண்டிருந்த ஓதசுவாமிகளை ரமணர் சந்திக்க நேரிட்டது. அவரைப் பார்த்த நொடியிலிருந்து, ஓதசுவாமிகள் செல்கின்ற இடத்திற்கெல்லாம் அவர் பின்னாலேயே செல்கின்ற வழக்கத்தைக் கடைப்பிடித்தார் ரமணர்.

தன் பின்னாலேயே தான் செல்லும் இடமெல்லாம் வருகின்ற சிறுவன் ரமணரை உற்று நோக்கிய ஓத சுவாமிகள் ரமணரை அடையாளம் கண்டு கொண்டார். ஞானிகளை ஞானிகளால் மட்டும்தானே அடையாளம் காணமுடியும்?!

ஒரு முறை.... சிறுவனான ரமணனை அருகிலே அழைத்த ஓதசுவாமிகள், நீ.... திருவண்ணாமலைக்கு செல்; அங்கே உனக்கான பணி காத்துக் கொண்டிருக்கிறது", என்றார் ஓதசுவாமிகள்!

ஆம்! அந்த சிறு விதையிலே அடைப்பட்டுக்கிடப்பது ஓர் விருட்சம் என்பதை உணர்ந்து அந்த விதை விழ வேண்டிய பூமி, சித்தர்களின் சொர்க்க பூமியான திருவண்ணாமலை தான் என்பதை அடையாளங்காட்ட ஆண்டவனால் பணிக்கப்பட்டவர்தான் ஓதசுவாமிகள்.

அதன்படியே பகவான் ரமணர் திருவண்ணாமலை வந்து, இன்று உலகமே வியக்கும் ஒப்பற்ற மகானாய் அங்கேயே ஜீவ சமாதி அடைந்திருப்பதற்கான ஆரம்பம் திண்டுக்கல்லில் நம் ஓத சுவாமிகளால் அரங்கேற்றப்பட்டது என அறியப்படுகிறது.

இப்படி இளவயது முதலே எண்ணற்ற லீலைகள் செய்து, இறை அருளை முழுமையாகப் பெற்று, அவ்வருளால் உலக மாந்தர் உய்யும் பொருட்டு நற்பலன்களைத் தந்த ஓத சுவாமிகளுக்கு இப்பெயர் ஏன் வந்தது என அறிந்தவர் எவரும் இல்லை.

ஒரு வேளை, தான் மெய்ஞ்ஞானத்தால் உணர்ந்தவற்றை மற்றவர்க்கு ஓதி உணர்த்தியதால் "ஓத சுவாமிகள்" என பெயர் பெற்றாரோ என எண்ணத் தோன்றுகிறது.

இவர், தன் பூதவுடலை நீத்து இறைவனோடு ஐக்கியம் ஆகப் போகும் காலம் நெருங்கி விட்டதை உணர்ந்தார். தனது பக்தரான சதாசிவ ஐயர் என்பவரின் கனவில் தோன்றிய ஓதசுவாமிகள், "பக்தா..... நான் நிரந்தரமாக குடியிருக்க ஒரு இடத்தைத் தேர்ந்தெடு", எனக் கூறிட, அந்த உத்தரவை சிரமேற்கொண்டு சதாசிவ ஐயர் தேர்ந்தெடுத்த இடம்தான் திண்டுக்கல் மலைக் கோட்டையின் மேற்குப் பக்கத்தில் முத்தழகுபட்டிக்கு போகும் சாலையிலே ஜீவ சமாதிக்கு இடத்தை தேர்ந்தெடுத்தார்.

நம் ஓதசுவாமிகள் 1906 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ம் தேதி, தான் அவதரித்த அதே திருவாதிரை நட்சத்திரத்தன்று ஜீவ முக்தி அடைந்தார். அங்கே ஜீவ சமாதி பீடம் அமைக்கப்பட்டு அன்று போல் என்றென்றும் மக்களுக்கு அருள் புரிந்து வருகிறார்.

ஆன்மீக சிறுகதை

# தர்ம சிந்தனை

கார் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. முன் சீட்டில் டிரைவருக்கு பக்கத்தில் அமர்ந்திருந்தான் மணிவண்ணன். பின்சீட்டில் அவனது மனைவி பரிமளாவும் 7 வயது மகன் இந்திரஜித்தும் அமர்ந்திருந்தார்கள்.

பரிமளாவிற்கும் இந்துவுக்கும் ஒரே குதூகலம். கார் கண்ணாடி வழியாக சாலையின் இருபுறமும் காணப்படும் பசுமையான வயல்வெளிகள்! காற்றுக்கு தலையாட்டும் தென்னந்தோப்புகள், காரின் வேகத்திற்கு இணையாக பின்னோக்கி நகர்ந்து செல்லும் சாலையோர புளிய மரங்கள்..... இவைகளையெல்லாம் இவர்கள், தாங்கள் வாழும் சிங்கப்பூரில் காட்சிக்கு கிடைக்காதவை, காணாததை கண்ட பூரிப்பில் இந்து உற்சாகத்துடன் எழுந்து நிற்க, காரின் வேகத்தில் இதற்கெல்லாம் அவன் கீழே விழுந்து விடாமல் அவனைப் பிடித்துக் கொண்டிருந்தாள் பரிமளா!

இதற்கு நேர்மாறாக, மணிவண்ணனின் மனம், பலவித எண்ண அவலைகளால் ஆவலும் குழப்பமும் நிறைந்தயாய் அலைமோதிக் கொண்டிருந்தது. மணிவண்ணன் சுமார் 20 ஆண்டுகள் கழித்து தாய் நாடு திரும்புகிறான். குறிப்பாக, தான் பிறந்த ஊருக்கு செல்வதை எண்ணி ஆவலும் குழப்பமும் ஒன்றையொன்று விஞ்சி நின்றன.



**ரா. பன்னீர்செல்வம்**

ஆவல்.... சொந்த மண்ணை மிதிக்கப் போகிறோம் என்பதால்! குழப்பம்.... அவர்கள் மாறியிருப்பார்களா?... இல்லையா?.... பின்னர் பார்க்கலாம்.

முன்புற கண்ணாடி வழியாக, தொலை தூர சாலையை உற்றுப்பார்த்தபடி வந்த மணிவண்ணனின் பார்வையில் பட்டது, அந்த உயரமான வேல்!

“டிரைவர்.... என்ன அது.... ஒரு வேல் மட்டும் தனியா தெரியுது!? ”..... கேட்டான், மணிவண்ணன்.



டிரைவர், “அதுவா சார்!.... பல வருஷமா இங்க ஒரு முருகன் கோவில் சின்னதா இருந்தது! பத்து வருஷத்துக்கு முன்னாடி சாமியார் ஒருத்தர் வந்தாரு. அவர் இங்கேயே தங்கி, கோவில டெவலப் பண்ணாரு. இந்த வேலோட உயரம் 75 அடி! இதை இங்கே பிரதிஷ்டை பண்ணதுல இருந்து, இந்தப் பக்கம் போற வர கார், லாரி எல்லாமே நின்னு கோவிலுக்குப் போய் கும்பிட ஆரம்பிச்சிட்டாங்க! இந்தக் கோவில நம்பி, பத்து இருபது பிச்சைக்காரங்க.... இருபது, முப்பது கடைக்காரகன்னு பல பேருக்கு பொழப்பு

நடக்குது!" என்றான் சிரித்தபடியே...

அதற்குள் அந்த கோவிலை நெருங்கியது கார்!

"சார்.... ∴பாரீன்ல இருந்து வந்திருக்கீங்க... கோவிலுக்கு போறிங்களா? நிறுத்தட்டுமா?", என்றான் டிரைவர்!

"சரி.... நிறுத்து" என்ற மணிவண்ணன், மனைவியை பார்த்து "கோவிலுக்கு போகலாம்" என்றான்.

மணிவண்ணன் குடும்பத்தோடு கோவிலுக்குள் சென்றான். அர்ச்சனை தட்டை கொடுத்தான் பூசாரி அர்ச்சனை செய்தார். முருகனின் தத்ரூபமான தரிசனம் கண்டு மனம் நெகிழ்ந்து வழங்கினார்கள். கோவிலில் கூட்டம் சுமாராக இருந்தது.

கோவிலை பராமரித்து வரும் சாமியார், எந்தவித படாடோபமும் போலித்தனமும் இல்லாமல் மிக எளிமையாக சன்னிதியின் ஓரத்தில் தரையில் அமர்ந்து கொண்டிருந்தார்.

காலில் விழ வந்தவர்களை தடுத்து, "முருகனை வணங்குங்கள்" என்றார்.

மனநிறைவோடு தரிசனம் முடித்து வெளியே வந்தார்கள்.

"ஐயா.... சாமி"... "அம்மா.... தர்மம் பண்ணுங்கம்மா" என்ற குரல்கள்., கலந்து ஒலிக்க... ஒரு கணம் நின்று யோசித்த மணிவண்ணன், மனைவி, மகனை அங்கேயே நிற்கச் சொல்லிவிட்டு பக்கத்தில் இருந்த சிறு கடைக்கு சென்றான்.

யாசகம் கேட்போர் அனைவருக்கும் ஒவ்வொரு தயிர்சாத பாக்கெட்டுகளை வரிசையாய்



பரிமளா கொடுத்துக் கொண்டிருக்க... தன் பேன்ட் பாக்கெட்டில் இருந்து பர்சை எடுத்து பிரித்தான். இதற்காகவே வாங்கி வைத்ததைப் போல நிறைய இருபது ரூபாய் நோட்டுகள் இருந்தன.

ஒவ்வொரு நோட்டாய் உருவி ஒவ்வொருவரிடமும் கொடுத்துக் கொண்டே வந்தான் மணிவண்ணன், அனைவருக்கும் கொடுத்து முடித்து காரை நோக்கி நடந்தார்கள்.

பரிமளம் கணவனை பார்த்து கேட்டாள்....

"சாப்பிடறதுக்கு தான் வாங்கி கொடுத்தாச்சு; அப்புறம் எதுக்கு எல்லோருக்கும் பணத்த வேற கொடுத்தீங்க?!"...

"கொடுத்தா என்ன?... ஏதும் பிரச்சனையா?".... என்றான், மணிவண்ணன்.

"அதெல்லாம் ஒன்னுமில்ல; காரணம் இல்லாமல் நீங்கள் எதையும் செய்ய மாட்டீங்க! இதுக்கும் ஏதாவது காரணம் இருக்குங்களா?..." கணவனிடம் கேட்டாள்!

"கண்டிப்பா.... இருக்கு பரிமளா! பசிக்கு ஒருவேளை சோறு போட்டா..... அடுத்த வேளை சோத்துக்கு யார் சோறு போடுவாங்க என்று எதிர்பார்க்க தோணும்! ஆனா, ஒரு உழைப்பாளிக்கு ஒரு ரூபா கிடைச்சாலும் அது அவனுடைய வாழ்க்கையையே மாற்றி அமைச்சிடும்; இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன்னாடி என் வாழ்க்கையில ஒரு சம்பவம் நடந்தது! அந்த நேரப் பசிக்கு பழையசோறு போட்டவங்க, என்னை அதோட விட்டிருந்தா... இன்னைக்கு வரைக்கும் நான் இங்கே எங்கேயாவது டீக்கடையில் வேலை செஞ்சு, தினந்தினம் வாழ்க்கையோடு போராடிக் கொண்டுதான் இருந்திருப்பேன்.

ஆனா, அவங்க எனக்கு சோறு போட்டதோட, மதுரைக்கு நடந்தே போகப்போறேன்னு சொன்ன எனக்கு ஒரு ரெண்டு ரூபா குடுத்து பஸ் ஏத்தி விட்டாங்க! அந்த நேரம்தான் என் வாழ்க்கையே ஆரம்பமான நேரம்!

அந்த பஸ்ல ஏறி மதுரை பஸ் ஸ்டாண்டுல நான் இறங்கினேன். அந்த நேரம் பார்த்து ஒரு கார் வர.... அதுல தடுமாறி விழப் போனேன். அந்த கார்ல இருந்தவர்தான் சிங்கப்பூர் சுப்பையா பிள்ளை!

என்னை பார்த்ததும் என்ன நினைச்சாரோ தெரியல; என்ன பத்தி கேட்டாரு! சொன்னேன்! எனக்கு யாரும் இல்லன்னு தெரிஞ்சதும் அடுத்த ஒரு மாசத்திலேயே என்னை சிங்கப்பூர் கூட்டிகிட்டு போயி, வளர்த்து ஆளாக்கி, இன்னைக்கு உன் கணவனா, கௌரவமா சொந்த ஊருக்குத் திரும்பறேன்", என்றான் மணிவண்ணன்.



கார் மணிவண்ணனின் ஊரை நோக்கிச் செல்லத் தொடங்கியது. கார் செல்லச்செல்ல.... மணிவண்ணனின் நினைவுகள் பின்னோக்கிச் சென்று அந்த நாளில் நிலைத்து நின்றது.

சிதை எரிந்து கொண்டிருந்தது. சிதையில் பத்து வயது சிறுவன் மணிவண்ணனின் தாயின் உடல் வெந்து கொண்டிருந்தது.

அழுதழுது கண்ணீர் வற்றிய நிலையில் விசும்பலோடு எரியும் நெருப்பை பார்த்துக் கொண்டு நின்றான், சிறுவனாக இருந்த மணிவண்ணன்.

சற்று தள்ளி, மணிவண்ணனின் சித்தப்பா செல்லச்சாமி நின்றுகொண்டிருந்தார். அவரிடம் ஊர்க்காரர் ஒருவர், "ஏம்பா செல்லச்சாமி.... கொள்ளி போட்ட பையன திரும்பி பார்க்காமல் வீட்டுக்கு போக சொல்றத விட்டுட்டு இங்கேயே நின்னு எறியிருத வேடிக்கை பார்க்க வச்சிருக்கீங்க! முதல்ல.... பையன.... வீட்டுக்கு கூட்டிக்கிட்டு போக ஏற்பாடு பண்ணுப்பா!... " என்றார்.

"என்னைய என்னப்பா பண்ண சொல்ற?! என் பொண்டாட்டிய பத்திதான் ஊருக்கே தெரியுமே! என்னால யாருக்கும் வடிச்சு கொட்ட முடியாது! கொள்ளி வெச்ச கையோட எங்கேயாவது அனுப்பிடுன்னு சொல்லிட்டா! அதான் யோசிக்கிறேன்". என்றார், மணிவண்ணன் சித்தப்பா!.

"இவன் பொறக்கறதுக்கு முன்னாடியே தகப்பனை பறி கொடுத்தவன்; இப்ப பத்து வயசுல தாயும் போயிட்டா! இனிமே இவன் என்ன தான் பண்ணுவான்!?..." என இரக்கத்தோடு சிறுவனைப் பார்த்தார் ஊர்க்காரர்!

அவர் திடீரென ஏதோ ஞாபகம் வந்தவராக "சரி..... செல்லச்சாமி.... நிலத்தை பாகம் பிரிக்காம தானே வெச்சி இருந்தீங்க! அதுல பாதி இவனுக்கு பங்கு உண்டு இல்ல?.... அதையாவது பிரிச்சுக் கொடுத்துட வேண்டியது தானே?" என்றார்.

"கொடுத்தா?.... இத்தனூண்டு பையன் விவசாயம் பண்ணி பிழைச்சிக்குவானா?.. சரி.... அதவிடு... எங்க அண்ணன் செத்து பத்து வருஷத்துக்கும் மேல ஆகப்போகுது! இத்தன காலமும் தாய்க்கும் பிள்ளைக்கும் சோறு போட்டு பார்த்துகிட்டோமே.... அதுவே அதிகம்! 30 40 ஏக்கரா இருக்குது? வெறும் 3 ஏக்கர் தானே!? அதுல என்ன பங்கு வேற வாழுது!?" காட்டமுடன் செல்லச்சாமி சொல்ல...

"ஏதோ முடிவு பண்ணிட்டாங்க போல..... ம்..... ஆண்டவா!" என்றபடி ஊர்க்காரர் அங்கிருந்து சென்றார்.

செல்லச்சாமி, சிறுவன் மணிவண்ணனிடம் வந்தார். "டேய், மணி உங்க அம்மாவும் போயிட்டாங்க! இனிமே இங்க இருந்து என்ன பண்ண போற?! என் பையன், பொண்ணுக்கே சோறு போட என்னால முடியல! இங்கிருந்து கஷ்டப்படறத விட, டவுன் பக்கம் போயி ஏதாவது கடையில வேலைக்கு சேர்ந்து பிழைச்சிக்க?" என்றதும் தீர்க்கமாய் அவரையே பார்த்தபடி, தலையாட்டி, "சரி", என்றான்! "டேய்..... உன் கிட்ட ஏதாவது ஒன்னு ரெண்டு ரூபா கொடுத்துவிடலாம்னு பார்த்தாலும் பைசா இல்லை! இருந்ததெல்லாம் சாவு எடுக்கவே கரைஞ்சு போச்சி,!.... சரி..... பார்த்துப் போ!"... என்றபடி சித்தப்பா நடையைக்கட்டினார்.

தாயின் சடலம் எரிந்து கொண்டிருப்பதை பார்த்த மணிவண்ணனின் கண்களில் நீர் திரையிட்டது.


தாயை மனதால் வணங்கி, மெல்லத் திரும்பி நடந்தான்.

“நீ இங்க இருந்து கஷ்டப்படறத விட, டவுன் பக்கம் போயி ஏதாவது கடையில வேலை செஞ்சு பிழைச்சிக்க,” சித்தப்பாவின் சொற்கள் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தது. கால்கள் தானாக பிரதான சாலையில் நடந்து சென்றன.

நேற்றைய தினம் இவனது அம்மா உயிர் விட்ட நேரத்தில் இருந்து இந்த நிமிடம் வரை சாப்பிடாமல் இருந்ததால், கால்கள் தள்ளாடின. சோர்வு உடலில் இருந்தாலும் மனவலிமையால் மெல்ல நடந்தான்.

ஆறு கிலோமீட்டர் நடந்தபின் பூங்குளம் என்ற அந்த ஊரை அடைந்தான். அதற்கு மேல் நடக்க முடியாமல், மெயின் ரோட்டை ஒட்டி இருந்த அந்த கோவிலின் முன்னே இருந்த மரத்தடியில் அமர்ந்தான்.

அது ஒரு சிறு கோவில்! பிடாரியம்மன் பிரம்மாண்டமாய் அமர்ந்திருக்க, அதற்கு சற்றும் பொருந்தாமல் கோவில் மிகவும் சிறிதாய் இருந்தது. அருகில் இருந்த காலி இடத்தில் சிறு கொட்டகை போட்டு இருக்க அதில் ஒரு நடுத்தர வயது பெண்மணி அமர்ந்து அம்மனுக்கு பூ கட்டிக் கொண்டிருந்தார்.



மரத்தடியில் சாய்ந்து உட்கார்ந்து இருந்த மணிவண்ணன் சோர்வு மிகுதியால் அப்படியே தரையில் சாய்ந்தான். பூ கட்டிக்கொண்டிருந்த அந்த பெண்மணி, இதை கவனித்து விட்டு எழுந்து வேகமாய் பதறியபடி வர, எதிரில் உள்ள கடையில் இருந்த இரண்டு பேர் பார்த்து விட்டு அவர்களும் ஓடோடி வந்தனர்.

அந்த பெண்மணி, மணிவண்ணனின் முகத்தில் குளிர்ந்த தண்ணீரை தெளிக்க, மெல்ல கண் திறந்தான் மணி!.... அந்தப் பெண்,”.... என்ன தம்பி.... பசியா?...” என்றதும், “ம்“, என தலையாட்டினான்.

எதிரிலிருந்து வந்தவர்களிடம் “பசி மயக்கந்தான்; நான் பார்த்துக்கறேன். நீங்க போங்க!” என்றதும் அவர்கள் சென்றார்கள்.

மெல்ல அவனை எழுப்பி கைத்தாங்கலாக அந்த சிறு கொட்டகைக்கு அழைத்துச் சென்றார் அந்த பெண்மணி தன் மண் பானையில் இருந்த சாதத்தை போட்டு சாப்பிட சொன்னாள். மணிவண்ணன் கண்ணில் நீர் வர சாப்பிட்டான். அதை நெகிழ்வோடு பார்த்து, இரக்க உணர்ச்சி அலைமோத கண் கலங்கினாள் பெண்மணி.

சாப்பிட்டு முடித்தான் மணிவண்ணன். களைப்பு சற்றே தீர்ந்தாலும் கவலை சூழ்ந்த முகமும், சோகத்தில் சூம்பிக் கிடந்தது.

அவனுடைய சோகத்தை தாள முடியாதவளாய் கேட்டாள், “தம்பி... நீ யாரு? எங்க இருந்து வர்ற? இப்ப எங்க போற?”... கனிவுடன் கேட்டாள்.

அவள் கேள்வியில் இருந்த உண்மையான கனிவு மணியின் உதடுகளை பேச வைத்தது தான் பிறக்கும் முன்னே தந்தை இறந்தது; நேற்று தாய் இறந்தது; கொள்ளி வைத்து தனக்கு ஒரு வாய் சோறு கூட போடாமல் எங்காவது போய்விடு என சித்தப்பா சொன்ன அனைத்தையும் சொன்னான்.

தன்னை மீறி கண்ணீர் விட்டார் அந்த பெண்மணி. யாரும் இல்லாத நல்லவங்களதான் கடவுள் கைப்பொம்மையா ஆட்டி வைக்கிறான். ஆனா, நிக்க வைப்பான்; நிலையா நிக்க வைப்பான்.... கவலையே படாத! என் கதையும் கிட்டத்தட்ட உன் கதை மாதிரிதான் பிள்ளைகளே நான் பெத்தெடுக்கல;

புருஷனையும் கட்டின நாலு வருஷத்துல இழந்துட்டேன்! தனிமரமா இந்த கோவில்ல இருக்கற அம்மன்த்தான் உறவா நெனச்சி, கோயில பார்த்துகிட்டு காலத்த ஓட்டிக்கிட்டுருக்கேன். ரொம்ப வருடம் கழிச்சு, எனக்கு துணையா நீ வந்திருக்கிற! ரெண்டு பேர் நிலையும் ஒன்றுதான்! பேசாம, எனக்கு துணையாய் என்கூடவே இருந்துடேன் ராசா! ” கண்ணில் நீர் மல்க பரிவோடு கேட்டு, அவன் தலையை வருடிக்கொடுத்தாள்.

”அம்மா.... உங்கள பார்த்தா என் ஆத்தாள பார்க்கிற மாதிரியே இருக்குது! உங்க கூடவே இருந்துடணும்னு ஆசையாத்தான் இருக்குது! ஆனா, பக்கத்துல தான் எங்க ஊரும் இருக்குது! அந்த ஊர்க்காரங்க யாரைப் பார்த்தாலும் எனக்கு சங்கடமா இருக்கும்! அவங்க ஆசைப்பட்ட படியே டவுனுக்கு போயிடுறேன். எப்பவாவது வந்தா உங்கள பார்க்காமல் போக மாட்டேன்” என்றான்.

“சரி.... டவுனுக்கு எப்படி போவ?.. ”

“நடந்தே தான்! ”

“நடந்தேவா?... ராத்திரியாகிடுமே!”... என யோசித்தவள், வேகமாய் ஓலைக்குடிசையில் கீற்றுகளிலே பரபரப்பாக எதையோ தேடினாள்.

நாலணா, எட்டணா என அங்கொன்றும் இங்கொன்றுமாக சொருகி வைத்திருந்த நாணயங்களை எடுத்து எண்ணிப் பார்த்தாள், இரண்டேகால் ரூபாய் இருந்தது.

“இந்தா.... இந்த பணத்தை கையில வச்சுக்கோ! மதுரை பஸ் இப்ப வரும். ரெண்டு ரூபா டிக்கெட்டு! போய் இறங்கிடு! ஒன்னும் தோது படலன்னா... எப்படியாவது இந்த அம்மாகிட்ட வந்துடு ராசா!” கலங்கிய விழிகளோடு காசை கொடுத்தாள்.

கண்களில் கண்ணீர் முட்ட கையில் காசை வாங்கினான். கொஞ்ச நேரத்தில் பஸ் வந்தது. அந்த புதிய தாயிடம் பிரியா விடை பெற்று பஸ் ஏறினான்.

---

கார் பூங்குளம் கிராமத்தை நெருங்கியது.

“டிரைவர்.... காலியாக கிடந்த இடமெல்லாம் கட்டடமா இருக்குது! அந்தக் கோயிலைக் கண்டு பிடிக்கணும்; கொஞ்சம் மெதுவா போ!”

இருபுறமும் கவனமாக பார்த்தபடி இருந்தான் மணிவண்ணன்.

கோவில்! வெளியிலே அதே வேப்பமரம்! இடம் சற்றே மாறியிருந்தாலும் மனிதர்கள் நடமாட்டம் அதிகம் இல்லாமல் அந்த சாலை வெறிச்சோடி இருந்தது, வழக்கம்போல!

காரிலிருந்து இறங்கி, எதிரில் இருந்த பெட்டி கடையை நோக்கி நடந்தான் மணிவண்ணன்.

“சார்... இந்தக் கோவில்ல ஒரு அம்மா இருந்தாங்களே.... அவங்க இப்ப எங்க இருக்காங்க தெரியுமா?..” கடைக்காரரிடம் கேட்டான் மணிவண்ணன்.

“இதுக்கு முன்னாடி அந்த மரகதம்மாள எப்ப பார்த்தீங்க?” கடைக்காரர் கேட்டான்.

“சரியா இருபத்தி அஞ்சு வருஷம் ஆகிடுச்சு!”

“அதான் தெரியல!... சார் வயசாயிடுச்சு! ஒரு அஞ்சாறு வருஷமாகவே அந்த அம்மாவால நடக்க முடியல... இந்தக் கோவில் தர்மகர்த்தா தன் வீட்டு திண்ணையில கொண்டுபோய் வச்சு பாத்துகிட்டாரு, இன்னைக்கு காலையில தான் திடீர்னு அந்த அம்மா இறந்துட்டாங்க! நான் கூட போயிட்டு தான் வரேன்! ஆமா, நீங்க என்ன அவங்களுக்கு உறவா?... ” எனக்கேட்டார்.

“ஆமாம்”, என தலையாட்டியவன் இடத்தை கேட்டறிந்து காரில் ஏறிச் சென்றான்.

தர்மகத்தா வீட்டுத் திண்ணையிலே கிடத்தப்பட்டிருந்தது சடலம்! இரண்டே மாலைகள்! பத்து பேர் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். காரில் இருந்து இறங்கி வருவது யார் என புரியாமல் தங்களுக்குள் பார்த்துக் கொண்டனர். மணிவண்ணன் அருகில் சென்று பார்த்தான். அன்று நடுத்தர வயதில் இறந்த தன் தாயை ஒத்தவளாய் காட்சி தந்தவர், இன்று 25 வருட முதுமை கிழித்த கோடுகளோடு வாடியிருந்தாள்...

அப்போது இருவர் பேசிக் கொண்டது மணிவண்ணனின் காதில் விழுந்தது.

ஒருவன், “எப்ப எடுக்கறது?”... என்றான்.

“அதான் தெரியல; ஆளுக்கு அஞ்சு பத்து போட்டு செலவு ஒப்பேத்திடலாம்! ஆனா, கொள்ளி போடறது யாரு?...”

“தர்மகர்த்தாவே என்ன செய்யறதுன்னு தெரியாம தவிக்கிறாரு!”.

அவர்களை நெருங்கிய மணிவண்ணன், "தர்மகர்த்தா யாருங்க?" என்று கேட்டான்.

பக்கத்து வீட்டு திண்ணையில் அமர்ந்திருந்த தர்மகர்த்தாவிடம் அழைத்துச் சென்றார்கள். அவரிடம் பேசினான், எல்லாவற்றையும் பேசினான்.

கொஞ்ச நேரத்தில்....

பேண்டு வாத்தியம் முழங்கியது.... இறுதி மரியாதை செய்ய சடங்குகளுக்கான எல்லா பொருட்களும் வந்திறங்கின. விஷயம் கேள்விப்பட்டு ஊரே கூடி நின்றது.

மணிவண்ணனுக்கு மொட்டையடிக்கப்பட்டது! அவன் மனைவி பரிமளா, மிகுந்த பரிவுடன் சடலமான மரகதம்மாளின் தலைமாட்டில் அழுதாள்.

இறுதி ஊர்வலத்திற்கான நேரம் நெருங்க!....

மணிவண்ணனின் மகன், பேரனாக தீப்பந்தம் பிடித்தான். தன் தாய்க்கு கொள்ளி சட்டி எடுத்துட்டு முன்னே சென்று கொண்டிருந்தான் மணிவண்ணன்.

தன்னை பெறாத தாய்க்கு கொள்ளி வைத்தான். குளமான கண்களோடு வணங்கினான், கொள்ளி போட்டவனை பைக்கில் அழைத்துச் சென்றார்கள்.

16 நாள் அங்கேயே தங்கி இருந்து எல்லா காரியங்களையும் தன்னை பெற்ற தாய்க்கு செய்யாத அனைத்தையும் பெறாத அந்த தாய்க்கு செய்தான்.

புறப்படும் நாள் வந்தது! எல்லோரிடமும் விடைபெற்று காரில் ஏறினான். கார் வேல் கோவிலை நெருங்கி நின்றது.

முன்புபோலவே யாசகர்களுக்கு உணவு, பணம் கொடுத்தான்.

அப்போது யாசகர் இருவர் இடையே சண்டை. ஒருவன் மற்றவனிடம், "டேய்.... எங்க அப்பன் செல்லச்சாமி மட்டும் ஒழுங்கா இருந்திருந்தா.... ஆறு வருஷமா நான் உன்னோடு எல்லாம் உட்கார வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்குமா?.... எல்லாம் என் நேரம்டா!" என்றான்.

அப்போதுதான் அவனை கூர்ந்து கவனித்தான் மணிவண்ணன்! தன் சித்தப்பாவின் சாயல் தெரிந்தது!

ஆலயத்து முருகனை நோக்கினான் மணிவண்ணன்.

ஒரு தாயின் தர்மசிந்தனை, என்னை இறுதி சடங்கு செய்ய வைத்தது! என் சித்தப்பாவின் சிந்தனை அவர் மகனை கோவில் வாசலில் உட்கார வைத்துள்ளது!

முருகா!... தர்மம் செய்வது எத்தனை ரூபாய் என்பது முக்கியமல்ல! யாருக்கு, எந்த நேரத்தில் செய்கிறோம் என்பதே முக்கியம் என்பதை உணர்த்தி விட்டாய்!

தர்மத்தின் வலிமையே வலிமை! என்றவாறு கைகூப்பி வேண்டினான்.

## ஸ்ரீவைஷ்ணவர்களின் முக்கிய திருத்தலங்கள்:-

1. பெரிய கோயில் அல்லது "பெரிய கோயில்" என்று அழைக்கப்படும் ஸ்ரீரங்கம்
2. திருப்பதி
3. காஞ்சிபுரம்
4. மேல்கோட் பெருமாள் கோயில்
5. ராமானுஜ ஆச்சாரியார் பிறந்த இடம் ஸ்ரீபெரும்புதூர்.
6. அஹோபில மடம்.
7. வானமாமலை மடம்

**திரு. கிருஷ்ணன்**
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# எங்கே செல்கின்றோம்..
# எதற்காக செல்கின்றோம்...



சைவ சித்தாந்த செம்மல்
**கவிஞர். சீனு. செந்தாமரை**
கடலூர்

அறுசுவையுடன் அமைந்தால்தான் நல்விருந்து!

இன்பம் இனிப்பு போன்றது! துன்பம் கசப்பு போன்றது. இன்பத்தை மட்டும் மனம் ஏற்கிறது! துன்பத்தை மட்டும் மனம் ஏற்பது இல்லை. துன்பமே வேண்டாம் என்று மனம் அடம்பிடிக்கிறது. உண்மையிலேயே கசப்புதான் உடலுக்கு ஏற்றது. துன்பம் நேர்கையில் தான் மனித மனம் பெரிதும் பக்குவப்படுத்துகிறது. வாழ்வில் மகிழ்ச்சியான காலங்களில் பயணிக்கும் போது மனம் துள்ளுகிறது. அதுவே துன்பம் இடைமறிக்கும் போது தளர்ந்து போகின்றோம்! தவித்துப் போகின்றோம். தோல்விகள் ஏற்படுத்தும் ரணங்கள், சொந்த பந்தங்கள் ஏற்படுத்தும் துயரங்கள் நமக்கு ஏற்படும் பிணி மற்றும் எதிர்பாராத இழப்புகள் இவைகளின் அணிவகுப்பில் அமுழ்ந்தி போகின்றோம்.

நாம் புகழ் போதைக்கு அடிமையாகி விடுகின்றோம் மனிதனின் புகழ் நிலையற்றது. இறைவனின் திருப்புகழுக்கு முன்னால் நாம் ஒன்றும் இல்லை. யாராவது நம்மை புகழ்ந்து விட்டால் தன் நிலை மறந்து போகின்றோம். அதுவே யாராவது நம்மை இகழ்ந்து விட்டால் நம்மை நாமே இழந்து போகின்றோம்.

புகழ்வதும் இகழ்வதும் அவரவர் இயல்பு என்று சாதாரணமாக எடுத்துக் கொண்டு நாம் பயணிக்கும் போது எந்த தடைகளையும் உடைத்து விட முடியும்.

சிலர் எதுவுமே செய்யாமல் வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றனர். சிலர் எல்லாமே செய்தும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதில்லை. இதற்கு யார் காரணம்? எது காரணம்? நல்லோர் நலிவதும் தீயோர் நலம் பெறுவதும் எதனால்? நேர்மையாக இருப்பது தவறா?

ஒரு தாய்க்கு 5 பிள்ளைகள் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஏற்றத்தாழ்வுகள் இருக்க காணலாம். தாயானவள் தன் பிள்ளைகள் எல்லோருமே உயர்வாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறாள். அவள் விருப்பம் நிறைவேறுகிறது என்றால் இல்லை என்பதுதான் நிதர்சனம்.

ஒரு வகுப்பில் பயிலும் 40 மாணவர்களும் ஒரே மாதிரியாகவும் படிப்பதும் இல்லை உயர்வதும் இல்லை. ஒரு சிலரால் உயர முடிகிறது. பலரால் உயர முடியவில்லை. கற்றுக்கொடுக்கும் ஆசிரியரோ ஒரே மாதிரியாகத்தான் கற்பிக்கிறார். அவர் பார்வையில் எந்த பேதமும் இல்லை. முயற்சி ஒன்றே முகவரி தருகிறது சாகும்வரை முயற்சிப்பவர்களும் உண்டு ஏன் அவர்களால் வெற்றி பெற இயலவில்லை? என்ற வினா நம் மனதை அரித்துக்கொண்டே இருக்கும்.

வங்கியில் நம் கணக்கில் உள்ள தொகை இருந்தால் மட்டுமே எடுத்து செலவழிக்க முடியும். நம் கணக்கில் ஒரு காசு கூட இல்லை என்றால் எப்படி எடுக்க முடியும்?

சென்ற பிறவி பயனை இப்பிறவியில் அனுபவிக்கிறார்கள் என்பதே உண்மை.

இப்பிறவியில் நாம் செய்கிற நல்லவைகள் நமது அடுத்த பிறவிக்கு வளம் சேர்க்கும் என்பதே நிதர்சனமான உண்மை.

எல்லா விஷயங்களிலும் உண்மையாக இருப்போம். நிம்மதியாக வாழ இது போதும் என்ற மனநிலை பெற முயற்சிப்போம்.

படுக்கச் செல்லும் முன் இறை நாமத்தை சொல்லுவோம். காலையில் எழுந்ததும் இறை நாமத்தை ஆத்மார்த்தமாக உச்சரிப்போம்.

மனதை தூய்மை படுத்துவோம் பக்குவமாக நம் மனதை பண்படுத்தும் கலையில் கற்போம். புண்படுத்தும் நபர்களை மன்னிப்போம். நமது குறைகளை சுட்டிக்காட்டும் போது கோபப்படாமல், உண்மையிலேயே நம் குறைகள் இருக்கும் பட்சத்தில் அதை களைய முற்படுவோம்.

கடந்தவைகளை எண்ணிக் கொண்டு காலத்தை கடத்தாமல், எதிர்காலத்தை எண்ணி ஏமாந்து போகாமல் இருக்கும் நிகழ்காலத்தை சரியாக பயன்படுத்திக் கொண்டால் இறையருளால் மனம் அமைதிபெறும். மலரத் தான் போகிறது நம் வாழ்வு என்ற திடமான அசைக்க முடியாத இறை நம்பிக்கையுடன் ஞானமார்க்கத்தில் நடை போடுவோம் அப்போது வெற்றி மாலைகள் வெற்றி தேவதை நமக்கு சூட்டி மகிழ்வாள் நாம் வெறும் கருவி! நம்மை இயக்குபவர் இறைவன் என்ற உயரிய சிந்தனையுடன் முப்பொழுதும் இறைசிந்தனையில் மூழ்குவோம். மெய்ஞான முத்துக்களை பெறுவோம்





TURMERIC
& BLACK PEPPER

HI-HEALTH FORMULA

Navel Chakra & Detoxifier

Hi –health formula can be a solution for everyday health issues
Turmeric fights with free radicals & protects brain, heart and liver cells from ageing process

**Call: 88702 88701**




திருவாரூர் சு.சேகர்

# குலவம்சம் தழைக்க
# பச்சையம்மன் வழிபாடு!!

உலகெங்கும் அம்மன் பல்வேறு வடிவங்களில் இருந்தாலும், ஒரு சில வடிவங்களில் காட்சி தரும் அம்மன் மிகவும் சக்தியும், அற்புத ஆற்றலும் படைத்து விளங்குவார்கள்.

இப்பூவுலகில் பார்வதிதேவி பலவித அவதாரங்களை எடுத்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். உலக மக்களின் தவ வாழ்வுக்கு தாமே ஓர் எடுத்துக்காட்டாகத் தவம் புரிந்து ஈசன் அருளைப் பெற்று உயிர்களைக் காத்தருளிய பச்சையம்மன் வழிபாடு என்பது மிகவும் பிரசித்தி பெற்றது. திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு தாலுகாவில் செய்யாறு, கமண்டலநதி, பிரம்பகநதி என மூன்றும் ஒன்றுசேரும் வாழைப்பந்தல் எனும் ஊரை அடுத்த முனுகப்பட்டு எனும் பசுமையான கிராமத்தில் பச்சைநிறத்தில் கம்பீரமான தோற்றத்துடன் அமர்ந்த நிலையில் மூலவராக வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து கொண்டிருக்கிறார்.

சிவபெருமான் மனித வடிவம் கொண்ட கோயில், அன்னை பார்வதி வாழைப்பந்தல் அமைத்து வரம் பெற்ற பூமி, சிவபெருமானும், மகாவிஷ்ணுவும் துவாரபாலகர்களாக விளங்கும் அபூர்வக்கோயில் என பல்வேறு பெருமைகள் கொண்ட ஸ்தலமாக இந்த கோயில் விளங்குகிறது. பல இடங்களில் கோயில் கொண்டுள்ள பச்சையம்மன் கோயில்களுள் வாழைப்பந்தலில் குடி கொண்டுள்ள பச்சையம்மனே முதன்மையானவர்.

## ஸ்தலபுராணம்:

ஒரு சமயம், பார்வதிதேவி, சிவபெருமானின் உடலில் சரி பாதி (இடபாகம்) பிடிக்க வேண்டும் என வைராக்கியம் கொண்டு, சக்தி சிவனைப் பிரிந்து பூலோகத்துக்கு வந்து தவம் செய்ய

சரியான இடத்தை தேடி, காஞ்சியிலிருந்து புறப்பட்டு திருவண்ணாமலைக்கு வரும் வழியில் ஓரிடத்தில் வாழைப்பந்தல் அமைத்து, மணலில் லிங்கம் பிடித்து வழிபட எண்ணினார். அதற்கு நீர் தேவைப் பட்டது. தன் புதல்வர்களான விநாயகரையும், முருகனையும் அழைத்து பூஜைக்கு நீர் கொண்டு வரச் சொன்னார். இருவரும் புறப்பட்டு வெகு நேரமாகியும் வரவில்லை. அவர்கள் வராததால் பார்வதிதேவியே, தன் கையில் உள்ள பிரம்பினால் பூமியை கிளறி, ஓர் நீரூற்றினை ஏற்படுத்தினார். பின் அந்நீரைக் கொண்டு மணலில் லிங்கம் பிடித்தார். அதுவே பிரம்பக நதி என்று பெயர் பெற்றது. அதன் பின்னர் கணபதியின் ”கமண்டல நதி”யும், முருகனின் “சேய் ஆறு”ம், என ஆளுக்கொரு நதியோடு அன்னை முன் வந்து நின்றனர். அன்னை உண்டாக்கிய நதியோடு, மூன்று நதிகள் ஆயின. இந்த திரிவேணி சங்கமத்தால் உடலும், உள்ளமும் குளிர்ந்து, அவரது சிவந்த நிற மேனி பச்சை நிறமானது. இந்த மூன்று நதிகளும் ஒன்று சேரும் ஊரான முனுகப்பட்டில் அமைந்த இடத்தை முக்கூட்டு என்றும், இங்குள்ள சிவனை மண்ணாதீஸ்வரன், முக்கூட்டு சிவன், மன்னார்சாமி என்றும் அழைக்கின்றனர். அன்னை சிவபூஜை செய்யும் வேளையில் அருகில் உள்ள கதலிவனத்தில் (வாழைத்தோப்பு) இருந்த ஒரு அரக்கன் இடையூறுகள் பல செய்தான். இதனை முறியடிக்க சிவன் வாழ்முனியாகவும், விஷ்ணு செம்முனியாகவும் அவதாரம் எடுத்து அன்னையின் தவம் நிறைவுபெற உதவினர். இதன்பின் திருவண்ணாமலையில், அன்னை சிவபெருமானிடம் சரிபாதி உடலை அடைந்தார் என ஸ்தலபுராணம் கூறுகின்றது.

## ஸ்தல அமைப்பு:

ஆரணி - செய்யாறு சாலையில் கமண்டல நாகநதியின் தெற்கே, பச்சையம்மன் சமேத மன்னார்சாமி கோயில் அமைந்துள்ளது. சாலையின் கீழ்பறம் வாழ்முனி, செம்முனி மற்றும் குதிரை வடிவங்கள் பெரிய வடிவில் உள்ளன. சாலையின் மேற்புறம் பச்சையம்மன் கோயில் சிறிய மூன்று நிலை கொண்ட இராஜகோபுரம் அமைந்துள்ளது. இந்திரனும், எதிரே உள்ள பாறையில் இரட்டை தந்தங்கள் கொண்ட ஐராவதம், ஈசான்ய மூர்த்தி, நந்தி வடிவங்கள் பெரிய அளவில் உள்ளன. அடிவாரத்தில் துவார



கணபதி சந்நிதி தெற்கு முகமாய் இருக்கிறது.

இடதுபுறமாக வலம் வந்தால் அக்னி மூலை எனும் தென்கிழக்கில் அக்னி முனியான அக்னி பகவானும், அதனையடுத்து நவக்கிரகங்களாக நவ முனிகளும், அஷ்டதிக்கு பாலகர்கள் எனும் அஷ்ட முனிகளும், சப்தரிஷிகள் எனும் சப்தமுனிகளும் மேற்கு, வடக்குமுகமாய் பிரம்மாண்ட வடிவில் கம்பீரமாய்க் காட்சி தருகின்றனர். வலமாக வரும் போது மன்னார்சாமி சன்னிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இங்கு சிவபெருமானை லிங்க வடிவிற்கு பதிலாக மனித வடிவில் சிலா ரூபத்தில் காண்பது சிறப்பானது. ஈஸ்வரன் நான்கு கரங்களோடு, கீழ் வலது கரத்தில் சூலம், கீழ்இடது கரத்தில் கபாலம், மேல் வலது கரத்தில் மழு, மேல் இடது கரத்தில் மான் தாங்கியுள்ளார். இவரே மன்னார் ஈஸ்வரன் எனும் மன்னார்சாமி ஆவார்.

இவரையடுத்து நடுவில் பச்சையம்மன் சன்னிதி இருக் கிறது. அன்னை பச்சையம்மன், கருவறை முன் மண்டபத்தில் சப்தமாதர்கள், விநாயகர், முருகனும் வாசலின் இருபுறமும் காட்சி தருகின்றனர். இந்த கோயிலின் துவாரபாலகர்களாக, வலதுபுறம் சிவபெருமானும், இடதுபுறம் மகாவிஷ்ணுவும் காட்சி தருவது அபூர்வ அமைப்பாகும்.

இதனைக் கடந்து கருவறையில் நின்ற கோலத்திலும், அமர்ந்த கோலத்திலும் இரு பச்சையம்மன்கள் காட்சி தருகின்றனர். நின்ற அம்மன் கற்சிலையாகவும், அமர்ந்த அம்மன் சுதைவடிவிலும் உள்ளது. அன்னையின் கீழ் வலது கரம் பிரம்பையும், கீழ் இடது கரம் கபாலத்தையும், மேல் வலது கரம் அங்குசத்தையும், மேல் இடது கரம் பாசத்தையும்

தாங்கி காட்சி தருகின்றார். இரண்டு அம்மன்களுக்கும் அலங்காரம், தீபாராதனை நடத்தப்படுகிறது. ஆனால் நின்ற கோலத்தில் இருக்கும் அம்மனுக்கு மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது.

இக்கோயிலில் காமிகாகமம் முறைப்படி மூன்று காலப் பூசைகள் நடக்கின்றன.

இக்கோயிலின் ஸ்தலவிருட்சமாக வெப்பாலை மரம் உள்ளது. ஸ்தலத் தீர்த்தமாக கோயிலுக்கு வடக்கே செய்யாறு ஓடுகிறது.

## ஸ்தல சிறப்பு:

பச்சை மணலினால் பிடித்த சிவலிங்கம் மூன்று நதிகளும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ளது. பச்சை மணலினால் லிங்கம் பிடித்து பூஜை செய்ததினால் பச்சையம்மன் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது. அம்மன் பச்சைத் திருமேனியளாய் கருவறையுள் சுதை வடிவில் அருள்பாலிக்கின்றார். அம்மன் சந்நிதியில் பக்தர்களுக்கு பச்சைநிற குங்குமம் பிரசாதமாக அளிக்கப்படுகிறது. அம்மனை வணங்கி இங்கு தரும் பச்சை குங்குமத்தை நெற்றியில் வைத்தால் தீராத நோய்கள் தீரும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. பொதுவாக சிவனுக்கு திங்கட்கிழமையும், அம்மனுக்கு வெள்ளியும் உகந்ததாகும். ஆனால் இத்தல அம்மனுக்கு திங்கட்கிழமையே உகந்த நாளாக போற்றப்படுகிறது. திங்கள் கிழமை அன்று கோயிலில் கூட்டம் நிரம்பி வழியும். இது தவிர ஞாயிற்றுக்கிழமையிலும் ஆலயத்தில் பக்தர்கள் கூட்டம் அதிகம் இருக்கும்.



## நேர்த்திக்கடன்:

இந்த பச்சையம்மன், குலவம்சம் தழைப்பதற்காக மணப்பேறு, மகப்பேறு வழங்கும் தெய்வமாக விளங்குவது தனிச்சிறப்பு.

மக்கட் பேறு வேண்டுதல் நிறைவேறியவர்கள் ஐந்தாவது அல்லது ஏழாவது மாதத்தில் அம்மனுக்கு வளையல்கள் அணிவித்து வழிபட்டுச் செல்கின்றனர். இங்கு பில்லி, சூனியம், கண் திருஷ்டி, சொத்து பிரச்னை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எலுமிச்சை பழத்தை நசுக்கி, எதிரில் உள்ள முனிகளுக்கு நடுவில் உள்ள கருங்கல்லில் தேங்காயை வீசி சிதறச் செய்கின்றனர். இதனால், அனைத்துப் பிரச்னைகளும் தீரும் என்பது நம்பிக்கை உள்ளது. மற்றும் அம்மனுக்கு பொங்கல் வைத்து வழிபாடு செய்தும் பச்சை நிற புடவை சாற்றியும் நேர்த்திகடன் செலுத்துகின்றனர். அம்மனுக்காக நேர்ந்து கொண்டு பெரிய யானை, குதிரைச் சிலைகள் வைக்கின்றனர். இரவில் குதிரையில் ஏறி அம்மன் நகர்வலம் வருவதாக ஐதீகம். ஆகவே குதிரைகள் அம்மன் குதிரை என்றே அழைக்கப் படுகின்றன.

எண்ணற்ற குடும்பங்களுக்கு வாழைப்பந்தல் பச்சையம்மன் குல தெய்வமாக விளங்குகிறார். இங்கு குழந்தைகளுக்கு முதல் முடி காணிக்கை, காது குத்துவது போன்றவை நடக்கின்றது.

இந்த கோயிலில் வேப்பிலை சேலை கட்டிக்கொண்டும், தீச்சட்டி எடுத்தும், எலுமிச்சை பழம் உடம்பில் குத்திக் கொண்டும் நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர்.

## திருவிழாக்கள்:

தமிழ் வருடபிறப்பு, தீபாவளி, பொங்கல் ஆகிய நாட்களில் சுவாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். நவராத்திரி விழா சிறப்பாக நடைபெறும்.

இங்கு பிரமோற்சவம் ஆடி மற்றும் ஆவணியில் வரும் முதல் இருவார திங்கட்கிழமைகளைச் சேர்த்து ஏழு திங்கட்கிழமைகள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதை சோமவார விழா என அழைக்கின்றனர். ஏழாவது திங்கட்கிழமையன்று அம்மன் திரு வீதியுலா நடைபெறும். பிரசாதமாக வேப்பிலையும், பச்சை நிற குங்குமமும்

வழங்கப்படுகிறது.

ஏழு வாரமும் அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்படும் முதல் சோமவாரம் லட்சுமி அலங்காரம்.
இரண்டாம் சோமவாரம் பார்வதி தவநிலை அலங்காரம் - இரவு அம்மனுக்கு திருக்கல்யாணம்.
மூன்றாம் சோமவாரம் மீனாட்சி அலங்காரம்.
நான்காம் சோமவாரம் நாக சயனம் அலங்காரம்.
ஐந்தாம் சோமவாரம் மகிஷாசுரமர்த்தினி அலங்காரம்.
ஆறாம் சோமவாரம் சரஸ்வதி அலங்காரம்.
ஏழாம் சோமவாரம் உமா மகேஸ்வரி அலங்காரத்துடன் விழா நடைபெறும்.

## கோயில் திறந்திருக்கும் நேரம்:

தினமும் காலை 07.00 மணி முதல் பகல் 02.00 மணி வரையிலும், மாலை 04.00 மணி முதல் இரவு 08.00 மணி வரையிலும் கோவில் திறந்திருக்கும். ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் காலை 07.00 மணி முதல் இரவு 08.00 மணி வரையிலும் கோவில் திறந்திருக்கும்.

## கோயிலுக்கு செல்லும் வழி:

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில், செய்யாறு, கமண்டலநதி, பிரம்பகநதி என மூன்றும் ஒன்றுசேரும் முக்கூடல் எனும் முக்கூட்டில் அமைந்த ஸ்தலம் முனுகப்பட்டு(வாழைப்பந்தல்)
ஆரணியில் இருந்து கிழக்கே 11 கி.மீ., செய்யாறு நகரில் இருந்து மேற்கே 20 கி.மீ., ஆற்காட்டில் இருந்து தெற்கே 35 கி.மீ., சென்னையிலிருந்து தென்மேற்கே 140 கி.மீ., தொலைவில், ஆரணி - செய்யாறு வழித் தடத்தில், வாழைப்பந்தல் அமைந்துள்ளது (வாழைப்பந்தலில் இருந்து 2 கிமீ தூரத்தில் இருக்கிறது). ஆரணியில் இருந்து மாநகர பேருந்து உள்ளது. ஆட்டோ வசதியும் உள்ளது.

### ஸ்ரீ பச்சையம்மன் வழிபாட்டு மந்திரம்.

நீலோத்பல தள ச்யாமாம் ப்ரலம்பித கரான்விதாம்
த்விநேத்ராம் பீதவஸ்த்ராட்யாம் ஸ்வர்ண தாடங்க ஸம்யுதாம் '
வாமே நீலோத்பலம் சைவ தததீம் காந்தி சோபிதாம்
கஞ்சுகாபரணைர் யுக்தாம் மஹாவல்லீம் விபாவயே ''

### அருள்மிகு பச்சை அம்மன் நாமாவளி.

ஓம் ச்யாமாயை நமஹ
ஓம் ச்யாமளாயை நமஹ
ஓம் மந்த்ர நாயிகாயை நமஹ
ஓம் மந்த்ரிண்யை நமஹ
ஓம் சுபப்ரியாயை நமஹ
ஓம் வீணாவத்யை நமஹ
ஓம் வைணிக்யை நமஹ
ஓம் முத்ரிண்யை நமஹ
ஓம் நீபப்ரியாயை நமஹ
ஓம் கதம்பவன வாஸின்யை நமஹ.

இக்கோயிலில் பச்சைத் திருமேனியராய் அருட்காட்சி தரும் பச்சையம்மனை தரிசித்து, நம் குலவம்சம் தழைக்க வேண்டி வழிபாடு செய்வோம்!!
ஓம் சக்தி..!! பராசக்தி...!!!

திருக்கோயில் திருவுலா...

# அகிலத்தை காக்கும் அருள்மிகு ஐந்துகிணற்று மாரியம்மன் திருக்கோயில்!



பொன்னெழில் சிந்தும் பொலிவுமிகு கோயில் தான் அருள்மிகு ஐந்துகிணற்று மாரியம்மன் திருக்கோயில்! கடலூர் துறைமுக நகரில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. நகர இதயப்பகுதியில் உள்ள இக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

இயற்கை அழகும், இயற்கை அழகும் சங்கமிக்கும் கடலூர் தொன்மையான நகரம்! கடலும் கடல் சார்ந்த இடமுமான நெய்தல் நிலமும், வயலும், வயல் சார்ந்த பகுதியான மருத நிலமும், மலையும், மலை சார்ந்த இடமான குறிஞ்சி நிலமும் கொண்ட நகரே கடலூர் துறைமுக நகர்!

கடல் அலைகள் கனிவுடன் தாலாட்ட ஆதவன் ஆர்ப்பரித்து ஆரத்தி எடுக்க, புதிய விடியல் பூக்கள் தொடுத்து பூமாலை சூடி மகிழ மகா மாரியம்மனாக கம்பீரமாக அமர்ந்து இனிதே வீற்றிருக்கிறாள் அன்னை ஐந்துகிணற்று அம்மன். மனமுருக, கண்ணீர் மல்க என்ன வேண்டினாலும் உடனே நிறைவேற்றி தருபவள் தான் இந்த உலகம்மை. குழந்தைப்பேறு இல்லாதவர்கள் இக்கோயிலில் தொட்டில் கட்டிப் போட்டால் உடனே மழலைச் செல்வம் பெறலாம் குடும்ப மேன்மை பெற மாவிளக்கு போடலாம். கோயில் பிரகாரத்தில் இத்தல அம்மன் பாமாலை இடம்பெற்றுள்ளது. மிகவும் விசேஷம்.

திருமணத் தடையால் மனவேதனை அடையும் இளம்பெண்கள், இளைஞர்கள் இத்தாயை மிகுந்த பக்தியுடன் வேண்டினால் நல்ல மணவாழ்க்கை அமையும்.

நோயால் பெரிதும் வருந்துபவர்கள் தீராத நோயால் மிகுந்த மன விரக்தி அடைந்தவர்கள் இத்தலத்தில் மிளகு மற்றும் உப்பு கொட்டி வழிபட்டால் இத்துன்பங்களிலிருந்து எளிதில் விடுபடலாம்.

செடல் உற்சவம் மிகச் சிறப்பாக பத்து நாட்கள் ஆடிமாதம் நடைபெறும். உற்சவ நாட்களில் அம்மனுக்கு மகா அபிஷேகம், சிறப்பு அலங்காரங்கள் சுவாமி வீதி உலா, என அற்புதமாக நடைபெறும்.

மஞ்சள் ஆடை உடுத்தி, கைகளில் வேப்பிலை கொண்டு, மாலை அணிந்து, நெற்றியில் குங்குமம் இட்டு, ஓம் சக்தி பராசக்தி என்றும் அம்மா ஐந்து கிணத்தம்மா என்று நெஞ்சுருகி ஆயிரக்கணக்கான அம்மன் பக்தர்கள் செடல் போட்டு

செல்வது மெய்சிலிர்க்க வைக்கும்.

கம்பு அல்லது கேழ்வரகு கூழ், கொழுக்கட்டை படையல் இட்டும், பொங்கல் வைத்து அம்மனை உள்ளம் உருக வழிபடுவர். கோயில் அருகிலேயே அழகிய குளம் அமைந்துள்ளது. இக்குளத்தில் அம்மனுக்கு தெப்பத்திருவிழாவும் வெகு சிறப்பாக நடைபெறும்.

தாயின் அருள் முகம் ஆயிரம் கோடி பவுர்ணமியை போன்று ஜொலிக்க கூடியது.

காசி விசாலாட்சியாக- காஞ்சி காமாட்சியாக- மதுரை மீனாட்சியாக பாவித்தும் வழிபடலாம்.

கன்னியாகுமாரியில் முக்கடல் சங்கமிக்கும் புனித பகுதியான கன்னியாகுமாரியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு கன்னியாகுமாரி அன்னையாக போற்றி வழிபடலாம்.

சமயபுரத்தாளாக, திருக்கடையூர் அபிராமி அம்பிகையாக, நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடைய தாயாக, விலங்கும் அம்பிகள் தான் நம் அருள்மிகு ஐந்து கிணற்று மாரியம்மன்.

மாணவ-மாணவியர் தேர்வில் வெற்றி பெறவும், உடல் நலமுடன் நீண்ட ஆயுளுடன் வாழவும் இந்த அம்பிகையை மனதார வழிபடலாம்.

சர்வ சக்தியாக, அன்னை ஆதிபராசக்தியாக அருள்பாலிக்கும் கண்கண்ட தெய்வமே அருள்மிகு ஐந்து கிணற்று மாரியம்மன். ஆடி மாத பிரம்மோற்சவம் பெருஞ்சிறப்பு என்றாலும் அம்மனின் பரிவேட்டை, செடல் உற்சவம் மெய்சிலிர்க்க வைக்கும்.

என்ன நினைத்து வேண்டுகின்றோம் என்றாலும் அதனை உடனே நிறைவேற்றி தருகின்ற பரிவுமிகு தெய்வத்தாயானவள்.

சுற்றுப்பிரகாரத்தில் நான்கு கிணறுகளும் கொண்டும், நடுவில் கிணற்றின் மீது அம்பிகை எழுந்தருளி உள்ளதால் அருள்மிகு ஐந்து கிணற்று மாரியம்மன் என்று உள்ளமுருக போற்றப்பெறுகின்றாள் இந்த அம்பிகை.

தீர்க்க சுமங்கலியாக வாழவும், கொடிய நோய் அகலவும், ஏற்கும் மண வாழ்வு சிறக்கவும், திருமணத்தடை நீங்கவும், குழந்தை பேறும் இனிதே கிடைக்கவும் இத்தல அம்பிகையை வழிபடலாம்.

வாஞ்சையுடன் வழிகாட்டும்
அங்காள பரமேஸ்வரியே
எங்கள் ஸ்ரீ ஐந்து கிணற்று மாரியம்மன்
தாயே வெள்ளிதோறும்
நெஞ்சுருகி வந்து வழிபடுகின்றோம்
மங்களமாய் வாழ அருள் புரிவாய் தாயே
என்று அங்கமெல்லாம் பட உருண்டு வழிபட்டால் மங்காத புகழும், மங்கள வாழ்வும் தந்திடுவாள் இந்த மகமாயி தாயை தரிசிப்போம் தகைசால் வாழ்வைப் பெறுவோம்.




சைவ சித்தாந்த செம்மல்
**கவிஞர். சீனு. செந்தாமரை**
கடலூர்







விஜய்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# மே மாத பலன்கள் – 2022




## மேஷம்

துணிச்சல் மிக்க மேஷ ராசி நேயர்களே இந்த மே மாதத்தில் புகழ், மரியாதை உங்களை தேடி வரும். சமுதாயத்தில் அந்தஸ்து உயரும். குல தெய்வ அருள் உண்டு. திருமணம் ஆனவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். மாணவர்களுக்கு அன்னிய நாட்டு மொழிகள் கற்க வாய்ப்பு கிடைக்கும். தங்கள் தகுதி உயரும். தொழிலில் லாபம் கிடைக்கும். பதவி உயர்வு வரும், விருப்பங்கள் நிறைவேறும். புதிய நபர்களை நம்ப வேண்டாம், அவர்களால் மன அழுத்தம் ஏற்பட வாய்ப்பு உண்டு. தாயின் உடல்நிலையில் கவனம் தேவை. தாயாருடன் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. கண்ணுக்குத் தெரியாத சக்திகளினால் பயம், பதற்றம் ஏற்படும். கருமாரி அம்மன் வழிபாடு மனநிம்மதியை தரும்.



## ரிஷபம்

ரிஷப ராசி நேயர்களே தொழில் முன்னேற்றத்திற்கும், வருமானம் உயரவும் புதிய கலைகளை கற்க வாய்ப்புகள் தேடி வரும். தங்கள் தகுதிகளை வளர்த்து கொள்ள முடியும். மாணவர்கள் கல்வியில் உயர்ந்த நிலையை அடைய முடியும். வடக்கு திசை தகுதிகள் வளர்த்துக்கொள்ள உதவும். சேமிப்புகள் உயரும், வருமானம் அதிகரிக்கும், பூர்வீக சொத்துக்கள் கிடைக்க வாய்ப்பு உண்டு. மாமா, இளைய சகோதரியின் ஆதிக்கம் அதிகம் இருக்கும். தங்கள் வளர்ச்சியால் தலைமை அதிகரிக்க வாய்ப்பு உண்டு. அது பொருளாதார இழப்புகள் தரக்கூடும். எனவே தலை கனமில்லாமல் அனைவரையும் அனுசரித்து செல்வது மிகவும் நன்மை தரும். பிரயாணங்கள் அதிகரிக்கும், வெளிநாடு, வெளி மாநிலம் செல்ல வாய்ப்பு வரும். வீடு, இடம், வாகனம் போன்றவற்றால் விரயம் ஏற்படலாம். எதிரிகள் நண்பர்களாவார்கள். எந்த பிரச்சினை வந்தாலும் வென்றுவிடலாம். வெற்றி உங்களுக்கே. புதன்கிழமைகளில் பெருமாள் வழிபாடு மிகவும் நன்மை தரும்.




## மிதுனம்

பேச்சாற்றல் மிக்க மிதுன ராசி நேயர்களே, இடமாற்றம் விரயங்கள் தவிர்க்கும். வெளிமாநிலம், வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டு. சொந்த ஊரில் விரயம் அதிகரிக்கும். கடன், நோய், வழக்கு போன்ற பிரச்சனைகளுக்காக சேமிப்பு பணத்தை செலவு செய்ய நேரிடும். தவறான நண்பர்களால் உங்கள் சேமிப்புப் பணத்தை இழக்க நேரிடும். ஆகையால் நண்பர்களுடன் இடைவெளி இருப்பது மிகவும் நன்மை தரும். இளைய சகோதரருக்கு நீண்ட தூர பயணம் செல்ல வாய்ப்பு வரும். மாணவர்கள் கல்விக்காக வெளியூர் செல்ல வாய்ப்பு உண்டு. தொழில் முன்னேற்றம் அடையும், புகழ் கிடைக்கும். கௌரவமான பதவிகள் கிடைக்கும். தந்தை பாதிக்கப்பட வாய்ப்புகள் உண்டு, கவனம் தேவை. காவல் தெய்வ வழிபாடு தடைகள் நீக்கி வளர்ச்சியை தரும்.



# கடகம்


அன்புள்ளம் கொண்ட கடக ராசி நேயர்களே, தொழிலில் மாற்றம் உண்டு, மாற்றங்கள் முன்னேற்றத்தை தரும். அரசியல், அரசாங்கம், போன்றவற்றால் உயர்வு உண்டு. நிர்வாகம் சார்ந்த துறையில் உள்ளவர்கள் உயர்ந்த நிலைக்கு செல்ல முடியும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் வளர்ச்சிக்கு உதவி செய்வார்கள். சேமிப்பு பணத்தை முதலீடு செய்ய வாய்ப்புகள் வரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைய முடியும். உயர்கல்வி, நீண்டதூரப் பயணம் மிகவும் நன்மை தரும். அதிர்ஷ்டத்தை நம்பக் கூடாது. உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க்கை துணைவர் கடினமான வார்த்தைகளை பிரயோகிக்க நேரிடும். அதனால் அவருடன் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. குருபகவான் வழிபாடு உங்களுக்கு பாதுகாப்பைத் தரும்.



# சிம்மம்

கனவுகள் நிறைந்த சிம்ம ராசி நேயர்களே திடீர் அதிர்ஷ்டத்தின் மூலம் தனவரவு ஏற்படும். நீண்ட காலமாக நிலுவையில் இருந்த பணம் கைக்கு வந்து சேரும். வாழ்க்கை துணைவருடன் அனுசரித்து செல்வது நல்லது. உங்கள் துணைவர் பாதிக்கப்பட வாய்ப்புகள் உண்டு. கூட்டுத் தொழில் செய்யக்கூடாது. மாணவர்களுக்கு உயர் கல்வியில் தடை ஏற்படும். வெளியூரில் படிப்பவர்களுக்கு எந்த தடையும் வராது. தாய், தந்தை பிடிவாதமாக இருப்பார்கள், விட்டுக் கொடுப்பது நல்லது.


புதிய முயற்சிக்காகவும், பயணங்களுக்காகவும் கடன் வாங்கக் கூடாது. தகவல் தொடர்பு, பயணம், புதிய முயற்சியினால் கடன், வழக்கு போன்றவைகள் ஏற்படலாம். ஆகையால் வார்த்தைகளில் நிதானம் தேவை. முன்னோர்கள் வழிபாடு இந்த பிரச்சனைகளை தவிர்க்கும். மாதப் பிற்பகுதியில் லாபம் அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் செயல்களில் கவனம் தேவை. காதல் போன்ற செயல்களால் அவமானத்தை சந்திக்க நேரிடும். திருமணம் செய்ய வாய்ப்புகள் வரும்.



# கன்னி

எப்போதும் இளமையாகத் தோற்றமளிக்கும் கன்னி ராசி நேயர்களே, இந்த மே மாதம் முன்னோர்கள் செய்த புண்ணியத்தின் பலனை நீங்கள் அனுபவிக்கும் காலம் ஆகும். திருமணத்தில் இருந்த தடைகள் விலகும். திருமணம் நடக்கும். உங்கள் வாழ்க்கை துணைவர் உயர்வடைவார். அவரின் தகுதிகள் உயரும். உங்கள் பொருளாதார நிலை உயரும். வேலையில் கடின போராட்டங்கள் இருக்கும், ஆனாலும் வெற்றி கிடைக்கும். எதிரிகளை வெல்ல முடியும். மாணவர்கள் போட்டி, பந்தயங்களில் வெற்றி பெறுவார்கள். தரமான உயர்கல்வி படிக்க வாய்ப்பு கிடைக்கும். கல்வியில் நல்ல முன்னேற்றம் உண்டு. தொழில் முதலீடுகள் செய்யக்கூடாது. சுய தொழில் துவங்க கூடாது. சேமிப்புகளை வளர்த்தலாம். வீடு, இடம், சொத்துக்கள் வாங்கலாம். செல்வ நிலையை உயர்த்தலாம்.

## துலாம்




சுயதொழில் செய்யும் திறமைமிக்க துலாம் ராசி நேயர்களே, புதிய தொழில் துவங்கும் எண்ணம் தோன்றும். கூட்டாளிகள் மீது நம்பிக்கை அதிகரிக்கும். கூட்டுத் தொழில் செய்யும் எண்ணம் அதிகரிக்கும், ஆனால் புதிய தொழில், கூட்டாளிகளால் பாதிப்பு, விரயம் ஏற்படும். அதனால் அனைத்து செயல்களிலும் கவனம் தேவை. பெரிய கடன்கள் ஏற்படும் காலமாகும். பொது சேவையில் ஈடுபாடுவதால் பாதிப்புகளில் இருந்து தப்பிக்க முடியும். குழந்தைகளை பராமரிக்கும் ஆசிரமங்களுக்கு உதவுவதால் தீமை நீங்கி நன்மை நடக்கும். உடன் இருப்பவர் எவரையும் நம்ப கூடாது. எதிரிகளை நீங்களே உணவு கொடுத்து வளர்த்து விடும் காலம், ஆகையால் எவர் எதிரி என்று உங்களுக்கே தெரியாது, ஆகையால் அனைவரிடத்திலும் இடைவெளி கடைபிடிப்பது மிகவும் நன்று. திருமணம் செய்ய உகந்த காலம். திருமணம் சார்ந்த முயற்சிகள் செய்யலாம். விவாகரத்தானவர்களுக்கு மறுமணம் நடக்கவும் வாய்ப்பு உண்டு. வாழ்க்கை துணையை அனுசரித்து செல்வது நல்லது. வாழ்க்கைத்துணை சார்ந்த எதிர்பார்ப்பு, கனவு, கற்பனைகளை குறைத்துக் கொள்வது நலம்.

## விருச்சிகம்



புத்தியை ஆயுதமாக பயன்படுத்தும் விருச்சிக ராசி நேயர்களே, இந்த மே மாதம் வீடு, வாகனம், சொத்து போன்றவைகள் வாங்க வாய்ப்பு வரும். அது பழைய வீடு அல்லது வாகனமாக இருப்பது சிறப்பு. புதிய பொருட்கள், வீடு பாதிப்பை ஏற்படுத்தும். தாயின் உடல்நிலை, மனநிலை பாதிக்கப்படும். உங்கள் சுகம், நிம்மதி கெட வாய்ப்பு உண்டு. தாய் வழி குலதெய்வ வழிபாடு அனைத்து பிரச்சனைகளையும் நீக்கி நிம்மதியை தரும். குழந்தைகள் நல்ல முன்னேற்றம் அடைவார்கள். குழந்தைகளால் நிம்மதி, மகிழ்ச்சி, லாபம் ஏற்படும். பூர்வீகத்தில் மதிப்பு, மரியாதை உயரும். இளம் வயது பெண்களால் அவமானம் ஏற்படலாம் அல்லது திருமணத்தால் பாதிப்பு, அவமானம், தடை, தாமதம் ஏற்படலாம். காதல் திருமணம் நடக்க வாய்ப்பு உண்டு. அந்தக் காதல் திருமணம் பெரிய பாதிப்பை தரலாம்.

## தனுசு




மன்னிக்கும் குணம் கொண்ட தனுசு ராசி நேயர்களே, இந்த மே மாதம் பொற்காலமாகும். உங்கள் வாழ்வில் மிக நன்மையான மாற்றங்கள் ஏற்படும். செல்வ நிலை உயரும். நிம்மதி கிடைக்கும். பெரிய சொத்துக்கள் வாங்க முடியும். லாபங்கள் தேடிவரும், வரும் லாபங்களை அசையா சொத்துக்களில் முதலீடு செய்வது நலம். சுகம் கிடைக்கும். தாயின் உடல்நிலை, மனநிலை சீராக இருக்கும். தாயின் நிலை சமுதாயத்தில் உயரும். திருமணம் நடக்க வாய்ப்புகள் உண்டு. புதிய முயற்சிகளில் சிறு தடை இருந்தாலும் வெற்றி கிடைக்கும். குடும்ப நபர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும். புதிய பொருட்கள் வாங்குவீர்கள். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் அடைவார்கள்.



## மகரம்

மகர ராசி நேயர்களே, புதிய முயற்சிகள் வெற்றி. உங்கள் வார்த்தைகளுக்கு மதிப்பு கிடைக்கும் பிரயாணங்களால் வருமானம் அதிகரிக்கும், சேமிப்பு உயரும். மாணவர்கள் கல்வியில் கடின உழைப்புடன் படிக்கவேண்டும். தடைகள் ஏற்படலாம். மனதில் காதல் ஏற்பட வாய்ப்பு உண்டு, அதனால் வழக்கு, பஞ்சாயத்து போன்றவை ஏற்படும். குடும்ப பஞ்சாயத்துக்கு செல்லக்கூடாது. அடுத்தவர் வீட்டு கணவன், மனைவி பிரச்சனையை சரிசெய்ய சென்றால் கடினமான பாதிப்பு, அவமானம் ஏற்படும். எதிர் பாலின திருமணம் ஆனவர்கள் மீது ஈர்ப்பு ஏற்படும். அது பெரும் கஷ்டத்தை தரும். தியானம் செய்வதன் மூலம் மனதை கட்டுப்படுத்த முடியும். மறுமணம் நடக்க வாய்ப்பு வரும். குலதெய்வ வழிபாடு தீமைகளை நீக்கி நன்மைகள் நடக்க உதவும்.



## கும்பம்

கும்ப ராசி நேயர்களே, பொருளாதார வளர்ச்சி ஏற்படும். புதிய சேமிப்புகளை துவங்கவும், வளர்க்கவும் சிறந்த மாதம். வருமானம் எதிர்பார்த்ததைவிட அதிகமாக கிடைக்கும். லாபங்கள் தேடிவரும். விருப்பங்கள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவார்கள், மூத்த சகோதரர்களால் லாபம் உண்டு. தங்கள் நிலை உயரும் காலம். புதிய கல்வி கற்பதின் மூலமாக தொழில், பொருளாதாரம் உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். திருமணம் நடக்கும் காலம். புதிய உறவுகள் வீட்டுக்குள் வரும் காலம். குழந்தை பாக்கியம் கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை கூடும். தைரியம் அதிகரிக்கும், நினைத்ததை செய்து முடிக்க முடியும். வெளியூர், வெளிமாநிலத்தில் வசிப்பவர்களிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். கருப்பசாமி வழிபாடு உயர்வான நிலைக்கு தங்களை அழைத்துச் செல்லும்.



## மீனம்

இரக்க குணம் கொண்ட மீனராசி நேயர்களே, எதிர்பார்ப்புகளின்றி கடமையை மட்டும் செய்வதின் மூலம் முன்னேற்றம் கிடைக்கும். முழு மனதுடன் செய்யும் செயல்களால் பெரிய லாபம் கிடைக்கும். எதிர்பார்ப்புடன், பேராசையுடன் செய்யும் செயல்களால் அவமானம், கண்டம், பாதிப்பு ஏற்படும். ஆகவே அனைத்து செயல்களிலும் நிதானம் தேவை, பேராசை கூடாது. புதிய நபர்களிடம் இடைவெளி அவசியம் தேவை. எதிர்பாலினத்தாருடன் கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் அமைதியாக சரியாக இருந்தாலும் பிறரால் பிரச்சினைகள் உங்களைத் தேடி வரலாம். தங்கள் தகுதிகளை வளர்த்துக் கொள்ள இந்த மாதத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். புதிய கல்வி கற்கலாம். புதிய நபர்களை வீட்டுக்குள் விடக்கூடாது. தவறான நண்பர்களால் குடும்பத்தில் பாதிப்பு ஏற்படலாம். எனவே எவரையும் நம்ப கூடாது. வியாழக்கிழமைகளில் லட்சுமி வழிபாடு செய்வது அனைத்து துன்பங்களையும் நீக்கி நன்மை புரியும்.

# உங்கள் படைப்புகள் எங்கள் இதழில் இடம் பெற வேண்டுமா?

இனிய சத்வித்யா வாசகர்களே! நமது மாத இதழில் உங்கள் ஆன்மீகக் கட்டுரைகளும் கருத்துகளும் இடம் பெற வேண்டுமா? உங்களுடைய அரிய ஆன்மீக படைப்புகளை எங்களுக்கு அனுப்புங்கள்! தகுதியானவை ஏற்றுக்கொள்ளப்படும் கட்டுரைகள் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

Astroved.com Pvt.Ltd
“சத்வித்யா” ஆன்மீக மாத இதழ்,
SP-75, தொழிற்பேட்டை,
அம்பத்தூர், சென்னை - 600058.

Email id: magazine@astroved.com

